R.R.m: 349-4-19

JL
ณ211,N06T
N06.2.6-7
169115

egistered M—483.

# தமிழகம்.

தஞ்சைத் தமிழ்ச்சங்கத்து மாதாந்தரத் தமிழ்ப்பத்திரிகை.

"தொட்டனைத் தூறு மணற்கேணி மாந்தர்க்குக்
கற்றனைத் தூறு மறிவு."

ால்யூம் 2] 1906வது ஜூன், ஜூலை [ நெ. 6-7

விஷயங்கள். பக்கம்.


1. தமிழகச் செய்தி .... 129, 153.
2. மஹாமஹோபாத்தியாயர் பிரும்மஸ்ரீ உ. வே. சாமிநாதையரவர்கள் மீது .... 131.
3. சாஸ்திரப் பொருண்மாலை. .... 132, 155.
4. வைதீகமாகிய இருமீமாம்ஸா மதங்கள் .... 134, 165.
5. வீரசோழியம் .... 138, 169.
6. பாண்டிநாட்டுப் பழய பௌத்தப்பள்ளிகள் .... 144, 164.
7. தருமந்தலைகாக்கும் .... 145.
8. விசுவநாதம் (முற்றும்) ....
9. இந்தியாவில் உபயோகித்துவரும் தறிகள் .... 159.
10. நவீன அறிவை நாட்டிற்குரிய தாக்கும்வழி.... 175.
11. தொல்காப்பியப் பாயிரவிருத்திப் பரிசோதனை மறுப்பு நிராகரணம் .... 179.



த்திராசிரியர்கள் :— T. இராஜையங்கார், B. A., L. T.
C. S. முத்துஸாமி ஐயர்.



தஞ்சை:
கல்யாணசுந்தரப் முத்திராசாலை.

வருஷ சந்தா ரூ. 1—8—0. | 1906. | தனிப்பிரதி அணா $2\frac{1}{2}$ / பழையபிரதி அணா 3

ங்கப்பூர், பினங்கு முதலான விடங்களுக்கு—ரூ. 2—8—0.


Copyright Registered.

திருச்சிற்றம்பலம்.

தமிழ்நாட்டின்பல பகுதிகளினின்று எனக்கு அனுப்பப்பெறும் பத்திரிகைகளுள்ளே, 'தஞ்சைத்தமிழக' மானது, என்னால் ஆவலுடன் எதிர்பார்க்கப்படுவனவற்றில் ஒன்றாகவுள்ளது. தஞ்சைத் தமிழ்ச்சங்கத்தாரது நன்முயர்ச்சியால் நடைபெறும் இப்பத்திரிகை, தமிழ் வளர்ச்சிக்கு வேண்டப்படும் மொழிபெயர்ப்புக்களும் சரித்திரங்களும் பிற இனிய குறிப்புக்களும் உடையதாய்க் காலத்தே வெளியேறுதலால், என்னைபோலவே தமிழ் மக்கள்பலரும் இதன் நல்வரவுக்கு மகிழ்வார்களென்று நம்புகிறேன். ஜனசமூகத்துக்கு இன்றியமையா விஷயங்களும், காலநிலைமைத் தழுவி எளிய நடையில் இப்பத்திரிகையில் எழுதப்பட்டு வருதல் விரும்பத்தக்கதே. தஞ்சைச்சங்கத்தாரால் தமிழ்வளர்ச்சிக்கண் ஊக்கத்தோடு செய்யப்பெறும் முயற்சிகளில் இப்பத்திரிகை சிறந்ததொன்றாகவும் நாட்டுக்கு நற்பயனளிப்பதாகவும் இருத்தலால், இதன் நடைபேறு முட்டின்றிச் செல்லற்கண்ணதே என் முழுநோக்கமும். பொதுவாக, உயரிய பத்திரிகைகளை விரும்பி யாதரித்து அவற்றின் பயனையடையவல்ல குணம் நம் நாட்டார்க்குள் இன்னும் பரவாமை கண்டு விசனிக்கத்தக்கதாயினும், அக்குணம் நம்மவர்க்குட் பரவுதலே நோக்கமாகக்கொண்டு, தஞ்சைத்தமிழ்ச்சங்கத்தார் உழைத்துவரப் பின்வாங்காரென்றே நம்புகிறேன். இந்நன்முயற்சிக்குத்தக்கபயனை, திருவருள், நாளடைவில் அடைவிக்குமென்பதே என்துணிபு.

தமிழ்ச்சங்கம்,
மதுரை.
1—8—1906

இங்ஙனம்,
பாண்டித்துரை.

## விசுவநாதம்.

நமது பத்திரிகை வாயிலாக "விசுவநாதம்" என்னும் அரும்பெயர்பூண்டு 1905ஹு ஜனவரி முதல் வெளிவந்து கொண்டிருந்த மதுரையை ஆண்ட நாயக்கராஜ வம்சதிலகனும் கீர்த்திப்பிரதாபனுமான விசுவநாதனது சரித்திர சம்பந்தமான நாடகம் அகவற்பாவில், படிப்பவர்களுக் கினிமையைத் தரத்தக்கதாய் எழுதப்பெற்று இச்சஞ்சிகையில் இனிது முடிவுபெற்றது. இதைப் புத்தகரூபமாக வெளியிடவேண்டுமென்று கூறிய பல நண்பர்களின் வேண்டுகோளுக்கிணங்கி ஐந்து அங்கங்களோடு கூடிய இந்நாடகத்தை டெம்மிசைஸ் சுமார் 150 பக்கங்களில் உயர்ந்த காகிதத்தில் அச்சிட்டு வெளியிடக் கருத்துக்கொண்டனம். புத்தகம் 1-க்கு விலை ரூ. 1 அணா 8 ஆகும். வருகிற நவம்பர்மீ 30உக்குள்ளாக இந்த ஆபீஸ் மானேஜருக்கு முன் பணமாக அனுப்பித் தங்கள் பெயரை ரிஜிஸ்தர் செய்துகொள்பவர்களுக்கு ரூ. 1-க்கு கொடுக்கப்படும்.

**C. S.** முத்துஸாமி ஐயர், மானேஜர், தமிழகம்.





சுபமஸ்து.

# தமிழகம்.

வால்யூம் 2. | 1906—ஹு ஜூன்மீ | நம்பர் 6.

## தமிழகச்செய்தி.

### மதுரைத் தமிழ்ச்சங்கம்.

நாம் சென்ற சஞ்சிகையில் அறிவித்ததுபோலவே மேமீ 24உ முதல் மூன்றுநாள் மதுரையில் மதுரைத் தமிழ்ச்சங்கத்தின் ஐந்தாம் வருடோற்சவம் வெகு விமரிசையாகவே நடந்தேறியது. அக்கிராசனம் வகித்த மஹாமஹோபாத்யாயர் பிரும்ம ஸ்ரீ உ. வே. சாமிநாதையரவர்கள் பெருமைகளையாவது அச்சங்கத்தின் தலைவர் ஸ்ரீமான் பாண்டித்துரைசாமித்தேவர் அவர்களின் பெருமைகளையாவது எடுத்துக் கூறுதல் மிகையேயாம். தமிழகத்திற்கே தற்காலத்தில் ஒரு பெருமையைக் கற்பிக்கின்றவர்கள் இவ்விருவருமே.

அநேக புலவர்களும் வித்வான்களும் தமிழபிமானிகளும் தமதுன்மையான ஆர்வப்பெருக்கைக் காட்டிக் கூடியபோது சபையைப்பார்ப்பது அழகாகவே இருந்தது. சபையில் வாசிக்கப்பெற்ற வியாசங்களும் பல பொருண்மைதிபெற்றன. அச்சபையோரால் அப்போது அங்கிகரிக்கப்பட்ட விஷயங்களில் எமக்கு முக்கியமாகத் தோற்றிய மூன்று விஷயங்களை எடுத்துக்

கள்

காட்டுகின்றோம். (1) உச்சிமேற் புலவர்கொள் நச்சினார்க்கினியர் பேரால் மதுரையில் ஓர் தருமம் நடைபெறவேண்டுமென்பது. (2) ராவ்பகதூர் ஸ்ரீமான் நாகோஜிராயரவர்கள் சங்கீத விஷயமாய் எழுதிய "இருபத்திரண்டு சுருதிகள்" சிலப்பதிகார முதலான அரிய தமிழ்நூல்களிலும் எடுத்தாளப்பட்டனவென்று ஸ்ரீமான் S. இராதாகிருஷ்ணையரவர்கள் காட்டியது. (3) சர்வகலா சங்கத்தாரால் நடத்தப்பெறும் மெற்றிக்குலேஷன் பரீக்ஷை, எப். ஏ. அல்லது நடுத்தர பரீக்ஷை, பீ. ஏ. பரீக்ஷை இவைகளில் பழைய விதிப்படியே சுதேசபாஷைப் பயிற்சியைப் பரிசோதித்தலும் வேண்டுமென்று சர்வகலாசங்கத்தாருக்கும், அவசியமானால், கவர்மெண்டாருக்கும் விண்ணப்பம் செய்துகொள்ளவேண்டுமென்பது.

தமிழ்ப்படிப்பினால் காரியமில்லையென்றும் நாகரிகம் சுதேசாபிமானம் நன்னடத்தை முதலியன வளராவென்றும் கூறுபவர் கூற்றுபொய்யெனக் காட்டுவான் வேண்டி ஐயரவர்கள் புறநானூற்றில் ஒரு பாட்டைக்கூறி அதில் ஓர் முதியாள் தன் பிள்ளையான ஒரு ரணவீரன் போர்க்களத்தில் பின்னடைந்தானென்று கேட்டுவருந்தி "அப்பிள்ளைக்குப் பால்கொடுத்தஎனது மார்பினைத்திறுகிவிடுவே"னென்று கனன்றுபோர்க்களமடைந்து அங்ஙன் பிணக்குவியலிலே மறித்துக்கிடந்த தன்னருமைப் பிள்ளையை யெடுத்துப் புலம்பியவரலாற்றைச் சொல்லி யாவரும் வியக்கத் தமிழ்ப்பாஷையின் அருமை பெருமைகளைக் காட்டினார்கள். சுபம்.

இச்சங்கத்தின் பல விரிவான அங்கங்களும் வழக்கம் போலவே செழித்து வருகின்றன.

பத்திராசிரியர்.

## குண்டலகேசி.

வாயுவின் நோக்கியுள மாண்டவய நர்வா
யாயுவின் நோக்கியுள வாக்கையது வேபோற்
தீயவின் நோக்குமியல் சிந்தனையு மில்லாத்
தாயுவின் நோக்கியுள துப்புரவு மெல்லாம். (3)

---

இஃது
# மதுரைத் தமிழ்ச்சங்கத்து
ஐந்தாம்வருடோற்சவ சபைத்தலைவராகிய, மகாமகோபாத்தியாயர்
## ஸ்ரீமான், சாமிநாதையரவர்கள் மீது
இளையான்குடி மாஜி ஸ்பெஷல் மாஜிஸ்திரேட்டும்; மதுரைத் தமிழ்ச்சங்கத்து வித்துவான்களில் ஒருவருமாகிய,
சோதுகுடி, எம். கே. எம். அப்துல்காதிரு ராவுத்தாவர்களால்
இயற்றப்பட்ட
# செய்யுள்.

## ஆசிரியவிருத்தம்.

மருதவளஞ்செறிகுடந்தைமாநகர்க்குமாமகத்தால்வருமாண்பென்னப்
பொருவலிலாத்தமிழ்பயிற்றிவக்கின்னுலுஞ்சேர்த்திபொருந்துந்தன்மை
கருதிமநாமகோபாத்தியாயரெனும்பட்டமிற்குக்கவினத்தந்தார்
திருவளர்மன்னவர்சாமிநாதவள்ளானின்போலச்சிறந்தார்யாரே. (1)

என்னதானங்களினுமன்னதானஞ்சிறந்ததென்பார்பல்லோ
ரன்னதானத்தினிலுமரியதுவித்தியாதானமதனைநாளு
நன்னர்செய்நீதோன்றுநகர்க்குத்தமதானப்பெயரைநன்காராய்ந்து
சொன்னவர்தம்மதிவலிதாஞ்சாமிநாதப்பெயர்கொள்சொல்வல்லோனே

மன்னரெலாம்விரும்புபுகழுறும்பாண்டித்துரைமாலும்வாணரெல்லா
முன்னுபுகழுறுஞ்சாமிநாதகவிசேகரனுமொருங்கண்புற்றுத்
தன்னுநித்யநைமித்யசபைத்தலைமையுறச்சங்கந்தாய்க்குமின்னைப்
பொன்னுலகத்தவாறிந்தாற்றம்வாழ்வையொருநாளும்பொருட்பண்ணு
[ரே. (3

தன்னையடைந்தவர்பிழையெத்தனைசெயினும்பொருத்தருளுத்தமதயாள
முன்னவன் பாண்டித்துரையும் புலவர்களுமின்பநனிமுயங்கக் கூடற்
றுன்னியநாற்றமிழ்ச்சங்கத்தைந்தகவைக்கொண்டாட்டத் தழனிக்கண்
மன்னுசபாநாயகனுஞ் சாமிநாதப்பெரியோன் வாழ்கமாதோ. [னே (4

பஞ்சமாகாவியங்கண் மிகமலிந்துநாடெங்கும் பரவச்செய்த
விஞ்சுபுகழுறுஞ் சாமிநாத வித்வசேகரனும் வேந்தர்வேந்தா
மஞ்சுநிகர் கொடைப்பாண்டித்துரை மாலுமுயர்தமிழும் வாணரியாரு
மெஞ்சுதலில்லாவிந்தப்பெருஞ்சபையுநாடோறும்வாழ்ந்திலங்கமாரே,

# சாஸ்திரப்பொருண்மாலை.

## 12. துளசி. ‡

துளசிச்செடி ஒரு பெரிய ஔஷதம். விஷக்காற்று சம்பந்தமான ஜுரத்துக்கு மருந்தாக அதன் இலைகளைப்பிழிந்து கஷாயம் கொடுப்பதுண்டு. மேலும் இது கொசுகுகளை வெருட்டியடித்து நம்மைக் காக்கிறது. பம்பாய் நகரத்தில் முதன் முதல் "விக்டோரியா கார்டன்ஸ்" என்ற தோட்டத்தைநிருமித்த வேளையில் வேலைக்காரர்களுக்கு விஷஜுரமும் கொசுகின் தொந்தரவுமுண்டாகி மிகுந்த கஷ்டம் நேர்ந்தது. அப்போது அந்தத் தோட்டத்தில் மானேஜராக விருந்தஒரு இந்து மதஸ்தர் தோட்டக்காலில் துளசிச்செடியை வளர்த்து விடும்படி சொன்னார் அப்படிச் செய்தவுடனே அந்தத் தோட்டத்தின் அருகாமையில் விஷஜுரத்தின் வாடையும் இல்லாமற் போயிற்று.

துளசியிலிருந்து உண்டாகும் தைலம் பசுமையான மஞ்சள் நிறமாக விருக்கிறது. ஜலத்தைக் காட்டிலும் இலேசாயிருக்கிறது. திறந்து வைத்திருந்தால் ஆவியாய்ப் போய்விடுகிறது. கொஞ்ச நாள் தனியாய் வைத்திருந்தால் கட்டிதட்டிப்போய்ச் சூடத்தைப் போலாய்விடுகிறது. துளசி விதைகளும் மருந்தாக உபயோகப்படுகின்றன. இளக்கப்படுத்தவும் உத்தீபனஞ் செய்யவும் ஜலவிரேசனத்தைச் சரிப்படுத்தவும் அவைகள் உபயோகமாகின்றன. முறை ஜுரங்களுக்கு அவைகள் விடுங்காலத்தில் துளசியிலைச் சாற்றை இஞ்சி, மிளகு இவைகளோடு சேர்த்துக் கொடுப்பது வழக்கம். உடம்பின் மேல் போட்டுத்தேய்த்தால் ஒருவித காரமான வாசனை உண்டாகின்றது.

## 13. வேடியுப்புக்காரம் ஓர் எரு †

கோதுமைப் பயிருக்கு உப்புவாயு எப்படியாவது சம்பந்தப்படவேண்டும். உப்புவாயு கலந்த வெடியுப்புக்காரம் அதற்கின்றியமையாத எருவாகும். கொஞ்சகாலத்திற்குமுன் இது விஷயமாய் சாஸ்திர நிபுணர்களுக்கு ஒரு பெருங் கிலியுண்டாயிற்று. அதுயாதெனில், நாகரிகம் விருத்தியடையவடைய

‡ இந்த காலேஜ் பத்திரிகை வால்யூம் 3, பக்கம் 158, 183.

† இந்த காலேஜ் பத்திரிகை, வால்யூம் 6, பக்கம் 132.



தான்யபக்ஷிணிகளான ஜனங்களின் தொகையும் விருத்தியடைகின்றது. இதை யோர் கணக்கிட்டுப் பார்க்குமளவில், சாகுபடிக்குக் கொண்டுவரக்கூடிய யெல்லா நிலங்களையும் பயிரிட்டாலும் ஜனங்களுக்குப்போதுமான அவ்வளவு கோதுமை சுமார் 24 வருஷங்களுக்குப்பிந்தி, அதாவது, சுமார் 1930 ௵த்தில், கிடைக்குமென்று நம்புகிறதற்கில்லை. ஆதலால் அப்போது பெரும் பஞ்சம் உண்டாகும் என்று சாஸ்திரஞ்ஞர்கள் கூறிப்பயமுறுத்தினார்கள். கோதுமைப் பயிரைச் செழிப்பிக்க வேண்டுமென்று சிலர் கருதி அப்பயிருக்கு வெடியுப்புக்காரத்தை எருவாகச் சேர்த்துக்கொண்டு வருகிறார்கள். அப்பயிருக்கு உப்புவாயு உணவேஎன்றாலும் ஆகாயத்திலுள்ள உப்புவாயுவைக்கிரகித்துக்கொள்ள அதற்குச் சக்தியில்லை. காரப்பொருள்களில் கலந்திருக்கிற உப்புவாயுவை யென்றால் சீக்கிரம் இலகுவாய் உட்கொள்ளுகின்றது. தென்னமரிக்கா கண்டத்தில் ச்சிலி என்ற தேசத்தில் வெடியுப்புக்காரம் இயற்கையாகவே அகப்படுகிறது. அதனை விலைகொடுத்து வாங்கி எருவிடுவதென்றால் தாளுவதில்லை. அதன் விலையும் டன் ஒன்றுக்கு இருநூறு ரூபாய். அப்படியே வாங்குவதென்றாலும் எத்தனை நாளைக்கு வாங்கலாம்? எடுக்க வெடுக்கக் குறைவுபடாத பொக்கிஷமோ? இன்னம் சிலநாளில் ச்சிலிதேசத்தில் இந்தக் காரவுப்பும் குறைந்து போகுமாம்! இவ்விதமான பயம் கொஞ்சகாலத்திற்குமுன் சாஸ்திரப்பொருள் உலகில் உலாவிவந்தது.

ஆயினும் இப்பயத்தை போக்கடித்தவர் மிஸ்டர் பர்க்லாண்ட் என்பவர். இவர் நார்வே தேசத்துக் கைத்தொழிலாளர் சங்கத்தில் ஓர் பாகஸ்தர். கிரிஸ்டியானா நகரத்துக் கல்லூரியில் பௌதிக சாஸ்திரம் கற்பிக்கும் பண்டிதர். இவர் தன் யூகத்தினால் அறிந்து வெளியாக்கிய சில உண்மைகள் உள்ளன. அவைகளைவேறொரு சமயம் கூறுதல் தகுதியாகும். இச்சமயத்தில் நாம் கூறவேண்டியது என்னவென்றால், மின்சாரவோட்டத்தினால் உண்டாகும் தீப்பொறிகளை அவ்வாறு அவைகள் தோற்றாமல் விலக்கி ஒரே ஜோதிமயமாக அவைகளைத் தோற்றும்படிசெய்து விடலாமென்பதே. அவ்வாறு உண்டாகும் மின்சாரஜோதியைப் புகட்டிச் சாமர்த்தியமாய் ஆகாயத்திலுள்ள உப்புவாயுவைத்திரட்டிக் காரமாக்கிவிடலாமென்றும் அவ்வாறு செய்தல் பிரமாதமன்றென்றும் விலை சரசமென்றும் நிரூபிக்கப்

பட்டிருக்கின்றன். அவ்வாறு செய்யப்பட்ட காரப்பொருளும் கோதுமைவிளைநிலனின் பலனை நாலுபங்கு அதிகமாக்கிவிடுமாம்.

மேலும் ஆகாயத்திலுள்ள உப்புவாயுவையெல்லாம் இப்படித் திரட்டி யுருட்டிக் கோதுமைக்குணவாக்கொடுத்துவிட்டால்எங்கே சுகாதாரத்திற்குக் கேடுண்டாகுமோ என்றோர் சங்கை நிகழலாம்! ஆயினும் ஸர் உவில்லியம் ராம்ஸே என்ற மற்றோர் சாஸ்திரி இந்த சங்கையையும் ஒழித்துவிட்டார். ஆகாயத்தில் ஒரு சதுரவடியில் நிற்கின்ற உப்புவாயு உலகத்திலுள்ள எல்லா ஜனங்களுக்கும் அறுபதுவருஷகாலத்திற்கு வேண்டிய தானியத்திற்கு உணவாகும் காரத்தைத் தரக்கூடிய சக்தியுள்ளதென்று கூறுகிறார். நமக்கு விசாரமும் ஒழிந்தது.

(இன்னும் வரும்.)

பத்திராசிரியர்.

---

# வைதீகமாகிய இருமீமாம்ஸா மதங்கள்.

(102-ம் பக்கத்தொடர்ச்சி.)

மேற்கூறிய உதாரணத்தைப்போலவே சஹகமனஞ்செய்தல், பிறர்க்குத்தீங்குண்டாக வெண்ணியாகஞ்செய்தல் முதலிய பல விஷயங்கள் வெகு கூர்மையான புத்தியுடனும், அதிசாமர்த்தியத்துடனும், எடுத்தாளப்படுகின்றன. மீமாம்ஸையின்படி ஒரு சரியான அதிகரணத்துக்கு ஐந்து அங்கங்களிருக்கவேண்டும். அவையாவன; (1) சங்கதி, (2) சம்சயம், (3) பூர்வபட்சம், (4) சித்தாந்தம், (5) அவதாரிகை; என்பன. ஜைமினி சூத்திரங்களில் சாதாரணமாய் இவ்வைந்து அங்கங்களும் இருப்பதில்லை. தொக்கிருக்கிறது என்று அறியக்கூடிய விடங்களில் சிலவற்றை விட்டுவிடுவது வழக்கம். மீமாம்ஸையின் விசாரமார்க்கம் தர்மத்தின் (சட்டத்தின்) விசாரமார்க்கம்போன்றது. மீமாம்ஸையில் வாதிக்கும் வழியும் தர்மத்தில் (சட்டத்தில்) வாதிக்கும் வழியும் ஒன்றே என்று கோல்புரூக்துரை சொல்லுகிறார். "ஒவ்வொரு விஷயத்தையும் பரிக்ஷித்து பொதுவான நியாயங்களின்பேரில் தீர்மானிக்கப்படுகின்றது. இவ்வாறு தீர்மான விஷயங்களினின்றும் (பொது) விதிகளையடையலாம். இவ்வாறு அடையும் விதிகளைச் சீராய்த்தொகுப்பின் அதுவே தர்மசாஸ்திரம் (சட்டம்) என்னப்படும். இதுவேதான் மீமாஸ்ஸையிலும் செய்யப்பட்டிருக்கிறது."



பூர்வ மீமாம்ஸை முழுமையிலும் கூறப்பட்ட விஷயத்தை (மேல்விட்ட விடத்திலிருந்து) ஆரம்பிப்போம். ஒரு பெரிய யாகத்துக்குத் தேவையான வாஜனையர் பதினெழுவர். அவராவார்:—ஹோதா ஒருவனும், பிறர் பதினறுவரும். வெகு ஆடம்பரமாயில்லாத சிறிய யாகங்கள் செய்யும்பொழுது நால்வரே போதுமானவர்கள்.

யாகங்களின் (கௌரவத்திற்கு) தக்கபடியான அளவு மிருகங்கள் கொல்லப்படுகின்றன. அசுவமேதத்தில் சகல சாதிகளடங்கிய 609 ஜந்துக்களைக் கொல்லவேண்டும். அவற்றுள் பழகின மிருகங்களும், காட்டுமிருகங்களும், நிலத்தின் மீதுள்ளனவும், நீரிலுள்ளனவும், நடப்பனவும், நீந்துவனவும், தவழ்வனவுமானவை யடங்கியுள்ளன.

மீமாம்ஸையில் முக்கியமாய்ப் புகட்டுவது கர்மம். முதலில் கர்மம் இன்னதென்பதைச் சொல்லிக்கொண்டே ஜைமினி மீமாம்ஸையை ஆரம்பிக்கிறார். "இப்பொழுது கர்மத்தின் விசாரம் செய்யத்தொடங்குவோம். இன்னபடி செய்யவேண்டுமென்று கட்டளையிட்டபடி நடத்தலே கர்மம். இதன் நியாயத்தை யாராயவேண்டும்," என்று ஆரம்பிக்கிறார். ஆயினும் இவரபிப்பிராயப்படி கர்மம் வெகு வைதீகமாதிரியானதும், வேதத்தில் சொல்லிய யாகங்களையும், சடங்குகளையும் செய்வதுமே என்பது. ஆதலால் பூர்வ மீமாம்ஸையென்பது வைதீகச்சடங்குகளைக் செய்யும்படி குறிக்கும் சாஸ்திரம் என்னலாம்.

வேதத்தில் குறிக்கும் யாகமும் மற்றச்சடங்குகளும் செய்வதவசியம் என்று வற்புறுத்தப்புகுந்த ஜைமினி வேதத்தின் கொள்கைகளும், நம்பிக்கைகளும், இன்னவையென்று சொல்ல மறந்துவிட்டார். "யாரை உத்தேசித்துச் செய்யவேண்டுமோ அவரை மறந்து கர்மத்தை வற்புறுத்துகிறார் ஜைமினி" என்று தம் "ஹிந்துமத சம்பாஷணை" என்னும் கிரந்தத்தில் டாக்டர் பானர்ஜீ கூறுகிறார். வேதம் அநாதி, சப்தம் அல்லது (ஆப்த)

வாக்கியம் என்பதை யறிவிக்க முயல்கிறவர் இதை மொழிந்த வரும், இதற்கேற்ற அநாதியானவருமாகிய ஸர்வஞ்ஞரைக்கூறாது விட்டார். பிராமணத்தில் சொல்லியிருக்கும் யாகங்களைச் செய்தல் அவசியம் என்கிறவர் உபநிஷதத்தில் கூறப்படும் பரமாத்துமாவைக் குறித்து ஒன்றுஞ்சொல்லவில்லை. ஆதலால் ஜைமினிமதம் வைதிகமாயிருப்பினும், நாஸ்திகம் அல்லது சார்வாகம் என்று சிற்சில புராணங்களி லிகழப்படுகிறது. பகவான் ஒருவருளர் என்று ஜைமினியின் மதத்தால் கொள்ள இடமில்லை என்று சங்கராசாரியாரும் ஒப்புக்கொள்ளுகிறார்.

ஆதலால்தான் இதற்கு அனுபந்தமாய் இன்னமொருமதம் வேண்டி, உத்தரமீமாம்ஸை அல்லது வேதாந்தம் என்பது பெறப் பட்டது. இவ்வேதாந்தத்தில்தான், பரப்பிரம்மம் ,ப்ரமாத்மா, ஸர்வாந்தரயாமியைப்பற்றிச் சொல்லுகிறது. பூர்வமீமாம்ஸை சடங்குகளையும்,யாகங்களையும்பற்றிச்சொல்லுகிறது பிராமணங்களிலிருந்து எப்படிபூர்வமீமாம்ஸை உற்பவித்ததோ அப்படியே உத்தரமீமாம்ஸை உபநிஷதத்தினின்றும் உற்பவித்தது. வேதாந்தத்தின் முதல் சூத்திரத்திலேயேகர்மம் அல்லது செய்கையென்னுமிடத்து பிரமம் அல்லது கடவுள் என்னும் பதத்தை பிரயோகப்படுத்தியிருக்கிறது. இரண்டு மீமாம்ஸைகளையொன்றாய்க் கொள்ளின் வைதிகம் இந்துமதமாகிறது. இந்துமதத்திற்சடங்குகளும் யாகங்களும் அதன் தேவஞானமும் அடங்கியுள்ளது. வேதத்தில் கூறியுள்ள பரமாத்மாவையறியாதும் வேதத்துள் குறித்திருக்கும் சடங்குகளைச்செய்யாது மிருக்கும் பௌத்தமிண்டர்களுக்கு இவ்விருமதமும் சேர்ந்து ஓர் கண்டனமாகின்றது. இவ்விருமதங்களே நாஸ்திக சாங்கியத்துக்கும் கண்டனமாய் ஏற்படுகிறது. இவ்விரண்டுமே இக்காலத்து வழங்கும் இந்து மதத்தின் கொள்கைகளுக்கு ஆதாரமாகின்றன.

வேதங்கள் தொகுத்தகாலத்துக்கு 1000 வருஷங்களுக்கப்பால் தொகுக்கப்பட்ட சாரீரகமீமாம்ஸ சூத்திரங்கள் என்னப்பட்ட பிரம்மசூத்திரங்களைச்செய்தவர் பாதராயணர் என்றும், இவரே வேதந்தொகுத்த வேதவியாசராவார் என்றும் கூறப்படுகிறார்! பிரம்மசூத்திரத்தில் கபில மதமும், பதஞ்சலியின் யோக மதமும், கௌதம நியாயத்தின் அநுபந்தமான (காணாத) பரமாணுவாதமும் குறிக்கப்படுகின்றன. (இவையன்றி) ஜைமினியையும், ஜைன, பௌத்த, பாசுபதவாதிகளையும்பற்றிக்குறிக்கிறது.



ஆதலால் மற்ற ஆறுமதசித்தாந்தங்களிலும் பிரம்மசூத்திரமே கடைசியாயியற்றப்பட்டது என்பதற்கு ஐயமில்லை.

ஐந்து அங்கங்களையுடைய பூர்வ மீமாம்ஸையின் அதிகரணத்தையும் நியாயத்தின் அவயவத்தையும் வரிந்துகொளளுவதுடன் பின்னதை அரிஸ்டாடலின் அவயவம்போல மூன்றங்கங்களையுடைத்தாக்கி (உத்தர மீமாம்ஸையில்) சீர்திருத்திக்கொள்ளப் பட்டிருக்கிறது. இச் சீர்திருத்தம் கிரேக்கர்களுடன் சேர்க்கையால், (இந்துக்கள்) தெரிந்துகொண்டிருக்கவேண்டுமென்று கோல்புருக்துரை நினைக்கிறார்.

பாதராயணருடைய சாரீரக மீமாம்ஸையாகிய பிரமசூத்திரங்கள் நான்கு அத்தியாயங்களாகப் பிறிக்கப்பட்டிருக்கின்றன. இவை ஒவ்வொன்றும் பின்னும் நான்கு பாதங்களாலாயிருக்கின்றன. இந்நூலின் விஷயத்தை விவரிக்கின் பெருகுமாதலின், கோல்புருக்துரையவர்களியற்றியிருக்கும் சங்கிரஹத்தினின்றும் ஆங்காங்கு முக்கியமானவற்றை பொறுக்கித் தொகுப்போம். இவற்றை முழுதும் நன்றாய் அறிய விரும்புவோரை மேற்படி துரையவர்கள் சங்கிரகத்தை வாசிக்கும்படி கோருகிறோம்.

பூர்வமீமாம்ஸையைப்போல உத்தரமீமாம்ஸையும் ஆரம்பிக்கையிலேயேதான் கூறப்புகும் விஷயமின்னதென்று குறிக்கிறது. (இப்படிச் செய்வதில்) தர்மம் அல்லதுகர்மம் என்னுமிடத்து பிரமம் அல்லது கடவுள் என்னும் பதத்தை பிரயோகிக்கிறது. ஜகத்துக்குக்காரணமாயிருப்பது பிருகிருதி என்னும் சாங்கியமதத்தை (வேதாந்தசூத்திர) ஆசிரியர் நிராகரித்து ஆதிகாரணமானவர் அறிவுள்ளவராயும் ஞானவானாயும் இருக்கும் பரமாத்மா என்பதை ஊர்ஜிதப்படுத்துகிறார். இப்பரமாத்துமாவே ஜகத்துக்கு முதற்காரணமும் துணைக்காரணமுமானவர். இவரையே தியானிக்கவேண்டும். இவரை இடைவிடாது நினைத்தலாலேயே முக்தியடையலாம் என்று தெரிவிக்கிறார்.

(இன்னும் வரும்.)

து. அ. கோபிநாதராவ், M. A.

# தமிழ் நூல்களும் நூலாசிரியர்களும்.

## 9. வீரசோழியம்.

வீரசோழியம் என்னும் இத்தமிழிலக்கணம் வீரசோழன் அல்லது வீரராசேந்திரன் என்னும் சோழராஜாவின் காலத்து புத்தமித்திரனென்னும் ஸாஹூரக வையாகரணியால் இயற்றப்பட்டு, பெருந்தேவனார் என்பவரால் உரைபெற்றிருக்கின்றது. வீரசோழன் அல்லது வீரராசேந்திரன் என்பவன் கி. பி. 1062-63 வருஷத்தில் பட்டந்தரித்தவன். இவன்காலத்தே இவரிருந்தார் என்னும் துணிவு,

"* * * * * * எல்லாவுலகு
மேவிய வெண்குடைச் செம்பியன் வீரரா சேந்திரன்றன்
நாவியல் செந்தமிட் சொல்லின் மொழிமுத னன்னுதலே"

என்பதனாலும், "மின்னார் வடிவேற்கை வீரரா சேந்திரன்றன், பொன்னார் பதயுகளம் போற்றுது—கன்னாடர், புன்கூ டல்சங்க மத்தினெடும் போருடைந்தார், நன்கூ டல்சங்க மத்து" என்பதனாலும்,

மரத்தினை யோரெழுத்துச் சொல்லு மற்றொன்று
நிரப்பிட நீரிற்பூ வொன்று—நிரப்பிய
வேறொ ரெழுத்தய்க்க வீரரா சேந்திரநாட்
டாறு மெனவுரைக்க லாம்.

என்பதனாலும், இந்நூலாசிரியர் இம்மன்னன் காலத்திலிருந்து இவன் புகழைத் தன்னிலக்கணத்து இடையிடையே விரவிவர இயற்றினர் என்று பெறப்படுகின்றது.

இவ்வீரராசேந்திரன் கி. பி. 1062—63ல் இருந்தவனே என்பதற்கு மேற்காட்டிய

'மின்னார்வடிவேற்கை * * ' என்னும்கவியும்,

'துற்றுற்றன்றி வெம்போர்செய்த விற்கைப்பன்மன்
முன்போடவோர்
தத்திற்றன்று வன்பாய்பரி யுய்துத்தன்மை
கொண்டோடிய—
வெற்றுச்செம்பி யன்பார்புகழ் கொற்கைக் கண்டன்
வன்பாரதம்



வெற்புக்கொண்டு திண்போர்புரி கொப்பத்தன்
றெதிர்ந்தோர்வெறு—
கொற்றத்தொங்கல் சிங்காசன மொற்றைச்சங்கு
வெண்சாய்மரை
குத்துப்பந்தர் முன்பாவிய முத்துப் பந்திமுன்
றுன்மகி—
ழொற்றைப்பெண்டிர் பண்டாரமொ டொற்றைத்தன்
பெருஞ்சேனையு
மிட்டிட்டன்றுடைந் தான்வசைப்பட்டுக்கண்ட
வங்காரனே.'

ன்னும் கவியுமே சான்றாகும். சோழவம்சத்து அரசர் ஒவ்வொருவரும் தங்கள் சாசனங்களுக்கு முதலில் தங்கள் மெய்க்ர்த்தி (1) யைப்பாடியே பின்பு சாதன மெழுதத்தொடங்குவது ழக்கம். இம்மெய்க்கீர்த்திகள் பெரும்பான்மையும் இவ்வரர்கள் தாந்தாமடைந்த வெற்றிகளையும், அவ்வெற்றியடைந்த டத்தையும், வெற்றியடைந்த காலத்து மாற்றரசரிடமிருந்து டித்தபொருள்களையும் பற்றி விவரிக்கும். அம்மெய்கீர்த்திளில் இவ்வீரராசேந்திரன் மெய்கீர்த்திகள் அடியில் வருமாறு ள :—

I. வீரமேதுணையாகவும் தியாகமேயணியாகவும் செங்கோலாச்சிக் கருங்கலிகடிந்தென்—

னனைத்தலைகொண்டு சேரலனைத் திரைகொண்டு சிங்களதசம் அடிப்படுத்து வெங்களத்தொறுவமல்—

லனை ஐய்மடி மென்கொண்டு வேங்கைநாடு மீட்டுக்காண்டு தன்னுடன் பிறந்த முன்னவர் விரதமுடி—

த்துவஙடிபணிந்த சளுக்கி விஜெயாதித்தர்க்கு மண்லமருளிக்கழலடி பணிந்த மன்னர்க்குக் கடாரம் எறிந்துடுத்த—

ருளிசோமீஸ்ரன் கன்னரதேசம் கைவிடத்துரத்திஙடி வணங்கியே சளுக்கிவிக்கிரமாதித்தனை எண்டிசை—

நிகழ்கண்டிகை சூட்டி இரட்டபாடி ஏழரை இலக்கம் எறிந்து குடுத்தருளி விஜெயஸிங்காசனத்திலகழுமுதடையா—

1. "சீர்நான் காதியிரண்டடித்தொடையாய், வேந்தன் மெய்ப்புகழெல்லாஞ் சொல்லியுந்தவன் வரலாறு சொல்லியு, மவளுடன் வாழ்கெனச் சொல்லியு மற்றவ, வியற்பெயர்ன்னர்ச் சிறக்கயாண்டெனத், திறப்பட வுரைப்பது சீர்மெய்க் கீர்த்தி." என்பது பன்னிருட்டியல்,

ளோடும் வீற்றிருந்தருளிய கோவிராஜகேசரி வன்மரான உடையார் ஸ்ரீவீரராஜேந்த்ரதேவற்கு யாண்டு ஏழாவது—

முரட்சளுக்கியை முடக்காற்றில் முதுகுகண்டு முனிவாறி இரட்ட ராஜகுலகாலன் இகல் வீரராஜேந்த்ரன் புயங்கொண்டு பொது நீக்கி ஆள்கிற * * * எனவும்.

II. வீரமே துணையாகவுந்தியாகமே யணியாகவுஞ் செங்கோலோச்சிக் கருங்கலி கடிந்துகூடல் சங்கமத்தாஹவமல்லனை யஞ்சுவித்து விக்கலனையும் சிங்களனையும் உடைபுறங்கண்டு மற்றவன் மஹாதேவியரோடு வஸ்துவாஹநங்கைக்கொண்டு இரண்டாம் விசையிலுங்குறித்த களத்தாஹவமல்லனை அஞ்சுவித்து வேங்கைநாடு மீட்டுக்கொண்டு தன்னுடன் பிறந்த முன்னவர் விரதமுடித்து மூன்றும் விசையிலும் சோமீஸ்வரன் கட்டிய கண்டிகை அவிழ்ப்பதன் முன்னங்கம்பிலி சுட்டு கரடிகல்லில் ஜயஸ்தம்பம் நாட்டி தேவநாதன் முதல் மாசாமந்தரைச் சக்கரக் கோட்டத்துத் துரத்தியவர்களுரிய தாரம் பிடித்துக்கொண்டு கன்னகுச்சி மீட்டு எல்லை கடந்து நிலையிட்டு விஜெயவிஹாவனத்து உலகமுழுதுடையாளோடும் வீற்றிருந்தருளிய கோராஜகேசரிபன்மரான உடையார் ஸ்ரீவீரராசேந்திரதேவற்கு யாண்டு ௬ ஆவது— எனவும்,

III. "திருவளர் திரள் புயத்திருநிலவலையந்தன் மணிப்பூணெனத் தங்கிப் பன்மணிக்கொற்ற வெண்குடை நிழற் குவலையத்துயிர்களைப்பெற்றதாயிலும் பெர மற்றுள்ளவறை கழலரசர் தன்னடியினிலொதுங்க வுறைபிலத்துடைய கலியதுவொதுங்க முறைமையி லிரும்பெறல் தமையனை ஆளவந்தானை யிரும்புவிபுகழ இராஜராஜனென்றொளிர் மணிமுடிசூட்டி தன்திருமைந்தனாகிய கங்கைகொண்டசொழனை யெழுயரியானைச் சேனைச்சோழபாண்டியனென்றீண்டுயர் மணிமுடிப்பாண்டி மண்டலங்குடுத்தருளி வாட்கை முடிகொண்ட கதிர்வேல் முடிகொண்ட சோழனைச் சுந்தரசோழனெனச்சுடர் முடிசூட்டி யந்தமில் பெருஞ்சிறப்பருளித் தன்கிளைவிருலகத்தவற்குரியவகலிடம் வேறுவேறருளி இகல்வினை விருதொடு மலைக்கும் விக்கலன்றன்னோடும் வெஞ்சிலைத்தடக்கை மாசாமந்தரைக் கங்கபாடிக் களத்திடைநின்று துங்கபத்திரை புகத்துரந்து அங்கவர் வேங்கைநாட்டிடை மீண்டவர் விட்ட தாங்கரும் பெருவலித்தண்டு கெடத்தாக்கி மாதண்ட நாயக்கன்



சாமுண்டராஜனைச் சென்றவன் சிரத்தினையறுத்து மற்றவனுடை மகளாகிய விருகயத்தேவி நாகலையென்னும் தொகையம்சாய மூகத்தொடு மூக்கு வேறுக்கிபகைத்தெதிர் மூன்றும்விசையினு மென்றெதிர் பொருது பரிபவந்தீர்வதெனக்கருதி பொருத புன கூடல்சங்கமத்தாகவமல்லன் மக்களாகிய விக்கலன் சிங்கணனெ றிவர் தம்மொடும் மெண்ணில சாமந்தரைவென்றடுதாக்கி மு விட்டுத் தன்றுணைமன்னருந்தானும் பின்னடுத்திருந்து வடகட லென்ன வகுத்து வந்தானையை கடகளிறொன்றால் கலக்கியுட ப்ரிக்கோசலச்சிங்கணக்கொடிப்படை மன்னரைத்தூசி வெங் களிற்றோடுந் துணித்து கேசவதண்ட நாயக்கன் கெத்தரசன் திண்டிறல் மாரயன் திறற்போத்தரயனிரெச்சயன் செய்ய பொ கோதை மூவேத்தியென்றூர் தடுத்துப் பிலனெக சாமந்தரை சின்னபின்னஞ்செய்து பின்னை முதலியாகிய மதுவணகோட விரித்த தலையோடு விக்கலனோடைச் செருக்கெழிலழிந்து சிங்கண னோடு அண்ணலர்முதலிநரனைவரும் அமர்ப்போர்ப்பண்ணின பகடிழிந்தோட னண்ணிய ஆகவமல்லனுமவற்கு முன்னோட தன் வேகவெங்களிற்றினை விலக்கி வாகைகொண்டங்கவர் தாரமு மவர் குலதனமும் சங்குந் தொங்கலுந் தாரையும் பேரியும் மே டம்பமும் வெண்சாமரையும் காக்கைக்கொடியும் மகரதோரண மும் புட்பகப்பிடி போர்களிற்றீட்டமும் பாய்பரித்தொகையோ டும் பறித்து செய்யொளிர் விசைய மணிமகுடம் மிசையொடுஞ் சூடி திசைதொறும் சினப்புலி செலுத்திக் குசை கொளுத்தும் புரவிப்பொத்தப்பி வேந்தனை வாரனை வன்கிழற் கேரளன்றன்னை ஜனநாதன்றம்பியைப் போர்களத் தலங்கல்சூழ்ப்பசுந்தலையரிந்து பொலங்கழல்த்தென்னனை ஸ்ரீவல்லபன் மகன் சிறுவனை மின்ன வில் மணிமுடி வீரகேசரியை கதகடகளிற்றாலுதைத்திட்டு மத கொடு செயித்து வரப்பாகாச்செங்கோல்செலுத்தி வேதநீதியை விளக்கி மீதுயர் வீரத்தனிக்கொடித்தியாகக் கொடியோடும் எற் பவர் வருகென்று நிற்ப போர்த்தொழி லரிணையிலெய்தி அரசு வீற்றிருந்து செய்த வீற்றிருந்த மெவருமனுநெறிவிளக்கிய கொ இராஜகேசரி பன்மரான உடையார் ஸ்ரீ வீரராஜேந்த்ரதே வற்கு * * " எனவும்.

இவ்வரசன் நான்காமாண்டுவரை நிகழ்ந்தது கூடல் சங்கமத்துச்சண்டையொன்றுமே. ஐந்தாமாண்டில் வேங்கை நாட்

டை மீட்டுத் தம்முடன் பிறந்தவர்களாகிய ராஜேந்திர தேவன், ராஜாயிராஜன் கொண்ட விரதத்தை முடித்தான். இவன் போர்களில் முக்கியமானவை சளுக்கியர்களோடு செய்யப்பட்டன. இவன் எதிரரசர் ஆறவமல்லனும் அவன் மக்கள் விக்கிரமாதித்தனும் ஜயசிம்மனுமே. விக்கிரமாதித்தனை விக்கி அல்லது விக்கலன் என்றும் ஜயசிம்மனை சிங்கணனென்றும் சாதனங்களில் கூறுவது வழக்கம். இவ்வீரராசேந்திரன் சளுக்கியரை ஐம்மடி "மென்கொண்டு"[2] மூன்றுந்தடவையில் இவர்கள் ராஜதானியாகிய கம்பிலியைச் சுட்டு துங்கபத்திரைக்கரையில் கரடிக்கல்லென்னுமிடத்துத் தன் ஜயஸ்தம்பநாட்டினன். இச்சோழவரசன் பெண்சாதியின் பெயர் அருமொழி நங்கை. இவளைத்தான் சாதனங்களில் உலகமுழுதுடையாளென்று கூறப்படும்.

மூன்றும் மெய்க்கீர்த்தியில் இவ்வரசன் போர்த்தொழில்களை பரக்கக்கூறியிருத்தலின் இவ்வரசனைப்பற்றி விரித்து எழுதுவது அனாவசியம் என்று விடுத்தோம்.

இவ்விலக்கணம் ஏனையவற்றைப்போலன்றி தென்னாட்டுச் சரித்திரத்திற்குத் தன்னாலியன்ற உதவியை அளிக்கின்றது. அன்றியும் இதனுடைய காலம் நிச்சயமாய் ஏற்பட்டிருத்தலால் இதில் மேற்கோளாயெடுத்தாண்ட நூல்கள் இந்நூலின் முந்தியவையென்றாகிலும் ஏற்படுகின்றன. இதில் காணப்படாச் சில பெருங்காவியங்கள் ஒருக்கால் அக்காலத்திலிலவோ என்று ஐயுற்று மற்றும் பலகாரணங்களால் நடைபெற்றுவந்ததன்று, என்று ஊகிக்கலாகின்றது. இன்னனைய பேருதவியைக் கொடுத்தலால் இவ்விலக்கணத்தினுட் புகுந்து இதில் பொதிந்துகிடக்கும் நுண்ணிய விஷயங்களைப்பற்றி எழுதுதலவசியமென்று தோன்றி என் அறிவுக்கெட்டியமட்டும் சொல்லுவதற்குத் துணிந்தேன்.

இந்நூலில் கூறப்பட்டுள்ள நூலாசிரியர் தொல்காப்பியனார், அவிநயனார், அமுதசாகரனார், காக்கைப்பாடினியார், மயேசுரனார், திருவள்ளுவர்; பின்னும் 24-ம் பக்கத்து[3] "ஆனொரார் * *" என்னும் செய்யுளின் உரையில் ஏழாம் வேற்றுமைப் பிரத்தியத்தின் முன் எழுவாயுருபு வந்ததற் குதாரணமாய், கம்பனரிடைப் பெருமையுளது வென்பதனையும், 50-ம் பக்கம்

2. முதுகுகண்டானென்பது பொருள்.

3. இனி பக்கம் காட்டுமிடத்து மகா-ா-ஸ்ரீ சி. வை. தாமோதரம்பிள்ளையவர்கள் பதிப்பில் கண்டபக்கமெனக்கொள்ளல் வேண்டும்.



"வானுமையம்புகை * *" என்னும் பாட்டுரையில் 'சிலபெயர் நின்று பின்பு தாதுபெற்றுப் பிரத்தியங்களான் முடியுமாறு' என்றதனுக் குதாரணமாய்ப் புகழேந்தி எனக்கூறியிருக்கின்றமையானும் கம்பரும் புகழேந்தியு மிந்நாலுரையாசரியர் காலத்துக்கு முன்னமே யிருந்தவர்கள் தானென்று தோன்றுகின்றது.

39-ம் பக்கத்து "முன்மொழியவ்வியஞ்சேர் தொகை * *" என்னுஞ் செய்யுளி னுரையில், "துவந்துவமு வன்மொழியா மிதரேதரம் வாய்ந்த சமாகாரமாவென்பது கபிலபரணர் தங்களிலே வாதுசெய்தார்களென இயைபுதோற்றி நின்றமையால் இதரேதரத் தொகையாயிற்று" எனக்கூறியிருப்பதினால், கபிலர் பரணர் என்னும் பழங்கவிகளும் இந்நூலாசரியற்கு வெகுகாலம் முந்தியவர்களென்று புலப்படும்.

இந்நூலில் 116-ம் பக்கத்தில் குண்டலகேசி, கலிவிருத்தம், எலிவிருத்தம், நரிவிருத்தம் முதலாய நூல்கள் கூறப்பட்டுள்ளன. இக்காலத்து இந்நூல்களெல்லாம் காணப்படாமையின் வெறும் பெயரேயாயின. பொய்கையார் பாடிய களவழியிலிருந்து,

"நாட்பினு ளெஞ்சிய ஞாலஞ்சேர் யானைக்கீழ்ப், போர்ப்பிலிடி முரசினூடு போமொண் குருதி, கார்ப்பெயல் மொய்ம்பினிற் செங்குளக் கோட்டின்கீழ், நீர்த்தூம்பு நீருமிழ்வ போன்ற புனலூட, னூர்த்தம ரட்டகளத்து"

என்னுஞ்செய்யுளை ஒரு விகற்ப நேரிசை வெண்பாவுக்கு 97-ம் பக்கத்து உதகரித்திருக்கிறமையால் களவழியும் இவ்விலக்கணத்துக்கு வெகுமுற்பட்டது எனக் கொள்ளல் வேண்டும்.

திரிகடுகமும் இவ்வீரசோழியத்துக்கு முந்தியதென்பது தோன்ற அதினின்றும்

"கொள்பொருள் வெஃகிக் குடியலைக்கும் வேந்தனு
முள்ளது சொல்லாச் சலமொழி மாந்தரு
மில்லிருந் தெல்லை கடப்பாளு மிம்மூவர்
வல்லே மழையருக்குங் கோள்."

என்னுஞ்செய்யுளை "பழிப்புடனில்லை"க் குதாரணமாய் 179-ம் பக்கத்து எடுத்துக் காட்டியிருக்கிறது.

175-ம் பக்கத்தடியில்,

"மலைகரந்து போகாதோ வற்றாதோ பவ்வ
மலர்கதிரோன் வீழாதோ வஞ்சி—நிலையெனக்குப்
பார்வேந்த ரொப்பரோ பாய்நீர்க் குருகுலத்தார்
போர்வேந்தே யான் முனிந்தபோது"

என்னும் பெருந்தேவனார் பாரதச்செய்யுளையும் மேற்கோளாகக் கொள்ளப்பட்டிருக்கிறது.

(இன்னும் வரும்)

நீலகிரி,
1—6—06.

கோ. வேங்கோபராவ்,
அசிஸ்டெண்டு எபிகிராபிஸ்டு

---

# பாண்டிநாட்டுப்பழய பௌத்தப் பள்ளிகள்.

முற்காலத்திற் பாண்டி நாட்டிற் பற்பலபதிகள் பௌத்தர்களுக்குறைவிடமா யிருந்தன வென்பதற்குச் சிற்சில சிலாலிகிதங்களும் அறிகுறிகளும்.

பாண்டிநாட்டிற் சிறந்த விஷ்ணுஸ்தலமாகிய பிரமதேச மன்னார்கோயிலென்னுந் திருப்பதியில் பன்னிரண்டாழ்வார்களில் ஒருவராகிய குலசேகர ஆழ்வார் சமாதிக்கோயில் கர்ப்பக்கிரகம் வடபுறத்து மதிலில் அக்கோயிலுக்குரிய சில நிலங்களுக்கு பெருநான்கெல்லை கூறி வருமிடத்தும் "ஸ்வஸ்தி ஸ்ரீ நாயனார் ஸ்ரீ குலசேகரப்பெருமாளை உகந்தருளிவித்த மலைய மண்டலத்து முல்லைப்பள்ளி வாசுதேவன் கேசவனை செண்டலங்காரதாசன் திருவிடையாட்டஞ் சொல்லி எல்லைத் நக்கத்துரவுண்டானை யால் மாளிகை முதற்படி யெடுத்து வந்தபடி ஸ்ரீ ராஜேந்திர சோளதேவர்க்குயாண்டு, க-வது ஸ்ரீ ராஜராஜபாண்டி நாட்டு. ............................................வடவார் நாட்டுப் பேர் ெ ட்டி நத்தத்தை யிடத்து வைத்துப் பள்ளிக்கோயில் எல்லையா வடக்கு நோக்கிப்போந்து." எனவரையப் பட்டிருக்கின்றது. பண்டைக்காலத்தில் எல்லையாகக் கூறியுள்ள நெறி ஏரி முதல



யின இக்காலத்தில் வேறு பெயர்களால் வழங்குகின்றனவு மன்றிச் சிற்சில அழிவுற்றும் மாறுபட்டும் போயினவேனும் ஒருவாறு நிதானித்து உற்று நோக்கிக் கூறிய எல்லை வழி அவ்வூரின் படபுறத்துள்ள கட்டனை நதி தாண்டி அப்பாற் செல்லுகையில் வந்தோர் பாழ்ங்கோயிலும் அதன் வடாதோர் கிராமநத்தமிருந்த அறிகுறிகளுந் தென்படுகின்றன. அக்கோயிலுள் மற்றைய தேவாலயங்கட்குரிய அறிகுறிகளியாதொன்று மின்மையால் அப்பாழ்ங்கோயிலே முற்கூறிய பள்ளிக்கோயிலாக வேண்டுமெனத் துணியப்படுகிறது. ஆகவே அடுத்தநத்தமும் பௌத்தர்களுக்கு இடமாயிருந்த தென்பதற்கையமின்று. இப்பொழுது அந்நத்தம் விளைநிலமாகமாறி வருகின்றது.

அன்றியும் தமிழ்நாட்டுத் தென்னெல்லையாகிய கன்னியாகுமரியென்னுந் தலத்திற்கு இருபத்தைந்து மயிலுக்கு வடபாலுள்ள வள்ளியூரென்னுங் கிராமத்தில் வள்ளியம்மை கோயில் பெரிய வடக்குப் பிரகாரத்தில் ஓர் சிலா விக்கிரக மிருக்கின்றது. அஃது இன்ன தேவதையென முப்பத்தைந்து வருடங்கட்கு முன் வரை யாவர்க்கு நன்குவிளங்காதிருந்தது. 1870—1871 வருடங்களில் நான்குனேரித் தாலூக்கா சப்-கலெக்ட்டர் ஆபீசு சிரஸ்துதாரா யிருந்த சம்பத்துராவ் ஓர் பௌத்தமதஸ்தர். ஒருமுறை அவ்வள்ளியூருக்குச் சென்றவர் அந்த விக்கிரகத்தைக் கண்ணுற்றுக் களித்து இத்தெய்வம் தம்மதத்தைச்சார்ந்த தென பலரறியப்பிரசங்கித்து அதற்குத் தகுந்தவந்தனை வழிபாடியற்றிப் பஞ்சமர் தீண்டாது சுற்று மண்வைப்பித்தது மன்றி இடையிடையே சின்னாட்களில் ஆங்குற்றுவேண்டும் வழிபாடுகள் புரிந்தும் வந்தனர்.

(இன்னும் வரும்)

பாரதியார், அம்பாசமுத்ரம்.

---

# தருமந் தலைகாக்கும்.

தருமபுரமென்றொரு திருநகருண்டு. அதில் தர்மலிங்கன் என்றொரு வேளாளனிருந்தான். அவனுக்கு ஆஸ்தி பூஸ்திதி அதிகம் இல்லை. அதனால் வெகுநாள்வரையில் கல்யாணம் ஆக

வில்லை. ஆயினும் அவனுடைய நற்குண நற்செய்கையைக்கண்டு அயலூரில் இருந்த ஒருவர் தன் பெண்ணைக் கொடுப்பதாகச் சொல்லி கல்யாணச்செலவு யாவும் தாமே பொறுத்துக்கொண்டு நடத்தினர். இவருக்குப் பிள்ளையில்லை. பெண்ணொன்றுதான். ஆஸ்தியும் சொற்பந்தான். பெண்ணுக்குக் கல்யாணம் ஆன சிலநாளைக்குள் அவர் காலஞ்சென்றனர். ஆகவே அப்பெண்ணுக்குக் கணவனொருவனே துணைவனாயினன். சாஸ்திர சம்மதமும் அதுவேயென்பது சொல்லாமலே தெரியும். இப்பெண்ணுக்குக் கல்யாணகாலத்தில் வயது பன்னிரண்டு. கணவனுக்கோ இவளின் மும்மடங்கு வயதாயிற்று. மணம் புணர்ந்து 5 வருஷம் ஆகியும் சந்ததியுண்டாக இல்லை. பெண்ணின் பெயர் அறம்வளர்த்தாள். அறம் வளர்த்தஅம்மையே இப்பெண்ணுருவாக இந்நாளவதரித்தாளென்னும்படி குடித்தனம் சிக்கனச் செய்து வந்தாள். சொற்பசீவனமுடையவனாயினும் தர்மலிங்கன் கஷ்டமறியாது களித்திருந்தான். மனைவி குணியாயிற் கணவன் வளவனே.

இப்பால் பாபநாசத்திலிருந்து காசியாத்திரைபோகிற பெரியவர் ஒருவர் அவ்வழிச்சென்று இவ்வீட்டில் ஒருநாள் தங்கினர். இவர்களுக்குப் பிள்ளையில்லாக் குறை பெருங்குறை என்றறிந்து, அடுத்த வருஷம் இந்நாளில் உங்கள் ஆண்குழவிக்கு ஆண்டிநிறைவு நடக்குமென்று ஆசியளித்துப்போனார். அவர் ஆசியின் வலமோ அல்லது இவர்கள் ஊழின் திறமோ காகதாளிநியாயமாக அவ்வண்ணமே அறம்வளர்த்தாள் ஆண்குழந்தையொன்றைப் பெற்றெடுத்தாள். பாபநாசத்துப் பெரியவர் ஆசிவலத்தாற் பிறந்தவனாதலால் அவனுக்குப் பாபநாசன் என்று பெயரிட்டார்கள். தருமபுரத்தில் தருமலிங்கன் மனைவி அறம்வளர்த்தாள் வயிற்றில் பாபநாசன் உதித்தது என்ன அழகு பாருங்கள். தருமத்துக்கிடையூறு மடிதற்று நிற்கும் (ஆடையையிறுக்கிக் கட்டிக்கொண்டு நிற்றல்) என்பார்களே அது இவர்கள் விஷயத்தில் காணலாம். தருமப் பெயர்பூண்ட இக்குடி தழைக்கும் வழியில் என்ன இடர் நேரிடுகிறது. மைந்தன் பிறந்து ஐந்து வருஷமாகுமுன் தந்தையானவர் அந்த உலகம் சென்றனர். ஆயினும் அறம்வளர்த்தாளுக்கு மகவளர்ப்பது ஒரு பாரமாகத் தோற்ற இல்லை. தனக்கு இருந்த சொற்பத்தைக்கொண்டு, தன் வாயைக் கட்டியும், வயிற்றை ஒடுக்கியும்



சேயைக் கண்ணொன்றாய் வளர்த்து வந்தாள். ஐந்து வயதுப்பிள்ளை பத்து வயதானவன் போலத் தோற்றினன். தாய் கைப்பிள்ளைக்கும் கால்வாய்ப் பயிருக்கும் தாழ்வேது. இவனைப் பள்ளிக்கும் வைத்தாள். படிப்பிலும் துடிப்பு அதிகந்தான். மற்றவர்கள் ஆறு மாதத்தில் படிப்பதை இவன் ஆறு வாரத்தில் படிப்பான். ஆகவே இவர்களுக்கு இவனைக் கண்டால் ஆகிறதில்லை. அன்றியும் நமது நாட்டுச் சிறுவர்களில் பெரும்பாலரிடத்தில் ஒரு துர்வழக்கம். தங்கக்காப்பு சரிகை வேஷ்டி வயிரக்கடுக்கன் மக்குமல் சட்டை போட்டுக்கொண்டு வருபவர்களிடத்தில் ஒரு நேசமும் கந்தையுடுக்கும் மைந்தரிடத்தில் ஒரு துவேஷமும் பாராட்டுவதைப் பலமுறை யாவரும் கண்டும் கேட்டுமிருக்கலாம். ஊரார் பிள்ளைகளைப்போல ஊட்டி வளர்த்தாலும், பூட்டப்புனைய அறம்வளர்த்தாளுக்கு இயலவில்லை. இதனாலும் பாபநாசனிடத்தில் நேசம் குறையலாயிற்று. பள்ளிப்பிள்ளைகள் பாபநாசனைப்படுத்தியபாடு பகர இயலாது.

கைம்பெண்வளர்த்த கழிசிறை யென்பார்கள், தகப்பன்பேரறியாதவனைத் தாடையிலடி யென்பார்கள், கந்தைபுனைந்த காராளா, சிந்தைகலங்காச் சீராளா என்று சூட்டுவார்கள், ஊரார் சோற்றால் ஒதிபோல்பெருத்தான் என்பார்கள், இரவல் சோறுதின்பவனுக்கு ஏன் உடும்பிளைக்கும் என்பார்கள். அந்தோ! எத்த வெள்ளைக்காரப்பிள்ளைகள் கெட்டார்கள்! கண்ணிட்டுப் பார்க்கவொண்ணாது கசம்பிடித்துக் குளிரால் விறைத்து வாயால் ஆவிபோக்கிக்கொண்டிருந்த நாய்க்குட்டியொன்றை அரையிருளிற் கண்டெடுத்து, அனற்காட்டிக் குளிர்மாற்றி, உண்ணப் பாலும், உறங்கத் தோலும் கொடுத்துக் காப்பாற்றிய கதையைக் காதால் கேட்டாரில்லையே! வாயிற்குடை கொண்டு சென்று வாயிற்படியண்டை நின்று, என்னுயிர்த்தோழன் எப்போது வருவான் என்று அந்நாய் பின்னாளில் பள்ளிவாயிலில் நின்ற நிலையைப் பார்த்தாரில்லையே. இம்மேனாட்டார் குணம் நமது கீழ்நாட்டார் என்று பெறுவாரோ அறியோம்.

இது நிற்க, பள்ளிப்பிள்ளைகள் தன்னைத்திட்டுவதையும் குட்டுவதையும் தாளாதவனாய், அறம்வளர்த்தாளிடம் வந்து, “அம்மா! ஆற்றோடு நூறு வந்தாலும் சரி, வேரோடு தூறு போனாலும் சரி; இந்தப்படிப்பு எனக்குவேண்டாம்” என்று சொல்லிப்

படிப்பை நிறுத்திவிட்டுப் பூவெடுத்தும், மாலை தொடுத்தும், நடைக்கூலி வாங்கியும், கடைக்கணக்கெழுதியும், சிலநாள் சிக்கெனச் சீவனஞ்செய்து, சில பணம் மீதிபிடித்து, அவ்வூர்ப் பெருங்குடியிற்பிறந்த சிறுமி யொருத்தியை மணம் புணர்ந்தான். அவள் தருணிப்பருவம் வாய்ந்தவள். ஆதலின் ஒரு வருஷத்துக்கெல்லாம் ஒரு கன்னியையீன்று அன்றே தென்றிசை சேர்ந்தனள். ஐயோ! என்ன பாவம்! தேவியை யிழந்து பாவி யினி யிங்கிருப்பது பயனில்லையென்று தருமபுரத்தைவிட்டுப் பிரமதேசஞ் சேர்ந்து இராணுவச் சேவகத்தில் அமர்ந்தான். அங்கிருந்து கன்னிபத்திரம் என்று தன் அன்னைக்கு அடிக்கடி எழுதுவான். உம்பளத்தைத் தானுண்டு சம்பளத்தைத் தாய்க்கனுப்புவான். தாயையிழந்து தந்தையைப் பிரிந்த புண்யவதிக்குப் புண்யவதியெனவே பேரிட்டு, மகனனுப்புவதுகொண்டு, மகவைப்பாதுகாத்துவந்தாள். மகவளர்க்கும் அறம்வளர்த்தாள். பெண்ணும் வளர்ந்து பேதைப்பருவம் கடந்து பெதும்பைப்பருவம் அடைந்தாள். இச்சமயத்தில் பாபநாசன் காப்புச்சேனையில் தாக்கலாயினன். இதுவளையில் சிலநாள் விடைபெற்றுத் தருமபுரம் போய்த் தாயையும் பெண்ணையும் பார்த்து வரலாம் என்று எண்ணியிருந்தான். அந்த எண்ணம் அன்றேயொழிந்தது. ஆகவே, அவர்களைக் காணவேண்டில், தானிருக்கும் இடம் அவர்கள் வந்தாலன்றி இயலாதெனக் கண்டு, கப்பற்படிக்கு வேண்டிய பணமும் அனுப்பித் தயவு செய்து உடனே வந்து சேருகவென்று தாய்க்கு எழுதினான். அனுப்பி ஆறுமாதமாயிற்று. அழைத்தவர் வந்தாரில்லை. உற்றாரிருக்கும் ஊரைவிட்டுப் போகப் பெற்றாளுக்கு மனம் வரவில்லை. தருமபுரத்தைவிட்டால் தருணிப்பருவப் பெண்ணுக்கு மணமகனைத்தேடுவதெங்ஙனம் என்ற யோசனையும் தடையாய் நின்றது. பெண்ணும் தாயும் கண்ணிலே நின்று கொண்டிருந்ததால் பாபநாசன் ஓயாதுகடிதம் எழுதினான். "எல்லாம் வல்லானொருவன், எங்குமுள்ளானாகையால், எல்லாமறிந்து ஏற்றதைச் செய்வான்" என்று தாயும் துணிந்து தனையன் புதல்வியை அழைத்துக்கொண்டு, தருமையைவிட்டுப் பிரமைக்குப் போகவெண்ணி அடுத்த கடற்றுறையை அடைந்து, கையுறை கொடுத்துக் கைச்சார்த்துப்பெற்று கப்பலில் ஏறி காதம் பல கடந்தாள். தானேறிச்சென்றகப்பல் கற்பாறையிற்றுக்குண்டு கடலாழங்கண்டது. கப்பலில் இருந்தவர்கள் காலனூர்



சேர்ந்தார்கள். அறம் வளர்த்தாளும் புண்ணியவதியும் எப்படியோ தப்பித்தாக்குற்ற பாறையைத் தம்மடைக்கலமாகக் கொண்டு உயிர்பெற்று நின்றார்கள்.

இச்சமயத்தில் அப்பாறையை யடுத்து ஒரு கப்பல் அவ்வழிச்சென்றது. இவர் ஏதோ சைகை காட்ட, மாலுமி கலத்தை நிறுத்திக் காரியத்தைக்கேட்டான். கதியற்றுத் தடுமாறும் மிருவரையும் காத்தருள்கவென் றிரந்தார்கள். "அம்மா! இக்கப்பலுக்கு நிறைபாரம் இருக்கிறது. நெருக்கிப்பிடித்தால் ஒருவர்க்கிடங் கிடைக்கும். எந்த ஒருவர் வந்து சேருகிறதென்று உங்களுக்குள் தீர்மானித்துக்கொண்டு, முடிவு சீக்கிரம் சொல்லுங்கள்" என்று மாலுமி சொன்னான். "அம்மா! புண்ணியவதி, யானோ விருத்தை, காடுவாவென்கிறது, வீடுபோ என்கிறது. யானிருந்தாலென்ன? நீயோ இளந்தை; பெற்றுப் பெருகும் பெருங்குடிக்கு முதலாயுள்ளவள். நீயேயேறிக்கொள்" என்னப் புண்யவதி சொல்லுகிறாள். "யானொருபெரும்பாவி. பிறந்த அன்றே தாயை யிழந்தேன். பிற்றைநாளில் தகப்பனைப் பிரிந்தேன். அன்னையுமாய், அத்தனுமாய் இருக்கும் உன்னையுமிழந்து யாரை நம்பி யான் உயிர்வாழ்வேன். இத்தகைய பாதகியேறியதனாலேயே முன்னைய கப்பல் தகர்ந்தது. எண்ணிறந்தோர் யமனூர் புகுந்தார். இந்தத்துடைகாலி அடிவைத்த இடம் பொடியாய்ப்போவதறிந்தனை. இந்தக்கப்பலில் ஏறினால் அதுவுந் தகர்ந்து, அத்தனைபேரும், முத்திநெறியறிவதில் தடையில்லை. நான் மாட்டேன்; நீயே போய் உன் கண்ணென்றாய் வளர்த்த என் அண்ணாவைக்கண்டு, உன் கன்னி கடலாடுகிறாள். அதற்கு நீ கலங்கவேண்டாம் என்றுறுதி கூறுவாயாக" வென்றாள். இக்கடிய காட்சியைக் கண்ணுற்ற, கப்பலில் இருந்த போர்வீரனொருவன் எழுந்து "ஐயா! மாலுமியாரே, யான் பிறந்தது முதல் ஒரு பெரும்பாவி, தந்தையையும் துணைவியையும் இழந்தேன். தாயையும், புதல்வியையும் பிரிந்தேன். முகமறியாத தேசத்தையடைந்தேன். தினந்தினம் கொலை பண்ணும் வேலையில் அமர்ந்தேன். இந்தப் பரிதாப நிலைமையில் நிற்கும் இருவரும், என்தாயும் பெண்ணும்போல் இருக்கிறார்கள். அவர்களைக்காண ஊர் போகிறேன். ஆறுமாதகாலமாய் அவர்களைப்பற்றி ஒரு சங்கதியும் தெரியவில்லை. அவர்களிருந்தாலும் சரி இறந்தாலும் சரி அவர்களைப்போல் தோற்றும் இவர்களைக் காப்பாற்றி என் பாவத்துக்குத் தீர்வு தேடிக்கொள்ளுகிறேன்.

பெண்களுக்கு இரங்கும் பேயும் நற்கதியடையும் என்பார்கள். ஆகவே அட்டி சொல்லாமல் அனுமதி கொடுங்கள்” என்றிரந்தான். இதுகேட்டுக் கப்பலின் ஒரு மூலையிலிருந்த ஒரு குட்டரோகி, சட்டென்று எழுந்து “ஐய! ஐய! அப்படிச்செய்யலாகாது. அவரோ ஆண்மையிற் சிறந்தவர். ஆயிரங்கொலைசெய்தாலும் அரசனுக்கிணைப்படி செய்வதனால் அவர் பாதகரல்ல. அரசனுக்கும் பாவமில்லை.

'கொலையிற், கொடியாரை, வேந்தொறுத்தல் பைங்கூழ்
களைகட், டதனொடு, நேர்.'

அவர் இவர்க்காக உயிர்மாய்ப்பது சரியன்று, அவர் தானும் சுகமடைந்து பிறர்க்கும் சுகத்தை யுண்டுபண்ண வல்லவர். தனக்கும் கஷ்டம், பிறக்கும் நஷ்டமாயுள்ளவன் யானொருவனே. “அக்கால் அலவனைக் காதலித்துக்கான் முறித்துத்தின்ற பழவினையால், அக்கேபோல் ' அங்கையொழிய விரலழுகித் துக்கத் தொழுநோய்” பெற்றுள்ளேன். (அலவன்=நண்டு அக்கு=சங்கு. அங்கை=உள்ளங்கை.) எனக்கு பிரமதேசத்தில் ஆயிரங்காணிநிலம் இருந்தும், அதன் சுகத்தை அனுபவியாமல், கண்டவர் காறியுமிழ்வதைத் தாளமாட்டாமல் ஊர்போய்ச்சேரலாம் என்று போகிறேன். அங்கேயும் பெற்றதாயொழிய மற்றவர்களை யொழித்துவிட்டேன். பரமதேசம்போனபிறகு பெற்ற தாயைப்பற்றி யாதொன்றும் தெரியவில்லை. அங்கேபோய் அவளில்லாவிடில் சீரழிவகத்தான் முடியும். ஆதலால் இவ்விருவர் நிமித்தம் நீரிலிழிவதே திறம். ஒருவேளை, இந்நற்கருமத்தால் முற்பிறப்பிற் செய்த தீவினை மாறவுங்கூடும். அடுத்த பிறப்பிலாவது சுத்த தேகம்பெற்றுச் சுகித்திருக்கலாம். ஆதலால் இதோ கடலில் குதிக்கிறேன்” என்று சொல்லிக்கொண்டே குதித்துவிட்டான். இதனால் தாய் பெண் இருவரும் கப்பலில் இடம்பெற்றார்கள். கப்பலும் அறம்வளர்த்தாள் ஏறிய துறையிலேயே போய்ச்சேர்ந்தது.

இது இங்ஙனமாக, கடலிற்குதித்த தொழுநோயனுக்கு உப்புநீர் படவே புண்மரத்துப்போய் உபத்திரம் மட்டாயது. அச்சமையம் சாகத்துணிந்தானாயினும் உயிரைவிட யார்தான் துணிவார்கள்? எப்படியோ தலையைமட்டும் கடனீர்மேல் வைத்துக்கொண்டு மிதந்தான். அலையடித்து உடலைக் கரைசேர்த்தது.



உடல் நோய் வலிமட்டாகி, உப்பங்காற்று உடலிற்படவே பசி மேலாடியது. பசிருசி யறியாது அல்லவா. கண்டதைப் பிடுங்கித்தின்றான். அதில் ஏதோ ஒன்று தான்கொண்ட பெருநோய்க்கு அருமருந்தாயது. தெய்வச்செயலால் தொழுநோய் நீங்க முழு உடம்பாகியது. முன்செய்த புண்ணியத்தால் அங்கு ஒரு கப்பல் நீருக்காகத் தங்கியது. மாலுமியை நயந்து தானும் அக்கப்பலில் ஏறிக்கொண்டான். தானிழிந்த கப்பலினும், ஏறிய கப்பல் விரைவானகதியுடையதாய், முந்திய கப்பல் சேர்ந்த அந்த நிமிஷமே அதே துறைபோய்ச் சேர்ந்தது. கப்பலில் இருந்தவர்கள் யாவரும் குட்டரோகி சுத்தமான அற்புதத்தைப் பேசிக்கொண்டே கரையிறங்கினார்கள்.

முன்சேர்ந்த கப்பல் பயணவிடைச்சீட்டில் குறித்துள்ள குட்டரோகி யெங்கே யென்று துறைக்கு அதிகாரி விசாரணை செய்ய “அவன் இவ்விருவருக்காக கடலிற்குதித்தான். அது காரணத்தினாலே இவ்விருவரும் கைச்சார்த்து இன்றி வந்திருக்கிறார்கள்” என்று அறிவித்தார். இதற்கு மத்தியில், பின்வந்த கப்பலின் மாலுமி துறைக் கதிகாரிடயிஞ்சென்று “இடையில் ஒருவன் கப்பலில் ஏறினான். அவன் குட்டரோகியாயிருந்து கடலிற் குதித்துத் தப்பிப்பிழைத்தவனாம். அவனுக்கு குட்டரோகிக்குறி சிறிதும் காணோம். வேண்டிய பரிக்ஷையைச் செய்துகொண்டு அவனுக்கு விடைகொடுங்கள்” என்று அறிவித்துக் கொண்டான். கடலிற்குதித்தவன் பிழைத்துவந்தான் என்றால் யாரும் அவனைக்காண ஆசைப்படுவார்களன்றோ? ஆதலால் அதிகாரி விரைவில் அவ்விடம் நோக்கிச்சென்றான். அறம்வளர்த்தாளும் புண்யவதியும் அச்சங்கதி கேட்டு அன்னான் தம்முயிரைக் காத்தருளிய புண்யவான் ஆகவே வேண்டுமென்று அவனின்றவிடம் விரைந்து சென்றார்கள். அவர்களைத்தருமபுரத்தானொருவன் கண்டு “அம்மா! அறம்வளர்த்தாள்! உங்களைக் காண வேண்டி உன் மகன் இதோ கப்பலில் இறங்கித் தருமபுரம் போக இதோ நிற்கிறான்” என்று சொல்லி அவனின்ற இடத்துக்கு இவர்களை யழைத்துப்போய்த் தருமலிங்கத்தின் முன்னே விட்டான். ஒருவரை ஒருவர் கட்டிக்கொண்டு அடங்கா மகிழ்ச்சியால் ஓவென் றலறினார்கள். இது என்ன சந்தடியென்று அதிகாரி திரும்பிவந்தான். அதிகாரி நின்ற இடத்துக்குக் குட்டரோகியைக்கொண்டு வரலாயிற்று. அவனைக்கண்ட தருமலிங்கன்

"அப்பா! என்னுயிர்காத்த ஈசனே! அன்னையைக்காத்த ஆண்டவனே! கன்னிக் குயிர்கொடுத்த கவுணியனே!" யென்று வாரியெடுத்து மார்போடிறுகத் தழுவி, உயிரே போல உடலும் ஒன்றுறும்படி புல்லினான். அதிகாரி காரணம் வினவத் தருமன் "யானிவள் பிள்ளை; அவள் என் பெண்! இவ்விருவரையும் யான் விட்டுப்பிரிந்து வெகுநாளாயிற்று. பிரமதேசத்தில் யானொரு போர்வீரன்! அங்கு வரும்படி எழுதியாறுமாதமாயிற்று. வராமை கண்டு யான் சிலநாளைக்கு விடைபெற்று வந்தேன். வருமார்க்கத்தில் இப்படி இப்படி நடந்தது. ஆதலின் எங்கள் மூவராருயிர் காத்ததேவனிவன்" என்றான். நின்றாரனைவரும் கொண்டாட, அதிகாரி "அத்தேவனுக்கு இக்கன்னியைக் காணிக்கையாகக் கொடு" என்றான். அவ்வண்ணமே இசைந்து அந்தஇடத்திலேயே அப்பொழுதே அவ்வதிகாரி முன்னிலையிலேயே கல்யாணம் நடந்தேறியது. ஆயினும்,

"குலனு மோர்கிலன், கோத்திர மோர்கிலன், குடிமை
நலனு மோர்கிலன், ஒழுக்கமும் கல்வியும் நண்ணும்
தலனு மோர்கிலன்; கன்னியைத் தத்தம் செய்தானால்,
புலனு மோர்ந்தவன் விதிவழி மதியெனப் புலந்தார்.

என்று சொல்ல இடமில்லை. அவன் திருவெண்காட்டு வேளாளர் குலத்திற் பிறந்தவன். அவன்பேர் சிவபுண்ணியத்தெளிவு. பாபநாசனுக்கும் பண்டைய சொந்தக்காரன் என்று தெரியவந்தது. அறம்வளர்த்தாள் புண்யவதி என்று சொன்னபேரும் இப்போதுதான் நிலைத்தது. அவர்கள் நிமித்தங் கடலிற் குதித்திராவிடில் இவன் சுத்தமுற்றிரான்: இவன் புண்ணியவதி யுயிர்க்குயிரானதுபோல் பின்னும் உயிர்த்துணைவனாயினான். தனக்குப் பிரமதேசத்திலிருந்த ஆயிரங்காணி நிலத்தை வித்துவிட்டு, ஊரிலேயே காணி பூமி வாங்கிக்கொண்டான். பாபநாசன் பெருமையைக்கேட்டுப் பிரமதேசத் ததிகாரி மற்றவரினும் இரட்டிப்பு உபசாரச்சம்பளங்கொடுத்து உற்றார் பெற்றாருடன் ஊரிலிருக்கும்படி விடையளித்தார். எல்லோரும் சுகமே வாழ்ந்தனர்.

தருமம் எத்தனை தலைகாத்தது பாருங்கள்!

ஜ. சாமிநாத முதலியார்.



சுபமஸ்து.

# தமிழகம்.

வால்யூம் 2. | 1906-௵ ஜூலை௴ | நம்பர் 7.

## தமிழகச்செய்தி.

### தஞ்சைத்தமிழ்ச்சங்கம் :—

கோடை விடுமுறைநாட்கள் முடிந்தபின்னர் யாங்கள் எமது தமிழ்க்கலாசாலையைத்துவக்கி வழக்கம்போலவே நடத்தி வருகின்றோம். தலைமை உபாத்தியாயர் பண்டிதர் K. M. நடேசையரவர்களும், பண்டிதர் K. M. சிதம்பரஐயரவர்களும் கலாசாலையை நடத்திவர உதவிபுரிகின்றனர். தமிழ் நூலாராய்ச்சியும் நடந்து வருகின்றது.

### ஓர் மாணவர் தமிழ்ச்சங்கம்.

ஜூலை௴ 30உ திங்கட்கிழமை மாலை 5½மணிக்கு கும்பகோணம் துரைத்தனக்கலாசாலை மாணவர் தமிழ்ச்சங்கம் கூடிற்று. அச்சங்கத்தவரின் வேண்டுகோளின்படி எமது உதவிக்காரியதரிசி மகா-ா-ஸ்ரீ. உ. நா. அப்பாசாமிஐயரவர்கள், "நவீன அறிவை நாட்டிற்குரியதாக்கும் வழி" என்கிற விஷயத்தைப்பற்றிப் பேசினார்கள். அப்போது மகா-ா-ஸ்ரீ. கிருஷ்ணசாமிஐயரவர்கள் B. A. அக்கிராசனாதிபதியாக வீற்றிருந்தார்கள். புரொபெஸர் மகா-ா-ஸ்ரீ. சுப்பையா அவர்கள் M. A. L. T. புரொபெஸர்

மகா-ா-ஸ்ரீ. சிவகுமாரசாஸ்திரிகள், B. A. முதலிய போதகாசிரியர்கள் வந்திருந்து மாணவர்களுக்கு உதவி புரிந்தார்கள். மகா-ா-ஸ்ரீ. உ. நா. அப்பாசாமி ஐயரவர்களின் உபந்நியாசத்தின் கருத்தை இச்சஞ்சிகையிலே வேறொருவியாசமாக வெளியிட்டிருக்கிறோம். அதனைப்படித்துக்கொள்க. பிரசங்கம் முடிந்தபிறகு அக்கிராசனாதிபர் பிரசங்கத்திற்கண்ட சங்கதிகளைப்பற்றித் தமக்குத்தோற்றிய கருத்துகள் பலவற்றையும் அனுபோக சித்தமாகத் தெரிந்த உண்மைகளையும் கேட்போர்மனதுகளிகூர இனிமை பயக்கும் எளியநடையில் எடுத்துச்சொன்னார்கள். இராஜ்ஜிய காரியங்களுக்கும் தேசப்பொது நன்மைகளான முயற்சிகளுக்கும் ஆங்கிலேய மொழி உபயோகப்பட்டு வந்தபோதிலும், தேசபாஷையை அபிவிருத்தி செய்யாவிட்டால் பொது நன்மைக்கு மிகக் கெடுதலுண்டாகுமென்றும், எவ்வித அறிவையும் சாமானியருக்கு நாம் விளங்கக்கூறும்போது நமது சுபாஷையை நாம் கருவியாகக்கொண்டு முயலவேண்டுமென்றும் சொல்லி முடித்தார். இம்மாணவர் தமிழ்சங்கம் நிலைத்து வாழ்க!

### ரவிவர்மன் காலத்துத்தாம்ர ஸாஸனங்கள்.

ஏறநாடு தாலூக்கா நிலம்பூர் என்ற இடத்திற்கு அருகாமையிலுள்ள சாளியாற்றின் கரையில் மூன்று தாம்ரஸாஸனங்கள் அகப்பட்டு, ஸ்ரீமான். து. அ. கோபிநாதராவ் அவர்கள், ஸ்ரீமான் கொ. வெங்கோபராவ் அவர்கள்—இவர்கள் இருவர் பார்வைக்கும் வந்தன. இந்த ஸாஸனங்களின் பிரதிகளைத்தயைகூர்ந்து இந்த இரண்டு தமிழபிமானிகளும் எமக்கு அனுப்பினார்கள். இவர்களுக்கு எமது வந்தனத்தை செலுத்துகின்றோம்.

கதம்ப ஜாதியார்களின் அரசனான தர்மமஹாராஜன் ரவிவர்மன் அவனது அரசாட்சி காலத்தில் ஐந்தாம் வருஷத்தில் எஜுர்வேத நிபுணரான கோவிந்தஸ்வாமிகளுக்கு இரண்டு கிராமங்களும் பொன்னுங் கொடுத்து அவரது பெருமைகளைக்கொண்டாடினான். இந்த ஸாஸனங்களில் எமக்கு அழகாகத்தோற்றிய இறுதி ஆறுவரிகளின் பொருளைக்கூறுதும். "இக்கொடையை அறிந்தும், எவனொருவன் தனது கோபத்தாலோ பகைமையாலோ பேராசையாலோ இதனை அபகரித்துக்கொள்ளுகிறானோ அவன் கதம்ப ஜாதியாரையும் மற்றியாவரையும் ஐந்து மஹாபாவங்கள் செய்தவனாகின்றான். எவனொருவன் இதனை ரக்ஷிக்கின்றானோ அவன்தானக்கொடுத்த புண்யமடைகின்றான். இத்தானதலம்சாகரன்முதல் பலமன்னர் அனுபவமென்று கூறப்பட்டிருக்கின்றது. எந்தெந்த காலங்களில் எவரெவருக்கு இந்த மகிதலம் உரித்தோ அவரவருக்கு அவ்வவ்வமையங்களில் இந்தத்தானத்தின் பலன் உண்டாகுக! பசுக்களும் பிராமணர்களும் மல்குக! மகாஜனங்கள் ஸம்பத்தடைக!"



பத்திராசிரியர்.

---

## சாஸ்திரப்பொருண் மாலை.

### 14. விஸுவியஸ் எரிமலை. †

சென்ற மேயீ விஸுவியஸ் எரிமலையின் காட்சி மிகவும் அற்புதமாம். மலை பிளந்து கற்குழம்பை வெளியே கக்கும் தருவாயில் மாட்டுச்சீ என்னும் சாஸ்திரி தனது தாரகை பார்த்தறியும் மண்டபத்தில் இருந்தாராம். செக்கச்சிவந்த சூட்டுக்குழம்பாறு வெளியேததும்பி ஓடும்வகையும் அவர் அங்கேயே வீற்றிருந்து நடந்த வேடிக்கைகளைப் பார்த்தார். அவ்விநோதங்களைப் படிப்பதே பயங்கரமாகவிருக்கின்றது! உருகின கற்குழம்புப்பேராறு அக்கம்பக்கத்திலுள்ள குக்கிராமங்களையெல்லாம் மூடிவிட்டது. அக்குக்கிராமங்களிலிருந்து ஜனங்கள் சமயத்தில் தப்பிப்பிழைப்பது அருமையாகிவிட்டது. 'கிரேட்டர்' என்னும் எரிமலை வாயிலிருந்து பல்லாயிரம் பொருள்கள் திரள் திரளாக ஜ்வலித்துக்கொண்டு ஆகாயத்தில் வெகுதூரம் துள்ளியெழுந்து விழுந்தன. 'கிரேட்டர்' வாயிலிருந்து ஓங்கி வளர்ந்த ஓர் ஜ்வாலை 500 அடி உயர்ந்து எழுந்து ஓரே இருட்டாய் இருண்ட அந்த இரவின் அந்தகாரத்தைப்போக்கியது. இடி இடித்தாற்போலவும் கர்ஜனையுண்டானாற்போலவும் காது செவிடுபட முழக்கங்கள் உண்டாயின. ஆயிரம் காட்டுமிருகங்கள் ஒன்றாய்க்கூடி உறுமினபோல உருமல் உண்டாயிற்று. பூகம்பம் உண்டாயிற்று. ஆகாயத்திலிருந்து கருஞ்சாம்பல் உதிர்ந்து, பட்டப்பகலை இருளாக்கியது. பூமி பிளந்த வழியும் மலைகள் திறந்தவழியும் கொதிநீர்த்தம்பங்களும் ஜ்வாலைப்படலங்களும் துர்க்கந்தமான காற்றும்

† இந்த சாவேந் பத்திரிகை, வால்யூம் ?, பக்கம் 157, 184.

வெளிப்போந்தன. கண்களைப்பறிக்கும் மின்சாரவெளிச்சங்களும் உண்டாயின. புதிது புதிதாகத் தோற்றிய வாய்களின் வழியே மலைகள் தீப்பந்துகளை உமிழ்ந்தன. அவ்வனர்த்தங்களையெல்லாம் கண்ட பாமரர் உலகத்திற்கிறுதி வந்ததோ என்று பயந்தார். சிலர் பயத்தால் பைத்தியங்கொண்டார்கள்.

இலிக்குக்காரணம் அறியாமையே. தாரகை மண்டலத்தில் உயர வீற்றிருந்த அதிகாரியோ பயமில்லாமல் நடப்பனவெல்லாம் இயற்கையில் சகஜமே என்று உற்றுப்பார்த்துக்கொண்டு வந்தார். இயற்கை மாறுபாடுகளைக் கண்டறிந்து, தெரிந்துகொள்ளவேண்டிய விஷயங்களை மானிடருக்குத் தெரிவிக்கும் ஆவல் மிகவும் கொண்டார் ஆதலினால் இவருக்குப் பயமில்லாமற் போயிற்று.

இந்த எரிமலையின் கொதிப்பினால் வந்த கேடுகள் தவிர, சென்ற மே மாசத்தில் ஸான் பிரான்ஸிஸ்கோ என்றதோர் பட்டணத்தில் ஓர் பெரும் பூகம்பம் உண்டாகி அந்நகரத்திற்கே நாசமேற்பட்டது. அநேகமாயிரம் வீடுகள் தகர்ந்து போயினவாம். பொருள் நஷ்டமும் பலவாம். அறியாமை மிகுந்த ஜனங்களுக்கு ஏதோ சொல்லமுடியாத ஓர் பயமுண்டாகி மனக்குழப்பமும் வியாகூலமும் அதிகரித்தன.

பிறகு ஒரு மாதத்தில் இக்குழப்பங்கள் அடங்கின. விஸுவியஸ் மலை தனது வாயின்வழியே கக்கிய சாம்பல் மிகவும் உபயோகமுள்ள தாதுப்பொருள்களால் ஆனதென்று பரிசோதித்தறிந்தார்கள். தாவரங்களுக்கு இன்றியமையாத உணவுகளான எருக்கள் பல கிடைத்ததென்று இரசாயன சாஸ்திரிகள் களிப்படைந்தார்கள். திராக்ஷைக்கொடி, புற்பூண்டுகள், மிகவும் செழிக்குமாம். எரிமலை கான்ற சாம்பலில் மணலின் மூலதாது, அலுமினா, சுண்ணாம்பு, காந்தமண், இரும்பு, மற்று வேறு லோஹங்கள் காணப்பட்டன. ஆதலின் கேட்டினின்றும் நன்மை உண்டாகின்றது கவனிக்கத்தகுந்தது.

மனிதர்களுக்கு இவ்விதமான பீதியைக் கற்பிக்கக்கூடுமாயினும், மலைகளால் உண்டாகும் சாதகமும் பல உள. மலைகள் உக்கிரம் கொள்ளாமல் சாந்த நிலையிலிருக்கும்போது, நமக்கு சுகாதார வாழ்வினை உண்டாக்கி, ஒரு பெரும் பாக்கியம்போல் உதவுகின்றன. பண்டைக்காலத்து ஓர் கவிராஜன் "எனக்குப்



பெருகவி பெருகிவருகின்ற மலைகளை அண்ணாந்துபார்க்கின்றேன்." என்று கூறினார். இவ்வழகான வார்த்தைகள் ஓர் உண்மையை விளக்குகின்றன. புனித நீரான கங்கைப் பெருவெள்ளம் தான் சென்றவழியெல்லாம் சம்பத்தைப் பெருக்கிக்கொண்டு மலையிலிருந்து உற்பத்தியாகி இழிந்துவருகின்றது. அந்தக் கங்கையைப்போலவே தம்முடைய பெருகவியை நாலாபக்கமும் வாரியிறைக்கின்ற முனிபுங்கவர்களும் இருடிகளும் மலையின்மீது வசிக்கின்றனர். மலைமீதுள்ள காற்று நிர்மலமாய் நன்மை பயக்கத்தக்கதென்று சாஸ்திரஞ்ஞர்கள் கூறுகிறார்கள். மலையின் மேல் 4,000 அடிமுதல் 7,000 அடி வரையிலும் ஜனங்கள் வசித்தால் தேகாரோக்கியமும் சுறுசுறுப்பும் மிகுகின்றன. தேகத்தில் உண்டாகும் பருக்களுக்கு மூலாதாரமான பரமாணுக்களைப் போக்கடித்து, நோய்தெளிந்தெழும் பலஹீனர்களுக்குத் தேகபலத்தை நொடியில் உண்டுபண்ணுகிறதென்று பிரொபெஸர் லண்ட்ஸ் அபிப்பிராயப்படுகிறார். தேகத்திலுள்ள அணுச்சமுதாயங்களை வளர்க்கவும் அவைகளைப் புதுப்பிக்கவும் மிகவும் உபயோகமாகும் உணவுகள் பருப்புமுதலான கடினமான பதார்த்தங்கள். அவைகளை ஜீர்ணித்தல் பலஹீனர்களுக்கு முடியாத காரியம். ஆயினும் இப்பல ஹீனர்கள் மலையின்மீது வசிப்பார்களேயானால் கடின பதார்த்தங்களையும் ஜீர்ணிக்கும் சக்திபெறுகிறார்களாம். காயசுத்தி பண்ணிக்கொண்டு யோகாப்பியாசஞ்செய்ய விரும்புகிறவர்கள் மலைப்பிரதேசங்களை ஆசிரயிக்கும் காரணம் இதுவே போலும்.

## 15. நிலக்கரி வாயுத்தைல வர்ணம்*

இப்பெயர் புனைந்த வர்ணமொன்று இப்போது இந்தியாவில் நூதனமாய்த் தலைப்பட்டிருக்கிறது. நமது கைத்தொழிலாளர்கள் சூதும் வாதும் கற்றுப் பிறரை ஏமாத்தும் வழியைத்தெரிந்து கொண்டார்கள். நமது தேசம் வெகுநாளாய் ஜமுக்காளத்திற்குப் பெயர்போனது. வட இந்தியாவில் செய்யப்படும் இரத்தின கம்பளங்கள் 400 வருஷகாலம் வர்ணம் மங்காமல் வெகு அழகாய் இருக்கும். சுதேசத்துத் தாவரங்களினின்றும் இறக்கும் வர்ணம் வனப்பினை உண்டாக்கி வெகுநாள் நிற்கும் தன்மையுடையது. அப்படி இருக்க, மினுமினுப்புக்கும் பளபளப்புக்கும் புத்திமயங்கிச் சுதேசவர்ணங்களை விட்டு நிலக்கரி வாயுவிலி

*இந்து காலேஜ்பத்திரிகை, வால்யூம்—6, பக்கம்—185.

ருந்து வடியுந் தைல சம்மந்தமான காிபை வர்ணமாகக்கொண்டு நமது கைத்தொழிலாளர்கள் ரத்னகம்பளங்களை விருக்குகிறார்கள். இந்த முரட்டுவர்ணம் முதன் முதல் கண்ணைப் பறித்த போதிலும், அலக்ஷணமாயும் நாளடைவில் மங்கிப்போயும், வர்த்தகத்திற்கே இடையூறை உண்டாக்குகின்றது இதனை அறிந்து சிலர் இவ்விதமான வர்ணத்தை இனிமேல் இந்தியன் வர்த்தகர்கள் உபயோகப்படுத்தக்கூடாதென்று வற்புறுத்துகிறார்கள். ஆப்கானிஸ்தானத்துக்கு இவ்விதமான வர்ணந்தோடு கூடின இரத்தின கம்பளங்களை ஏற்றுமதி செய்யக்கூடாதாம். அவ்விதம் செய்தால், அதற்கு அபராதம் செலுத்தவேண்டும். ஒருவேளை மேற்படி கம்பளங்களையே அதிகாரிகள் ஜப்திசெய்து விடுவார்கள். காச்மீர தர்பாரிலும் அதேமாதிரி ஆஞ்ஞை பிறந்திருப்பதாகக் கேள்வி. இராஜ்ஜியத்தின் எல்லையைக்கடந்து உள்ளே இந்த ஜமுக்காளங்களை ஒருவன் கொண்டு வருவானானால், அவன் 100-க்கு 45-வீதம் சாமான் இறக்கும் வரி கொடுக்கவேண்டுமாம். எல்லையைக்கடந்து இராஜ்ஜியத்தின் உள்ளே ஒருவன் நிபந்தனையைமீறிக் கொஞ்சதூரம் வருவானாகில் அவன் கொண்டுவந்த வர்ணங்களை அதிகாரிகள் ஜப்திபண்ணி நாசஞ்செய்துவிடுவார்களாம். இவ்விதமான கொடுங்கோன்மை விதிகள் கூடாதென்பது நியாயமே! ஆயினும் ஒரு தேசத்தில் வழங்கிவந்த அழகும் கீர்த்தியும் வாய்ந்த கைத்தொழிற் சரக்குகளைக் கெடுக்க ஒரு பைசா பொருத போலிச்சரக்குகள் உள்நுழைந்தால், ஒவ்வொரு சமயம் இவ்வித ராஜாங்க நிபந்தனைகள் ஏற்படத்தான் வேண்டும்.

(இன்னும் வரும்)

பத்திராசிரியர்.

# இந்தியாவில் உடயோகித்துவரும் தறிகள்.*

## (1) இந்தியாவின் கைத்தறி நெசவு.

இந்தியாவிலுள்ள ஜனங்களின் பெரும்பாலார் விவசாயம் செய்து ஜீவிப்பவர்கள். இத்தேசத்தில் விவசாயத்திற்கு அடுத்தபடியாய் நிற்பது கைத்தொழில். அத்தொழில் இந்தியாவில் வெகுகாலமாக நடைபெற்று வருகிறது. எந்த தேசத்தவர்கள் முதல்முதல் நெசவுக்கு வேண்டிய கருவிகளைச்செய்தார்களென்று சொல்வது மிகவும் அசாத்தியமான காரியம். இவ்விஷயத்தைப்பற்றி கல்வியில் மிகத் தேர்ச்சிபெற்ற வித்வான்கள் ஒருவருக் கொருவர் பொருந்தாத அபிப்பிராயங்களைக் கொண்டிருக்கிறார்கள். ஒவ்வொரு தேசத்தவரும் அவரவர்கள் அனுபவத்தைக்கொண்டு ஒரு விதமான தறியை அவ்வவ்விடங்களில் செய்திருக்கலாம். இந்தியாவில் கைத்தறி மூவாயிர வருஷங்களுக்குமுன் எப்படி இருந்து நடைபெற்றதோ அப்படியே இப்பொழுதும் இருக்கிறது. காலத்துக்குத் தக்கவாறு மாறுபாட்டை யடையாமல் பவர் தறியோடு போட்டிக்கு நின்று இதுவரையில் நிலைபெற்றிருக்கின்றது. ஓர் இடத்தில் மிகுதியாக உண்டாக்கக்கூடிய பொருள்களை அவ்விடமிருந்து வேறு இடங்கட்கும் தேசங்கட்கும் விரைவிற்கொண்டுபோக நீராவிக் கப்பல்களும் புகைவண்டிகளும் இப்பொழுது ஏற்பட்டிருக்கின்றன. அப்படி அவைகள் ஏற்பட்டிருக்கிறபடியால் இங்கிலாந்தில் யந்திர வல்லமையால் நெய்யப்படுகிற வஸ்திரங்கள் பல நாடுகளுக்குச் செல்வதுமல்லாமல் இந்தியாவின் ஒதுக்கிடங்களிலுள்ள சிறிய கிராமங்களிலும் கொண்டுவந்து சேர்க்கப்படுகின்றன. இப்படி நாள்தோறும் வஸ்திரங்கள் கொண்டுவந்துசேர்க்கப்படுகின்றமையாலும் சொற்ப விலைக்கு விற்கப்படுகின்றமையாலும் நம் நாட்டுக் கைத்தறியில் வேலைசெய்பவர்களுக்குக் கூலிகூடக்கிடைக்காமல் தாங்கள் நெய்த வஸ்திரங்களைக் குறைந்தவிலைக்கு விற்கும்

* காசிநகரத்தில் நடந்த கைத்தொழிற் சங்கத்தில் பரோடா ராஜாங்க வியவசாய கைத்தொழில் டைரக்டர் ஆகிய மிஸ்டர் ராவ்ஜி பி. பீட்டல் அவர்கள் செய்த உபந்நியாசத்தின் கருத்து.

படி நேரிடுகிறபடியாலும் அக்கைத்தொழில் இவ்விந்து தேசத்தில் மிக ஹீனஸ்திதியை யடைந்து வருகிறது. அது அழியாது நிலைத்து நிற்பதற்கு வேண்டிய முயற்சி செய்யவேண்டும். அப்படிச் செய்யத் தவறுவோமாயின் ஐரோப்பாவில் கைத்தறிக்கு நேரிட்ட விபத்தே இந்தியாவின் கைத்தொழில் நெசவுக்கும் சீக்கிரத்தில் நேரிடுமென்பதிற் சந்தேகமில்லை. வெள்ளம் வருமுன்னே அணைபோடவேண்டும். மிகு வெள்ளம் வந்தபின் அணைபோடுதல் அசாத்தியமான காரியம். ஆதலால் நாம் நம் நாட்டின் கண் உபயோகப்படுத்திவரும் தறிகளைச் சீர்திருத்துவதிலும் அபிவிருத்திசெய்வதிலும்அத்தொழில் செய்பவர்களுக்குப் பலவித சாதகஞ்செய்வதிலும் முயற்சிமேற்கொள்ளல் வேண்டும். நமது தேசத்திலுள்ள கைத்தறி வேலைக்காரர்கள், பஞ்சு, பட்டு, ரோமம், இவைகளைக்கொண்டு ஆடைகள் நெய்து வருகிறார்கள். ஆயினும் நம் நாட்டின் கண் மிகுதியாக நெய்யப்படுவது வஸ்திரமே. நம்மவர்களுக்கு மிகவும் தேவையாயிருப்பதுவும் அதுவே. ஆதலால் பஞ்சாடைகளை நெய்வதில் நம்முடைய முழு எண்ணத்தையும் செலுத்தி நாளுக்குநாள் அபிவிருத்தியாகும்படி செய்யவும் மிகச் சொற்பவிலைக்கு எளியவர்களும் நம்நாட்டு வஸ்திரங்களை வாங்கும்படிச் செய்யவேண்டிய உபாயங்களைத் தேடவும் நாம் கடமைப்பட்டவர்களா யிருக்கிறோம்

## (2) வேலைசெய்பவர்களின் தொகை.

1901ஆ௵ எடுத்த ஜனசங்கைக்கணக்கின் பிரகாரம் இந்தியாவில் நெசவுக்கைத்தொழில் செய்பவர்கள் 27 லக்ஷம் பேர்கள். அவர்களுக்கு உதவிபுரிந்து ஜீவித்து வருகிறவர்கள் 27 லக்ஷம் பேர்கள். இதற்கு 10, 20, 30, வருஷங்களுக்குமுன் எடுக்கப்பட்ட ஜனசங்கைக்கணக்கினோடு ஒப்பிட்டுப்பார்த்து இப்பொழுது எவ்வளவு கைத்தறி வேலைக்காரர்கள் அத்தொழிலை விட்டுவிட்டார்களென்று அறிவது மிகவும் கஷ்டமாயிருக்கிறது. ஏனெனில் ஜனசங்கைக் கணக்கு எடுத்த ஒவ்வொரு தடவையிலும் அக்கணக்கின் அட்டவணைகள் வேறுபாடு அடைந்தவைகளா யிருக்கின்றன. இதற்குமுன் எடுக்கப்பட்ட கணக்குகள் கைத்தொழில் வேலைசெய்பவர்களின் சங்கையைப் பிரத்தியேகமாக எடுத்துக்காட்டவில்லை. கடைசித் தடவையில் எடுத்த கணக்கு நெசவுக்கைத்தொழில் வேலைசெய்பவர்களின் இருப்பிடம் கூறவில்லை. மேனாட்டு நெசவுச்சரக்குகள் இந்தியாவில் வரத் தலை



மயபடுத்தபின் நெசவுக் கைத்தொழில் நாளுக்குநாள் தாழ்ந்த நிலைமைக்குப் போய்க்கொண்டு வருகிறதென்பது யாவருக்கும் நன்றாகத்தெரிந்த விஷயமே.

## இந்தியாவில் நெசவுத்தொழில் செய்கின்ற ஜாதியார்களின் இருப்பிடம், சங்கை.

| கைத்தொழில் செய்பவர்களின் ஜாதி. | மாகாணம். | 1901-ல் சங்கை | 1901-ல் எடுத்த ஜனசங்கையோடு ஒப்பிட்டதில் 100-க்கு ஜாஸ்தி அல்லது குறைவு | 1901-ல் எடுத்த ஜனசங்கையோடு ஒப்பிட்டதின் நெசவுத்தொழில் ஜாதியாரின் 100-க்கு ஜாஸ்தி அல்லது குறைவு. | நெசவுத்தொழில் செய்யும் ஜாதியார்களில் அத்தொழிலையே செய்பவர்கள் 100-க்கு எவ்வளவு. |
|---|---|---|---|---|---|
| தாந்தியர் தத்வாயர் | பங்காளம் | 946,463 | +4 | +18 | 38 |
| சாலியரும் கோஸ்தியரும் | பம்பாய் | 141,052 | —2 | +9 | 63 |
| கோஸ்தியர், பாங்கர் | மத்திய மாகாணம் | 136,079<br>137,855 | —9 | $-1\frac{1}{4}$<br>—15 | 73<br>27 |
| கைக்கோளர், சாலியர் | பட்டணம் | *<br>325,912 | +7 | *<br>$+5\frac{3}{4}$ | 59<br>69 |
| ஜூலஹார் | வடமேற்கு மாகாணங்கள் டை | 923,042 | $+2\frac{1}{2}$ | $+2\frac{1}{4}$ | * |
| கோரியர் | | 995,680 | | $+7\frac{3}{4}$ | * |
| ஜூலஹார் | பஞ்சாப் | 695,216 | +7 | +4 | * |

1891ஆ௵ முதல் 1901ஆ௵ வரையில் நெசவு வேலைக்காரர்கள் சங்கையில் மற்ற இதர இனங்களைப்போல் குறைவுபடாமல் நிலைத்திருந்தார்கள். ஆயினும் மத்ய மாகாணத்தில் வசிக்கின்ற ஜனங்கள் பஞ்சத்தால் கஷ்டப்பட்டமையால் 100-க்கு 9-வீதம் அவ்விடத்தில் வசிக்கும் ஜனசங்கை குறைந்தது. அதனால் அவ்விடத்தில் நெசவுவேலை செய்து ஜீவிக்கின்ற பாங்கர்

களின் ஜனத்தொகை 100-க்கு 15-விதம் குறைந்தது. மேலும் இச்சாதியாரில் 100-க்கு 27-பேர் தவிர மற்றவர்கள் யாவரும் தங்கள் முன்னோர்களின் கைத்தொழிலாகிய நெசவுத்தொழிலைக் கைவிட்டு வேறு வேலை மேற்கொண்டார்கள். இவ்விதமாகத் தங்கள் முன்னோர்களின் கைத்தொழிலைக் கைவிட்ட நெசவு வேலைக்காரர்கள் பாங்கர்களுக்கு அடுத்தபடியில் வருகிறவர்கள் வங்காளத்திலுள்ள வேலைக்காரர்களே. அவர்களில் 100-க்கு 38விதம் தவிர மற்றவர்கள் தங்கள் முன்னோர்களின் கண்ணியக் கைத்தொழிலைக் கைவிட்டு வேறு தொழில்களில் புகுந்தார்கள். ஆனால் பம்பாயிலோ அப்படியல்ல. இதரநாட்டின் சரக்குகளின் போட்டியும் பவர்தறிகளின் போட்டியும் பம்பாயில் மிகுதியாக ஏற்பட்டிருந்தும் நெசவுத்தொழில் செய்பவர்களில் 100-க்கு 67-பேர்கள் நெசவு வேலையே இப்பொழுதும் செய்துகொண்டு வருகிறார்கள். மத்யமாகாணத்திலுள்ள நெசவுத்தொழிலைச் செய்கின்ற மற்றொரு ஜாதியாராகிய கோஸ்தியர் என்பவர்கள் 100-க்கு 73-க்குக் குறையாமல் தங்கள் ஜாதித்தொழிலைக் கைவிடாது நடத்திவருகிறார்கள்.

## (3) கைத்தறிகளில் நெய்யப்படும் வஸ்திரம்.

இப்பொழுது இந்தியாவில் கைத்தறியில் செய்யப்படும் வஸ்திரத்தின் ஓர் அளவை அறிவது மிகவும் கஷ்டமாயிருக்கிறது. மிஸ்டர் ராபர்ட்ஸன் என்பவர் இந்தியாவின் 1904-05 வருஷத்து வியாபாரத்தைப்பற்றி யெழுதிய அறிக்கைப்பத்திரத்தில் கைத்தறியில் நெய்யப்படும் வஸ்திரம் பவர்தறியில் நெய்யப்படும் வஸ்திரத்தின் அளவைவிட இரட்டிப்பளவு உள்ளதென்று கூறியிருக்கிறார். பவர்தறியில் நெய்யப்படும் வஸ்திரம் 15·87 கோடி பவுண்டு நிறையுள்ளது. அதின் நீளம் 67-கோடி கெஜம். ஆதலால் கைத்தறியில் நெய்யப்படும் வஸ்திரம் 31·64 கோடி பவுண்டு நிறையுள்ளது. அதன் நீளம் 134 கோடி கெஜம்.

இதர தேசத்தினின்று வரும் நூல் 2·75 கோடி பவுண்டு நிறையுள்ளது. இந்தியாவிலுள்ள பஞ்சயந்திர சாலையில் நூற்கப்படுவது 56·84 கோடி பவுண்டு நிறையுள்ளது. இந்தியாவினின்று பிரதேசங்களுக்கு ஏற்றுமதியாகும் நூல் 25·01 கோடி பவுண்டு நிறையுள்ளது. ஆகவே இந்தியாவில் வருஷமொன்றுக்குச் செலவாகும் நூல் 35·58 கோடி பவுண்டு நிறையுள்ளது.



சந்தை நடக்கும் இடங்களுக்கும் ரயில் ஸ்டேஷன்களுக்கும் வெகு தொலையிலுள்ள பலவிடங்களில் இப்போதும் நூல் கைராட்டினங்களால் இழைக்கப்படுகிறது. பஞ்சயந்திர சாலைகளில் இழைக்கப்பட்ட நூல் வஸ்திரம் நெய்யப்படுவதுமல்லாமல் இன்னும் பல வேலைகளுக்கும் உபயோகமாகிறது. அப்படி உபயோகப்படும் நூலின் அளவும் கைராட்டினங்களால் இழைக்கப்படும் நூலினளவும் சமமென்று தள்ளிவிடுவோம். ஆதலால் ராபர்ட்ஸன் என்பவர் உத்தேசமாகச் சொல்லிய நூலினளவும் சரியேயாம். வருஷமொன்றுக்குக் கைத்தறியில் நெய்யப்படும் வஸ்திரத்தினளவு 150-கோடி கெஜத்திற்கு அதிகப்படா. வருஷமொன்றுக்கு 300 நாள் விதம் 27 லக்ஷம் வேலைக்காரர்கள் நெய்கின்ற வஸ்திரத்தினளவு 150 கோடி கெஜமென்றால் அதினின்று நாம் அறிவது யாதெனில், நாளொன்றுக்கு ஒரு வேலைக்கரன் நெய்யும் வஸ்திரத்தினளவு $5\frac{1}{2}$ அடி. இது மிகவும் கொஞ்சமாக நெய்யப்படுகிறபடியால் இவ்விஷயத்தைப்பற்றித் தீர்க்க விசாரிக்க வேண்டும்.

## (4) நமக்குத் தேவையாகும் வஸ்திரத்தினளவு.

இதர நாட்டினின்றும் 1904-05ல் இறக்குமதியான வஸ்திரத்தினளவு 228 கோடி கெஜமாம். நம் நாட்டுப் பவர்தறிகளில் நெய்யப்படும் வஸ்திரத்தினளவு 67-கோடி கெஜம். வெளிநாடுகளுக்கு ஏற்றுமதியான 17 கோடி கெஜம் போக நம் நாட்டிலேயே உபயோகிக்கபட்டது 278-கோடி கெஜம். இத்தேசத்தின் ஜனசங்கை $29\frac{1}{2}$-கோடி. வருஷமொன்றுக்கு ஆளுக்குச் சராசரி 15 கெஜம் விதம் நம் நாட்டிலுள்ளவர்களுக்கு வேண்டிய வஸ்திரத்தினளவு $442\frac{1}{2}$-கோடி கெஜம். இத்தேவைக்கும் பவர்தறிகளாலும் இறக்குமதியாலும் இந்நாட்டிற் களிக்கப்பட்ட வஸ்திரத்தினளவுக்குமுள்ள தாரதம்மியம் $164\frac{1}{2}$- கெஜம் இது கைத்தறிகளாலேயே நெய்யப்பட்டிருக்கவேண்டும். இந்தக் கணக்கின் பிரகாரம் ஒவ்வொரு வேலைக்காரனும் நாளொன்றுக்கு நெய்யவேண்டிய வஸ்திரத்தினளவு மேலேகாட்டிய அளவைவிட 6 அங்குலந்தான் அதிகப்படுகிறது.

(இன்னும் வரும்.)

K. இராமானுஜ ஐயங்கார்.

# பாண்டிநாட்டுப் பழய பௌத்தப் பள்ளிகள்.

(145-ம் பக்கத் தொடர்ச்சி.)

இப்பொழுது அவ்வுருவம் சுற்றுமதிலும் மேலாவரணமுமின்றி நடுப்பிரகார மைதானத்தில் நிற்கின்ற நிலையைக் கண்ணுற்றால் முற்காலத்தில் இதற்கோர் பேராலயம் அமைந்திருத்தல் வேண்டுமென்பதும் அவ்வூரும் பௌத்தர் ஊர் ஆகல் வேண்டும் என்பதும் சிற்சில அறிகுறிகளாலும் இப்பொழுது அவ்வூரார் கூறுமொரு சிறு வரலாற்றாலும் நன்கு விளங்காநிற்கும். இப்பொழுது அவ்வூரிலிருக்கின்ற வள்ளியம்மை கோயில் சிறிது காலத்திற்கு முன்னேதான் கட்டப்பட்டுள்ளதென்பது காண்பார் யாவருக்குந் தெற்றெனவிளங்கும். கர்ப்பக்கிரகமாகிய குகைமாத்திரம் பழமையாயிருக்கலாம். ஆகவே அவ்வூரிலுள்ள கால்வாய் குளம் மற்குமடை முதலானவைகளில் அமைத்துக் கட்டப்பட்டிருக்கிற கற்களெல்லாம் கோயிற்குரிய தூண்போதிகை உத்திர முதலியவைகளாகத் தென்படுகின்றன. அவைகளோ மிகப் பழயன. சிற்சில கற்கள் எழுத்துக்களமைந்துள்ளனவாயினும் பழமையாலும் வரிப்பிரிவினாலும் பாதுகாப்பின்மையாலும் எழுத்துக்கள் சிதைந்தும் உடைந்தும் மழுங்கியும் போயின வாதலாற் படித்தற்கியலாவாயின. இப்பழய கற்கள் இங்கு எவணின்று வந்ததெனச் சற்று ஆராய்வோமாயின் முற்கூறிய பௌத்த தெய்வத்தின் பேராலயமென்றே நன்கு துணிவோமேயன்றி வேறல்ல. அவ்வாலய மிவ்வாறானதற்குக் காரணம் அடுத்த பத்திரிகையிற் கூறுதும். இவைநிற்க, சற்றேறக்குறைய நாற்பது வருடங்களுக்கு முன்னர் அவ்வள்ளியூரில் ஞானியார் வாத்தியாரென்ற ஓர் சைவவேளாளர் இருந்தனர். அவர் தினப்படி பூசை செய்யுங்காலமெல்லாம் அவர் மனைவியடுத்து நின்று அப்பூசைக்குரிய பொருள்களெல்லாம் அற்றம் நோக்கி எடுத்துதவுதல் வழக்கம். இவ்வாறு நிகழுகையில் ஒருநாள் அவ்வூரில் வாசஞ்செய்துகொண்டிருந்த மகம்மதியர்யாவரு மொருங்கு கூடிமொகரம் பண்டிகையன்று கடலொலிபோற் பறையொலியெழுப்பி வீதிவழி வந்ததினால் அப்பிள்ளையவர்கள் மனைவியை நோக்கி



யாதோவொன்று புகல, அம்மொழி அம்மாதின் செவியிற் புக்கிலது. ஆகவே அச்சைவர் அப்பறையொலியப்பாற் சென்றதின் பிறகு பூசைமுகத்தினின்று கூறியதாவது. கடவுளே, வெகு காலத்திற்கு முன்னர் இங்கு பௌத்தர்கள் நெருங்கி வாசஞ்செய்ததால் இவ்வூர் பள்ளியூரென்ற பெயர்பெற்றிருந்தது. அப்பாற் பௌத்தர்போய்ச் சைவர் குடியேறிய காலத்திற் பள்ளியூர் வள்ளியூராயது. இனி மகம்மதியர் நெருங்குவதால் அவர் பெயராலும் இவ்வூர்ப்பெயர் வழங்கும்போலும் என்றனராம்.

ஆகவே இக்கதையாலும் முற்கூறிய சின்னங்களாலும் அவ்வள்ளியூர் ஆதியிற் பள்ளியூராய்ப் பௌத்தர்கட் குறைவிடமாயிருந்ததென்பது தெற்றென விளங்காநின்றது.

இஃதன்றியும் திருநெல்வேலிக்குக்கிழக்கில் ஒருகாததூரத்திலிருக்கின்ற புத்தனேரி என்ற கிராமமும் பௌத்தர்கட் குறைவிடமாயிருந்ததெனச் சிற்சில காரணங்களாற் பற்பலர் கூறுகின்றனர். அவர்கள் அவ்வாறு கூறுகின்றதி னுண்மையை அவ்வூரின் பெயரே நன்கு விளக்குகின்றது.

ஆகவே பாண்டிநாட்டின் மேற்றிசைக் கண்ணுள்ள மன்னார் கோயிலுக்கடுத்த பிரதேசங்களிலும் தெற்கிற்குமரிப்பதிக் கணித்தான ஊர்களிலும் கிழத்திசையிற் பற்பல இடங்களிலும் பண்டைக்காலத்திற் பௌத்தர்கள் வசித்துவந்தார்களென்பது திண்ணமேயாம். (இன்னும் வரும்)

பாரதியார், அம்பா சமுத்திரம்.

---

# வைதிகமாகிய இருமீமாம்ஸா மதங்கள்.

(137-ம் பக்கத் தொடர்ச்சி.)

இரண்டாவது அத்தியாயத்தில்மறுபடி (இன்னமொருக்கால்) கபில சாங்கியத்தையும், பதஞ்சலியின் யோக சாஸ்திரத்தோடும், கணாதருடைய பரமாணு மதத்தோடும், நிராகரிக்கின்றார். சர்வஜகத்தும் பிரம்மாதீனம்; இப்பிரமமே காரண காரியமுமாகும். காரணத்துக்கும் காரியத்துக்குமுள்ள வித்தியாசமும், பல்வேறு காரியங்களின் வித்தியாசமும் ஒருவாற்றானும் கார

ணத்தின் அகண்டத்துவத்துக்கு விரோதம் கற்பிக்காது. கடல என்னும் பதம் அதன் நீரன்றி வேறல்ல, (வற்றைக்குறிக்காது); ஆயினும் அலை, நுரை, திவலை, துளி, கணம் முதலிய வேறுபாடு களாய் மாறுபட்டுத்தோன்றுகின்றன (II. I. 5); பால், தயிரா வது போலும், நீர் பனியாவது போலும், பிரமம்பலவேறுபாடு அடைகிறது.

பிறகு, சாங்கியமும், வைசேஷிகமும், பௌத்தமும், ஜைன மும், பாசுபதமும், பாஞ்சராத்திரமும் என்பவற்றின் கொள்கை ளை மறுக்கிறார்; நியாயத்தை மாத்திரம் கவனிக்காது விட்டார்.

ஆத்மா அசேதனம் என்று சொல்லும் சாங்கியர்கள் போல ல்லாமல் (பாதராயணர்) இதை சேதனம் என்கிறார். ஆயினும் இதன் சைதன்னியம் அகஸ்மாத்தாய் நேரிடுவது. தச்சன் கையில் கருவிகளை யெடுத்தானேயாயின் வேலைசெய்து இளைத் தல் போலவும், அவைகளை வைத்துவிடுவானாகின் வேலையினின்று நீங்கி இளைப்பாறுவதைப் போலவும், ஆத்மாவானது இந்திரியம் களோடும், அவைகளின் ஆஸ்தானங்களோடும், சம்பந்தப்படின் சேதனமாயும், பிறியின் அசேதனமாயும் ஆய்விடுகிறது. நெருப் புக்குப்பொறி எவ்வாறோ அவ்வாறே பரமாத்மாவுக்கு ஜீவாத்து மாவும். அசையும் நீரின் பரப்பில் படியும் சூரிய பிம்பம், அந் நீரின் அசைவுக்குத் தக்கபடி தானும் அசையா நிற்கும். ஆயி னும் (இவ்வாறு தானிவ்விடத்தசைதலால், சலனமில்லாமலிருக் கும்) மற்ற நீர்ப்பரப்பினுண்டாகும் பிரதி பிம்பத்தையாவது, சூரியனையேயாவது பாதிக்காதிருத்தல் போல, ஒரு ஆத்மாவினு டைய சுகதுக்கங்கள் மற்றொரு ஆத்மாவையாவது பரமாத்துமா வையாவது பாதிப்பதில்லை. சரீரத்தின் அங்கங்களும், அவைக ளின் சேதன சக்தியும் பிரம்மத்தின் கூறுபாடுகளே.

தேஹாந்தரப்பிராப்தியையும், ஞானமடையும் மார்க்கத்தை யும், முக்தியையும் பரமாத்மாவின் குணங்களையும் பற்றி மூன் றாம் அத்தியாயத்தில் சொல்லுகிறார். ஒரு நிலைமையிலிருந்து மற் றொன்றுக்கு மாறுங்கால் ஆத்மாவானது ஒரு சூக்ஷ்மசரீரத்தில் புகுந்து தேஹாந்தரப் பிராப்தி அடைகிறது. ஒரு தேகத்தை விட்டு வெளிப்படும்பொழுது ஆத்மா சந்திரனிடஞ்சென்று தன் நிரு வினைப்பயன்களை அவ்விடத்தனுபவித்து பூர்வ கர்மத்துக் கேற்ற மற்றோர் சரீரத்தில் அடைபடத்திரும்புகிறது. பாபிகள்



கர்மானுசாரம் பலனடையவேண்டி ஏழு நரகங்கள் ஏற்படுத்தப் பட்டிருக்கின்றன. திரும்பிவருங்கால் ஆத்மா. ஆகாசம், வாயு, ஆவி, பனி, மேகம், மழை முதலியவையாய்ப் பின் ஒரு செடி யில் நுழைந்து, அதினின்றும் அதையுண்ணும் ஜந்துவின் கர்ப் பத்தில் புகுகிறது. செம்பருத்தம்பூவின் சாயமேற்றப்பட்டிருப் பது போலத் தோன்றும் ஸ்படிகம் தன்னியற்கைத் தெளிவை மாறாதுபோல பரமாத்துமா மாறுபாடில்லாதவரும் உலகத்தின் மாறுபாடுகளால் பாதிக்கப்படாதவருமானவர். இப்பரமாத் துமா சுத்த அறிவு, ஞானம், புத்திஸ்வரூபி.

ஒன்றாயிருப்பினும் சூரியன் முதலிய தேஜசுகள், பிரதி பிம் பித்தலால் பலவாய்த் தோன்றுவது போலவும், அனேக பாத்தி ரங்கள் தன்னிடையில் புகுதலால் ஏகாண்டமாயிருக்கும் இடத் தைத்தத்தம்முள் கூறுபடுப்பதுபோலவும், பரமாத்துமா உள்ளும் புறமும் மாறுபாடற்றிருக்கிறார். பரமாத்மாவைத்தவிர மற்றொ ன்றும் கிடையாது. (இதுகாறும் கூறியவற்றினின்றும்)வேதாந்த மானது உபநிஷத்துக்களினின்று நியாயமாயும் நேராயும் உண் டானதென்றும், உபநிஷத்துக்களில் கூறுவதுபோல எல்லாம் ஒன்று என்னும் தத்துவத்தை வெகுவாய் பிரசம்சிக்கிறது என்றும் அறியலாம்.

இந்த அதிகரணத்தில் பின்பாதியில் தெய்வஞானத்தைய டைய சாதகமாகிய பக்திமார்க்கத்தையும் குறித்து விவரிக்கிறது.

சரியாய் நடத்திவரும் தியானத்தின்பலனையும், தெய்வஞான த்தையடைவதையும் பற்றி நான்காவதும் கடைசியுமாகிய அதிக ரணத்தில் சொல்லியிருக்கிறது. மேற்கூறிய (தெய்வ) ஞானம டைந்தவுடன் முன்செய்த பாவங்கள் ழிந்து, பின்னிகழும் பாவங்களும் நீங்கி விடும். இவ்வாறே புண்ணியத்தினுடைய வும் தர்மத்தினுடையவும் பலன்களும் நீங்கிவிடுகின்றன. தெய்வ ஞானமடைந்த ஆத்மா தான் பரிபக்குவமடைவதனால் இருவினை களைத்தரும் கர்மங்களையொழித்தும், முன்செய்த பாவபுண்ணி யங்களுக்குப் திபலனாகத்துக்கசுகங்களை அனுபவித்தும் இறந் தபின், பரப்பிரமத்துடன் ஐக்கியமாக ஏகின்றது. இதுதான் வேதாந்திகளுடைய முக்தியின் லக்ஷணம்.

இதன்றிக்கே இன்னமிரண்டு வகைச்சாமான்னிய முக்திக ளுள. அவற்றுள் முதலாவது பிரம்மாவினுடன் கலந்து உட

னே ஐக்கியம் பெருவிடினும், பிரம்மலோகமடைதற்கேற்றபடி ஆத்மா பரிபக்குவமடைவது. இரண்டாவதும், முன்னதிலும் குறைவுப்பட்டதாகியவுமான, ஜீவன்முக்தியென்பது யோகிக ளால் இம்மையிலேயே யடையக்கூடியது. இதனால் இறந்தவர் கள் ஆவியையழைப்பிப்பதும், பரகாயப்பிரவேசம் செய்வதும், நினைத்தவிடத்து உடனே செல்லுதலும், முதலானவற்றைப்போ ன்ற, சாதாரண ஜனங்களுக்குக்கூடாத காரியங்களைச்சாதிக்கக்கூ டும் இது முன்னதிகாரத்தில் குறித்த யோக சாஸ்திரத்தின் கட்டுக்களையே மறுபடியும் கூறுகிறது.

வேதாந்தத்தின்படி பகவானுடைய குணங்க ளின்னின்னவை யென்பதை கோல்புருக் துரை யடியில் வருமாறு தொகுத்தெழு துகிறார். "கடவுள் சர்வஞ்ஞரும்,ஜகத்சிருஷ்டி, ஸ்திதி, சம்ஹார ரகாரணருமாயிருப்பவர். சிருஷ்டி இவர் இச்சா மாத்திரத்தால் ஆவது ஜகத் சிருஷ்டிக்கு இவர் முதற்காரணமும், துணைக்கா ரணமுமானவர் ; உண்டாக்குபவரும், பிரகிருதியும் இவரே ; கற்பிக்கிறவரும் கற்பனையும் இவரே ; செய்பவரும் செயலும் இவரே ; அந்தியகாலத்து எல்லாப்பதார்த்தங்களும் இவருள்ள டங்கும். பரமாத்துமா ஒருவரே, தனியானவர், ஒப்பற்றவர், அழிவில்லாதவர், மாறுபாடாற்றவர் ; சமஸ்தத்தையும் ஆட்டுவிப் பவர், சர்வாந்தர்யாமி ; சத்தியம், ஞானம், புத்தி, சுகம் (முத லியவற்றின் சுவருபி).

பிரம்மத்தைத்தவிர ஜகத்தாதி யெல்லாம் மாயாஸ்வரூபம் என்னும் கொள்கை நாளடைவிலேயே பிற்காலத்திய வேதாந்தி களின் மனதில் குடிகொண்டது. இம்மாயை யென்பது பொய்த்தோற்றம்; அஃதே, ஒரு மித்தியாஞானமே. இப்பேர்ப்பட்ட கொள்கை பழைய வேதாந்தத்திலில்லை: இதற்கு ஆதாரம் பழங்கிரந்தங்களில் கிடையாது. ஜகத்தானது பிரம்மாவின் ஒரு பாகம்; அவரிடமிருந்து தோற்றி அவரிடம் அடங்குகிறது என்று பழைய வேதாந்தத்தில் சொல்லுகிறதேயொழிய இவ்வா றுதோன்றும் ஜகத்தானது மித்தியை வாஸ்தவ்வியமில்லாத தென்று கூறப்படவில்லை.

இந்தியாவில் புத்திப்பிரமாண்ணிய காலத்தில் ஏற்பட்ட ஷட் தர்சனங்கள் இவைதாம். கடவுள் என்பதும், ஜகத்தென்பதும் எப்பேர்ப்பட்டன என்று தன்னுள்ளே நிதானித்து யோஜிக்



கும் ஒவ்வொரு மனிதனுக்கும் ஏற்படும் சங்கைகளாகிய உபநிஷ தத்தில் கிளப்பிய சங்கைகளுக்கு இந்து சித்தாந்திகள் இவ் வாறு உத்தரமளித்தனர்.

மற்ற விஷயங்களுக்கும், 'புத்திப்பிரமாண்ணியகாலம்' வெ கு விசேஷமானது என்பதைக்குறித்து ஒவ்வொரு இந்துவும் சந்தோஷிக்கத்தக்கதே. இக்காலத்துத்தான் (இராமாயணம், பாரதம் என்னும்) இருபெருங்காவ்வியங்களும் காவ்விய ரூப மாய் எழுதப்பட்டிருத்தல்வேண்டும். இதேகாலத்துத்தான் அப் பொழுதே கிளம்பின க்ஷேத்திரகணிதமும், வியாகரணமும், இந்துக்களால்கண்டு பிடிக்கப்பட்டு உலகத்தார்க்கு பிரசுரப்படுத் தப்பட்டன. இப்பொழுதேதான், முதல் முதல் கொடுக்கப்ப ட்ட மானஸசாஸ்திரமும் தர்க்கமும் சிந்திக்கப்பட்டு முடிவு பெற் றன. இந்தக்காலத்துத்தான் சட்டதிட்டங்கள் சாஸ்திரோக்த மாய்த்தொகுக்கப்பட்டன. இதேகாலத்து வடஇந்தியா முழுவ தும் பரபலமானவலும் பராக்கிரமசாலியுமான ஓரே சக்கிரவர் த்தியி னரசாக்ஷிக்குட்பட்டது. தரமானவும், நாகரீகமானவு மோர் ராஜ்ஜிய பரிபாலன முறையும் ஏற்பட்டது. தவிரவும், கடைசியாக, இக்காலத்திலேயே பரமஹம்ஸரான கௌதமபுத்தர் அவதரித்துத் தன்மதமாகிய சர்வஜனசாமாண்ணியத்துவமும் சகோதரத்துவமும் ஸ்தாபித்தார் : இதுவே இப்பொழுது மனு ஷ சமூகத்தின் மூன்றிலொன்றிற்கு மதமாயிருக்கிறது. இப் போவதாரத்தைக்குறித்தெழுதுவோம்.

து. அ. கோபிநாதராவ், M. A.

---

# தமிழ்நூல்களும் நூலாசிரியர்களும்.

## 9. வீரசோழியம்.

(144-ம் பக்கத்தொடர்ச்சி.)

இவையேயன்றி புறநானூறு, களவழி நாற்பது, கார்நாற்பது ஐந்திணை, கலித்தொகை, குறுந்தொகை, குண்டலகேசியும், கூறியுள (பக்கம் 183). பின்னும் தொல்காப்பியனார், அமுதசாக ரனார், காக்கைப்பாடினியார், மயேசுரனார், திருவள்ளுவர், பல்கா யனார், தண்டியார் முதலிய பழயவாசிரியர்களையும் ஆங்காங்கு

மேற்கோளாய் எடுத்துக் காட்டியிருக்கிறது. நியாய சூடாமணி புதியர்நுட்பம் என்னும் இரண்டு நியாயக்கிரந்தங்களும் கூறப்பட்டுள்ளன.

இவ்வுரையில் கூறியிருக்கும் இடப்பெயர்கள் அடியிற்காட்டியுள்ளோம்:—

வேங்கடம், குமரி, காவிரி, நாகப்பட்டணம், தஞ்சாவூர், உறையூர், அரங்கம், பாலாறு, மாடக்கூடல், கொற்கை, அத்திகிரி, இடைசுரம், திருவெண்காடு; புள்வேளூர், கங்கை, பழையாறை, இலங்கைப்பதி, மருதூர்; புலியூர்வஞ்சி, கச்சி, ஆலவாய், கூடல்சங்கம்.

மேற்காட்டியபோல் இன்னம் பற்பல நூல்களினின்றும் எடுத்தாண்டமேற்கோள்களைத் தெரிந்தெடுத்துக்காட்டும் தமிழ்ப்பண்டிதர்கட்கு ஆங்கிலமுணர்ந்தவர்களும், சரித்திரக்காரர்களும்மிகக் கடமைப்பட்டவர்களாயிருப்பார்கள்.

பழமையான நூல்களை என்று முற்பக்கங்களில் தெரிவித்தவை சாதாரணமாய்த் தமிழ்வித்வான்களுக்கும் எமக்கும் கர்ண பரம்பரையாய்ப் பழமைப்பட்டதே என்று தெரிந்திருந்தபோதிலும், இங்கிலீஷ்மாதிரியாராய்வோர்க்கு இவ்வாறு காலந்தெரிந்த நூலில் மேற்கோளாக எடுத்துக்காட்டப்பட்டிருக்கின்றனஎன்று ரூபித்தாலன்றி, பழங்கதையில் நம்பிக்கைவாராது. அதையிட்டு அந் நூல்களின் விஷயத்தைப்பற்றிப் பேசத்துணிந்தோம்.

தமிழ்நூல்களை யன்றி தமிழ் நாட்டரசர்களைப்பற்றி ஆங்காங்கு புகழ்ந்த பாடல்களும் பல காணப்படுகின்றமையின் இவ்விலக்கணம்மற்றும் விசேஷமானது. அவ்வாறு புகழப்பட்ட பாடல்களுள் பெரும்பான்மை சோழராஜர்களைப்பற்றியவை. சிற்சில பாண்டியர்களைப் புகழ்கின்றன. சிற்றரசர்களுக்கும் சில பாகங்கள் உள.

அவற்றுள் சோழனைப்பற்றிப் பாடும் பாட்டுகளில் இன்ன சோழனைப்பற்றியது என்று விளங்காதவை பல. வெறும் 'காவிரிநன்னாடன்' 'கோழிபுனனாடன்' 'பொன்னிகாவலன்' 'மன்னனேரியன், சென்னிமானதன், கன்னிகாவலன், பொன்னிநாயகன்' எனப் பல விடங்களில் வருகின்றன. சிற்சில பாட்டுக்கள் இன்னின்ன அரசர்களைப்பற்றியேயென்று நிச்சயமாய்ச்சொல்லலாம். அப்பேர்ப்பட்டவற்றுள் இவ்வுபந்நியாசத்தின் 139-41 ஆ



வது பக்கங்களில் வரைந்துள்ள மூன்று செய்யுட்களும் வீரராசேந்திரன் என்னும் சோழச்சக்கரவர்த்தியினுடையவை என்று கூறினோம். இவ்வரசனைப்பற்றிய பாடல்கள் இன்னம் சில உள. அவைவருமாறு.

"வினைதேர்வீர சோழனலர்வனம் வானரிமாரனுலையோ மணிவீர நாரயணனேவது என்னுந் தமிழ்க்கூட சதுக்கமும், வீரத்தால்விண்ணுதல் மெய்த்தவத்தால் வீடாத, லாரத்தா லாள்வதெவர் தாடேறச்—சீரொத்த, மின்னார் படைத்தடக்கை வீரராசேந்திரனுக், கொன்னாராய் வாழ்வ தறின்" (ப. 187) என்றும்

"அருமொழிதன் கோயி லடலரசர் மிண்டித்
திருமகட் குக்கொடிக டேய்த்த—பருமணிக
ளோதத் தமுதனைய வொண்ணுதலார் மென்மலராம்
பாதத்தி னான்றும் பரல்."

என்று (அருமொழி தேவன் என்னும் மறுநாமம் பூண்ட) முதல் ராஜ ராஜதேவனைப்பற்றியும் [4] (பக்கம் 150),

"திருமன்னிவளருமிருநில மடந்தையும் போர்ச்செய்ய பாவையுஞ் சீர்த்தனிச்செல்வியு [5] (பக்கம் 118),

---

4. இவ்வரசன்பேரால் ஏற்பட்ட அநேக நாடுகளில் அருமொழிதேவ வளநாடென்ற சாதனங்களுக்குத் தெரிந்ததொன்றுண்டு.

5. இது இராஜேந்திரசோழன் மெய்க்கீர்த்திக்கு அடி. அது வருமாறு:— திருமன்னிவளர இருநிலமடந்தையும் போற்சயப் பாவையும் சீர்த்தனிச்செல்வியும் தன் பெருந்தேவியராகி இன்புற நெடுதியல் ஊழியுள் இடைதுறை நாடும் தொடர்வனவேலிப்படர் வனவாசியும் சுள்ளிச் சூழ்மதிள் கொள்ளிப்பாக்கையும் நண்ணற் கருமுரண் மண்ணைக்கடக்கமும் பொருகடலீழத் தரைசர் தமுடியும் ஆங்கவர் தேவியர் ஓங்கெழில் முடியும் முன்னவர் பக்கல் தென்னவர் வைத்த சுந்தரமுடியும் இந்திரனாரமும் தெண்டிரை ஈழமண்டலமுழுவதும் எறிபடைக் கேரளன் முறைமையிற் சூடுங்குலதனமாகிய பலர்புகழ் முடியும் செங்கதிர் மாலையும் சங்கதிர்வேலைத் தொல்பெருங்காவற் பல பழந்தீவும் செருவிற்சினவி இருபத்தொருகா லரசு களைகட்ட பரசுராமன் மேவருஞ் சாந்திமத்தீவரண் கருதி இருத்திய செம்பொற்றிருத்தகு முடியும் பயங்கொடு பழிமிக முயங்கியில் முதுகிட்டொளித்த சயசிங்கன் அளப்பரும் புகழொடு பிடியல் இரட்டபாடி ஏழரை இலக்கமும் நவநெதிக் குலப்பெரு மலைகளும் விக்கிரம வீரர் சக்கரகோட்டமும் முதிர் படவில்லை மதுரமண்டலமும் காமிடை வளநாமணைக் கோணையும் வெஞ்சினவீரர் பஞ்சப்பள்ளியும் பாசடைப்பழன மாசுணிதேசமும் அயர்வில் வண்கீர்த்தி ஆதிநகரவையில் சந்திரன்றொல்குலத் திந்திரதனை விளை அமாக்களத்துக் கிளையோடும் பிடித்துப் பல தனத்தோடு நிறைகுல தனக்குவையும் கிட்டருஞ் செறிமிளை ஒட்டவிஷயமும்பூசுரர் சேர் நற்கோசலை நாடும் தன்மபாலனை வெம்முனையழித்துவண்டுறை

முற்குளம்பி ஞற்கிளறி மோந்தங்கோர் முக்காலும், பொற்
சுண்ணை மாடிப் புரண்டெழுந்து—நற்சென்னி, நேர்நிறுத்தி
நின்றுதறிக் கங்கைநீ ருண்டனவே; பானிறத்த மால்வெண் பரி.
(பக்கம் 145) எனவும்,

எனவே தனமென் றிராசேந்திர சிங்கனே டின்றணைந்த
கனவே யுடையன் களிப்புக்கண் டாற்கட லேழுமமைந்
தனவே யெனவவன் ருனுதித் தன்றே தொடங்கியென்று
நனவே புணர்திரு வின்களிக் கேதுகொ னல்லனவே

(ப. 122)எனவும் மேற்கூறிய அரசன் மகன் கங்கையும் பூர்வ
தேசமும் கொண்டானகிய இராஜேந்திர சோழனைக் குறித்தும்
பாடப்பட்டிருக்கின்றன.
அன்றியும் 103-ம் பக்கத்து "மேதகு நந்திபுரி மன்னர் சுந்த
ரச்சோழர் வண்மையும் வனப்புந்திண்மையு முலகிற்சிறந்து வாழ்
கெனவே". இவ்வரசன் மகனென்று கருதப்படும் சுந்தரசோழ
பாண்டியனைக் குறிக்கின்றது. அவனை 'பழையாறை நகர்ச் சுந்
தரசோழ'னென்று 146-ம் பக்கத்துக் கூறியுள்ளது.

இப்பழையாறை கும்பகோணத்துக்குத் தென்மேற்கே 5மை
லிலுக் கப்பாலுள்ளது.

மேற்கூறிய அரசர்களன்றிக்கே அநுபமனென்னுமோர் அர
சனைக் குறித்த பாக்கள் சிலவுள:—

சோலைத் தண்டபுத்தியும் இரணசூரனை முரணுகத்தாக்கித்திக்கனை கீர்த்திக்கண லாடமும் கோவிந்த சந்தன் மாவிழிந்தோடத் தங்காத சாரல் வங்காளதேசமும் தொடுகழற் சங்குவொட்டல் மயிபாலனை வெஞ்சமர் விளாகத் தஞ்சுவித்தருளி யொண்டிறல் யானையும் பெண்டிர் பண்டாரமும் நித்தில நெடுங்கடலுத்திர லாடமும் வெறிமலர்த் தீர்த்தத் தெறிபுனற் கங்கையும் அலைகடல் நடுவுட் பல கலஞ்செலுத்திச் சங்கிராமவிஜையோத் துங்கபன்மனகிய கடாரத் தரைசனை வாகையம் பொருகடல் கும்பக்கிரியொடு மகப்படுத் துரிமையில் பிறக்கிய பெருநெதி பெருக்கமும் ஆர்த்தவனகனகர் போர்த்தொழில் வாசலில் விச்சாதிரத் தோரணமும் மொய்த்தொளிர்புனை மணிப்புதவமும் கனமணிக் கதவமும் நிறைசீர் விசையமுந்துறை நீர்ப்பன்னையும் வன்மலையூரெயிற் றொன்மலையூரும் ஆழ்கடலகழ்சூழ் மாயிருடிங்கமும் கலங்கா வல்வினை இலங்காச் சோகமும் காப்புறு நிறைபுனல் மாப்பப்பாளமும் காவலம்புரிசை மேவிலிம்பங்கமும் விளப்பந்துறுடை வளைப்பந்துறும்கலைத்தக் கோர் புகழ்தலைத்தக்கோலமும் திதமாவல்வினை மாதமாலிங்கமும் கலாமுதிர்கடுந்திறல் இலாமுரிதேசமும் தேனக்கவார்பொழில் மானக்கவாரமும் தொடுகடல்க்காவல் கடுமுரட் கடாரமும் மாப்பொருதண்டாற் கொண்டகோப்பரகேசரி பன்மரான உடையார் ஸ்ரீ ராஜேந்த்ர சோழ தேவர்க்கு" * * *



'மேரு நெடுவரை மீது பொருபுலி—சேர வெழுதிய
சோழ—னுரமல—ரணியாளி யனுபமன்—வீரனடி கணையானே',
(பக்கம் 113) 'அனுமபண்டித சோழ—மனுவலவ குலமொழி
வளவா வருளே—யெனவருவரதாமிகவே — யனவரதமுமுனது
தோகை வேறுறுமால்.' (ப-ம் 133)

இரண்டாஞ் செய்யுளி லவனை அநுபம (நிகரிலி) பண்டித
சோழனென்று கூறியிருத்தலால் கங்கைகொண்ட சோழனுகிய
இராசேந்திர சோழனுகலாமென்று தோன்றுகிறது.

பிறகு சோழசக்கிரவர்த்திகளுள் அநகன், அகளங்கன் என்
னும் பெயர்களால் விக்கிரமசோழனைக் குறிக்கின்றன (பக்கம்
178). இவன்றந்தையாகிய குலோத்துங்கனை "மனுநூல் நெறி
யொழுகும் பூழியன்" என்று சிற்சில சாஸனங்களில் வருமாறே
விசேஷித்துக் கூறியிருக்கிறது (ப - ம் 180). வளவநாராயணன்
என்னும் பெயர் இராஜநாராயணன் என்னும் முதல் குலோத்துங்
கன் பெயராயிருக்கலாம். ஏனெனில் சோளநாராயணனென்னும்
பெயரடித்த சில பழம்பொற் காசுகள் கிடைக்கின்றன. அவை
களை இவ்வரசன் காலத்தவையா யிருக்கலாமென்று டாக்டர்.
ஹுல்ட்ஸ் Dr. Hultzsch துரைஎண்ணுகிருர்.

இக்குலோத்துங்கனுக்கு விருதராஜபயங்கரனென்று வே
ருேர் பெயருண்டு. இதனையே சிற்சில விடங்களின் சாஸநங்
களிலும் பரநிருபகாலனென்று மொழிபெயர்த்தெழுதி யிருத்த
லுண்டு. இவ்விரண்டாம் பெயரும் 187-ம் பக்கத்து உபயோ
கப்படுத்தி யிருக்கிறது.

இவ்வரசனை இராசகேசரி குலோத்துங்கன் என்று கூறியுள்
ளோம். இப்பெயரை ராசகண்டீரவன் என்று "மனுமார்க்கம்
ஸ்தாபித்து, கலிகடிந்தவனுகிய" குலோத்துங்கனுக்கு பிரயோ
கித்திருப்பதை பக்கம் 167-ல் காணலாம்.

இவைகளைத்தவிர தொண்டிமான், சிங்களத்தரையன், சேந்
தன் பொன்பற்றிக்காவலன், புகழாரளகேசர், சாளுக்கியன் என்
னும் பல பெயர்களும் ஆங்காங்கு கூறியுள்ளன.

இவ்வுரையில் 169-ம பக்கத்தில் "வேங்கைவன நாடன் விச
யன்வா டைக்கதிப—னெங்கு புகழுதயா தித்தனுக்கு"[6] என்று

6. அதாவது ஸகரத்து பதிலாக ஸகாரமுபயோகித்து விசயன் என்னும் பதத்தில் ஸகரத்தை நீக்கி வாசிக்கவும். விசயவா என்பது இப்பொழுது பெஜ

பதிப்பித்திருப்பதை "வேங்கைவ[ள] நாடன் விசைய(ன்) வாடைக்கதிபன் உதயாதித்தன்" என்று கொள்ளின் "வேங்கை மண்டலத்துக் கதிபதியாய் விசயவாடையில் அரசுபுரியும் உதயாதித்தன்" என்று பொருந்தப் பொருள்படும். ஆயின் இவ்வுதயாதித்தன் பெயரோ விளங்கவில்லை.

இவைநிற்க, இவ்விலக்கணத்துரையாசிரியர் இக்கிரந்த கர்த்தாவின் காலத்தாராதல் வேண்டும் என்று

"பெருந்தேவன் செகம்பழிச்சக்
கடனாக வேகவின் முன்றமிழ் காதலிற் கற்பவர்க்கே"

என்னும் செய்யுட் பகுதிக்கு "பெருந்தேவன் தனது ஆசாரியன் விஷயத்தில் கடமைப்பட்டவனாதலில் அவர் வியாகரணத்துக்குரை நவின்றான்" என்னும் கருத்தைக்கொண்டு ஸ்ரீ மாந்சி.வை. தாமோதிரம்பிள்ளையவர்கள் எழுதியிருக்கிறார்[7]. ஆயின் இவ்வுரையை யுற்று நோக்கின், அநகன், அகளங்கன் என்னும் விக்கிரம சோழனையும் குறித்தருத்தலின் இவர் புத்தமித்திரன் காலத்தவராகார். மேற்காட்டிய பாட்டின் தொகுதிக்கு "தமிழை காதலிற் கற்பவர்க்கு (தெரியுமாறு எழுதக் கற்றுணர்ந்ததான்) கடமைப்பட்டிருத்தலின் எழுதினான்" என்று கொள்வது உசிதம். அப்பொழுது உரையாசிரியராகிய பெருந்தேவனார் புத்தமித்திரர் காலத்தவர் அன்று, விக்கிரமசோழன் காலத்துக்கும் பின்பட்டவர் என்பது பொருந்தும்.

7. பதிப்புரை பக்கம் 24.



16965

## அநுபந்தம்.

### சோழராஜ வம்சாவளி.




நீலகிரி,
1—ஜூன், 1906.

கோ. வேங்கோபராவ்,
அஸிஸ்டெண்டு எபிகிராபிஸ்டு.

---

# நவீன அறிவை நாட்டிற் குரியதாக்கும் வழி.

தமிழ்நாட்டுப் புத்திமான்கள் பூர்வீகத்தில் தாங்கள் கற்ற அறிவை ஜனங்களுக்குப் போதிப்பதற்குச் செய்திருந்த ஏற்பாடுகள் இக்காலத்திலும் நின்று வழங்க இடமில்லாமல் அடிக்கடி பல ராஜ்ய மாறுபாடுகள் ஏற்பட்டுவிட்டன. நமது புத்திமான்

கள் இப்போது கலாசாலைகளிற் கற்கும் அறிவும் மிகவும் மேன்மைபெற்றதாய் புத்தி நுட்பத்தையும் அறிவின் விசாலத்தையும் தருவதாக இருப்பினும், சாமான்யருக்கு அதைத் தெரியும்படி எடுத்துச் சொல்லும்படியான சாதனங்களின்மையால், உயர்தரப் படிப்பைப்பெற்றவர்களுக்கு அது ஜீவனோபாயமாக மாத்திரம் உதவுகின்றதே யொழிய, நாட்டின் மகாஜனங்களுக்கு அது எட்டுகிறதில்லை. உதரபரணார்த்தத்துக்கு மாத்திரம் கற்று சாமான்ய ஜனங்களுக்குள் பரவி வேரூன்றும்படி செய்யப்படாத கல்வி, வேண்டிய அளவுக்குப் பயன்படுகிறதில்லை. வட்டி முடக்கமில்லாமல் பலருக்குக் கொடுத்து லேவாதேவி செய்யப்பட்டாவது, அல்லது லாபம் தரத்தக்க வியாபாரத்துறைகளில் உபயோகப்பட்டாவது வந்தால்தான் ஒருவன் பொருள் பலருக்கு நன்மை பயக்கும். அதுபோல பிறருக்குப் போதிக்கப்படும் கல்விதான் வேண்டிய அளவு நன்மைதரும். ஆகையால் அற்புதமும் அதிசயமும் உள்ள நவீன அறிவைத்தேடி அறிந்தவர்கள் ஜனங்கள் பேசும் பாஷையின் மூலமாய் உயர்தரப் படிப்பைப் பெறாத நம்மவர்களுக்குப் போதித்தல் கடமை. அப்படி சுயபாஷையின் மூலமாக நவீன சாஸ்திரப்பொருள்களை நாட்டு ஜனங்களுக்கு நமது கல்விமான்கள் போதிக்க முயலாவிட்டால், அவ்வித சாஸ்திரப்பொருள்கள் நாட்டார் மனதில் வேரூன்றி வளர்ந்து நாட்டிற்குரியதாகாது. சமீபத்தில் ஐரோப்பிய நாகரிகத்தோடும் கல்வியோடும் பழகிய இதர நாட்டவர் அதிசீக்கிரத்தில் சாஸ்திர ஞானமும் தொழின்முறைகளின் ஞானமும் பெற்றுச் செல்வாக்குப் பெற்றுவிட்டார்கள். அதற்குக் காரணம் உயர்தரக் கல்விபெற்ற சமர்த்தர்கள் சாமான்யர்களுக்கும் அதே சுதேச பாஷையின் மூலமாகப் போதித்ததனால் சில நாட்டார் சாஸ்திரப்பொருள்களை விரைவிற் கற்று பல தொழில்கள் செய்யும் முறைகளிலும் தாங்கள் கற்ற நூதன சாஸ்திர மர்மங்களை உபயோகித்துப் பணக்காரர்களாயும் புத்திசாலிகளாகவும் ஆய்விட்டார்கள். நமது நாட்டிலோ "அக்கரைபாகல் இக்கரை கொழுகொம்பு" என்பதுபோல் கற்றோரின் உபயோகமுள்ள மர்மங்கள் மற்றோருக்கு எட்டாமற் கிடக்கிறது. நமக்கு செல்வமும் செல்வாக்கும் உண்டாகவேண்டுமானால், ஜனங்களின் பேசும் பாஷையின் மூலமாக அவர்களுக்குள் நவீன அறிவு பரவும்படி செய்யவேண்டும். மாஜிக்லான்டர்ன் வேடிக்கைகள்,

52-51-26



நவீன சாஸ்திர சோதனைகள், இவைகளுடன் பிரசங்கங்கள் நமது கல்விமான்களால் ஒழிவுள்ளபோதெல்லாம் செய்யப்படவேண்டும். இங்லாந்தில் ப்ரிட்டிஷ் ஸைன்ஸ்கில்டு, ராயல் ஸொஸைட்டி, ப்ரிட்டிஷ் அஸோஸியேஷன் முதலிய சபையார்களால் சீர்மையில் நவீன அறிவு "நாடொறுமேனியும் பொழுதொருவண்ணமும்" என்பதுபோல் அபிவிருத்திபெற்று வருகிறது. அறிவு மேன்மேலும் சாமான்ய ஜனங்களுக்கு உரியதாகி வருகின்றது. வட இந்தியாவிலும் மாஸிக மனோரஞ்சன், பால்போத் முதலிய சுதேச பாஷாபத்திரிகைகள் மூலமாகவும் தெக்ஷிண டிரான்ஸிலேஷன் ஸொஸயிட்டி (Deccan Translation Society) மூலமாகவும், மிக்க நவீன அறிவு ஜனங்களுக்குள் பரவுகிறது. கல்விமான்கள் கிராமம் கிராமமாக ஓய்வு நாள்களிற் சென்று, நவீன சாஸ்திரப்பிரசங்கங்கள் செய்கிறார்கள். அவைகள் வஸந்தமாலா (கோடைகாலத்துப் பிரஸங்கங்கள்), ஹேமந்தமாலா (பனிகாலத்துப் பிரஸங்கங்கள்), என்ற பலவிதச் சிங்காரமான பேர்களோடு வழங்கிவருகின்றன. வங்காளத்தில் (Indian Association for the Cultivation of Science) சாஸ்திரஸமாஜத்தாரின் உதவியால் நவீன அறிவு சாமான்யர்களுக்குள் பரவிவருகிறது. பாதிரிமார்கள் பல நாடுகளில் "தூங்காததும் சோர்வில்லாததுமான" அன்புடன் சாஸ்திரப்பொருள்களைப் பரவச்செய்கின்றனர். அங்கிலேயர் முதலிய ஐரோப்பிய நாட்டார் தங்கள் நாடுகளில் அறிவு வேண்டிய அளவுக்குப் பரவில்லையே என்று கவலையுறுகிறார்கள். நாம் இதிலும் எத்தனைமடங்கு அதிகமாகக் கவலைப்படவேண்டியது?

இந்த நவீன அறிவை வேற்றுபாஷையின் மூலமாகக் கற்றுக்கொள்ளலும் போதாது. ஒரோரு தேசத்துப் பாஷையும் அந்த அந்த தேசத்தின் தேவைக்குத் தக்கபடிக்கும், சீத உஷ்ண நிலைக்குத் தக்கபடிக்கும், சூழ்ந்திருக்கும் நிலைமைகளுக்குத் தக்கபடிக்கும் (environments) ஜனங்களுக்கு ஏற்றபடி பாஷை அமைகிறதென்று சப்த சாஸ்திர பண்டிதர்கள் கூறுகின்றனர். ஒவ்வொரு பாஷையிலும் பல தலைமுறைகளாக அதற்கு உரியவர்கள் தங்கள் கருத்துக்களைச் சித்திரமாக எழுதிவைத்ததுபோல், பொருத்தமான சொற்றொடர்களால் தங்கள் கருத்து விளங்கும்படி அமைத்துக்கொள்ளுகிறார்களாம். ஆதலால் சுயபாஷையை ஒருமிக்க விட்டுவிட்டு, நாட்டின் பொது அறிவுப்

பயிற்சி இங்கிலீஷைக் கருவியாக சுவீகரித்தல் அசாத்தியம். முன்னோர்கள்பட்ட பாட்டின் பயனையும் அடையாமல், புது மொழியின் சொற்பொருளிணக்கத்தை வேண்டிய அளவு கைப்பற்ற முடியாமலும் வருந்தவேண்டியிருக்கும். ஆகவே சுபாஷையின் மூலமாக அறிவு புகட்டுவது எளிது.

ஐரோப்பாவில் ஒரு நாட்டார் மற்றொரு நாட்டாரை ஜெயித்துவிட்டால், தங்கள் பிரஜைகள் ராஜபாஷையை மாத்திரந்தான் அப்பியசித்து வழக்கத்தில் வைத்துக்கொள்ளவேண்டுமென்றும் ஜனங்களின் சுபாஷையாகிய பேசும் பாஷையைப் பள்ளிக்கூடங்களில் கற்பிக்கக்கூடாதென்றும், தங்கள் பாஷையையே பேசித் தங்களோடு ஒண்ணடிமண்ணடியாகப் போய்விடவேண்டுமென்று நிர்ப்பந்திக்கிறார்கள். கொடுங்கோன்மையாக நடத்துகிறார்கள். பின்லாண்டு நாட்டாரையும் போலாண்டு நாட்டாரையும் ருஷியர் வருத்தப்படுத்துவதும், ஆல்ஸேஸ்லாரைன் நாட்டு பிரான்சியரையும் ஷ்லெஸ்விக்-ஹால்ஸ்டைன் நாட்டாரையும் ஜர்மானியர் வருத்துவதும், ஹங்கேரி நாட்டாரை ஆஸ்திரியா நாட்டார் வருத்துவதும் இதற்கு உதாரணம். காருண்யமுள்ள நமது எட்வர்டு கோமகனாகிய நமது நாட்டில் இவ்வித பாஷாநிர்ப்பந்தங்கள் இல்லை. துரைத்தனத்தாரின் "எட்யுகேஷனல் பாலிஸி" என்கிற சிறு நூலில், நமது அரசாட்சியார் சுதேச பாஷைகளின் அபிவிருத்தியில் மிகவும் சிரத்தையுள்ளவர்கள் என்பதை நன்றாகத் தெரிவித்திருக்கிறார்கள். இந்திய ராஜ்ய கார்யதரிசியவர்கள் மிஸ்டர் மோர்லி Dr. G. U. போப்பு என்பவர் தமிழில் மகாபண்டிதராகப் பேர்பெற்றதின் பொருட்டு அவருக்கு ஏஷியாட்டிக் ஸொஸைடியாரின் பதக்கமளித்து நன்கு மதிப்போடு பேசியதாலே விளங்கும்.

நவீன அறிவைப் பரவச்செய்வதற்கு ஏற்ற கருவியாக சுதேச பாஷையைச் செய்யாத குற்றம் நமதே; காரணம் நமது சோம்பலே; இப்போ சோம்பலாக இருந்தால் பிந்தி மகாஜனங்களிடத்தில் நமக்குச் செல்வாக்கு அற்றுப்போம். ஆதலால் ஜனங்களின் பேசும் பாஷையைக் கருவியாகவைத்துக்கொண்டு அதில் நவீன அறிவை போதிப்பது அவசியம்.

எந்தபாஷையில் எந்த அறிவு நூலைக்கண்டபோதிலும் இது எங்கள் தமிழகத்தாருக்குப் பயன்படும்படி மொழிபெயர்க்க வேண்டும் என்று பார்க்கக்கடவோம். ஒருதோட்டத்தில் இனிய



கனிகளைக் கண்டால் இக்கனிகள் "எங்கள் சாமாவுக்கு வேண்டும்" என்று ஒரு அன்புள்ள தந்தை நினைத்து விலைக்கு வாங்குவதுபோல நாமும் நாம் சம்பாதிக்கும் எவ்வித அறிவையும் நமது உடன்பிறவிகளாகிய தமிழகத்தாருக்குப் பயன்படுத்துவதில் "தூக்கமற்ற சோர்வில்லாத" அன்புடன் முயலுவோமாக.

மொழிபெயர்க்கும் முயற்சி முதலில் கஷ்டமாக இருக்கும். அதற்குச் சோம்பி நன்முயற்சியைக் கைவிடக்கூடாது. விடா முயற்சியைக் கைவிடக்கூடாது. விடாமுயற்சியோடு முயன்றால் சகஜமாக மொழிபெயர்க்கும் வேலை நாளடைவில் எளிதாய்விடும்.

மணிமேகலையில் அறவணவடிகள் தன் சிஷ்யர்களுக்கு ஆசீர்வாதஞ்செய்யும் மொழி "அறிவுண்டாகுக" என்பதாக இருந்தது. அதேமாதிரியாகத் தமிழகத்தாராகிய நாம் நமது சாமான்ய ஜனங்களுக்கும் "அறிவுண்டாகுக" என்று பிரார்த்திப்போமாக.

சுபாஷாபிமானி.

---

# தொல்காப்பியப் பாயிரவிருத்திப் பரிசோதனை

## மறுப்பு நிராகரணம்.

தமிழகத்திற் சண்முக விருத்திப் பரிசோதனை மறுப்பெனப் பெயர்தரித்ததோர் பத்திரிகை வெளிவந்தது. அதிற்பரிசோதனையிற் பொறாமையால் ஏதுவின்றிப்பொய்யாயசிலகாரணங்கள் கூறி வெளிப்படையாகவுங் குறிப்பாகவும் சண்முகவிருத்திக்குவசை கூறியிருப்பதாகப் பரிசோதனைக்கு வசைகூறியிருக்கின்றது. அதனாற்சண்முகனாரிடத்தில் நான் ஏதோ பொறாமைகொண்டிருப்பதாகப் பொருள்படுகிறது. ஒருவர்மீதொருவர் பொறாமைகொள்வதற்கு அவரது கல்வி, செல்வம், உருவம், நிலைமை முதலியன காரணங்களாகும். இவற்றுள் ஒன்றேனும் சண்முகனாரிடத்திருப்பது என்னாற் பொறாமைப்படத் தக்கதன்றென்பது எம்மிருவரையும் அறிந்த கனவான்களியாவருக்கும் நன்கு விளங்கும். ஆகையிற் பரிசோதனையெழுதும்படி யென்னைத்தூண்டியது தமிழ்த் தெய்வமேயன்றிப்பொறாமை முதலியன வல்ல. அன்றியும் விருத்

திகூறுவதைப்பரிசோதனை கூறிற்றன்றிப்பொய்யாக வேறு கூறவில்லை. கூறியிருப்பினன்றோ அவ்வகை பரிசோதனையைச்சாரும்.

மறுப்பிற்சிலவுரையாசிரியர் ஒருவரையொருவர் மறுத்துரையெழுதியிருப்பதாகவும் அவ்வாறெழுதுவது மரபெனவும் அம்மரபுபற்றியமைத்ததிவ்வுரை யெனவும் அவ்வாசிரியரும் நன்றிகொன்றவராகல் வேண்டுமெனவும் எழுதப்பட்டிருக்கிறது. முற்காலத்தில் இவ்வாறுரையெழுதிய வுரையாசிரியர்கள் நச்சினார்க்கினியர் இளம்பூரணர் சேனாவரையர் முற்பட்டோரும் பிற்காலத்திற் சிவஞான முனிவர் முற்பட்டோருமாம். இவ்வாசிரியரெல்லாம் தத்தம் காலத்திலிருந்த ஆசிரியர்களிடத்தில் இலக்கணவிலக்கியங்களை முறையே பயின்று அக்காலத்திருந்தவரசர்களாலும் கல்விமான்களாலும் நன்குமதிக்கப்பட்டவர்கள். அவர்களது மறுப்புகளும் கொள்கைகளும் அக்காலத்திருந்த வித்வத்ஸபைகளில் அரங்கேற்றப்பட்டு காட்டப்பட்டிருத்தல் வேண்டும். திகடசக்கர ஆட்சேபணையினால் கந்தபுராண வரங்கேற்றந் தடைபடவில்லையா? இவ்வாறு ஆட்சேபிக்கப்பட்டுத்தக்க சமாதானஞ் சொல்லப்படாவிடின் அவ்வுரைபோலியென்றே தள்ளப்பட்டது. நச்சினார்க்கினியர் சிந்தாமணிக்கு முதலிற்செய்யப்பட்டவுரை அமணவாசிரியரால் தள்ளப்பட்டு மறுபடி யெழுதியவுரையன்றோ வங்கிகரிக்கப்பட்டது. இவ்வாறிருக்கச் சண்முகனார் எவ்வாசிரியரிடத்துக்கல்வி பயின்றவர்? இவரதுரை யெக்களத்தரங்கேற்றப்பெற்றுள்ளது?

அன்றியும் ஆன்றோருரைகளில் மறைவை வெளியிட்டும் வெளியிட்டிருப்பதைத் தெளிவித்தும் ஆகுபெயரையன்மொழியென்றும் பலபொருளொரு சொல்லை யவ்வவ்விடத்திற் கியையப் பொருள்படுத்தியும், அங்ஙனப்படுத்தாதன வற்றையவ்வவ்விடத்திற் கமைய வகைப்படுத்தியும். இக்காரணங்கள் பற்றியொருவரையொருவர் மறுத்திருக்கின்றார்களே யன்றி, மடல், முடம் என்பன மட்டைக்கும், வளைவுக்கும் பெயரல்லவெனவும். ஏதுவின்றிமலை, நிலம், பூ முதலிய வஃறிணைகளை யுயர்திணையாக்கி யதற்கேற்பச் சில குணகுணங்களைத் தாமே கற்பித்தும், சடமாகிய வருவியொலியைச் சத்தாகிய வேதவொலியென்றும் ஓரெழுத்தை மற்றோரெழுத்தாக்கியும் இவைபோல்வன பல வுபயோகமற்ற விடயங்களால் மேலோருக்கறியாமை நாட்டிய விந்நூலைப்போல மறுத்திலர்.



செய்ந்நன்றி மறக்கற்பாலனவன்று, மறப்பின், எந்நன்றி கொன்றார்க்கு முய்வுண்டா முய்வில்லை யெனப்பொது மறைகூறியதனைப் பரிசோதனையி லெடுத்துக்காட்டி யிருப்பதை யறியாது கூறுவது மறப்பாதலால் இகழ்ந்தது பரிசோதனையன்று.

தந்தமென் மொழிமங்கல மாகாதென்பதற்கு ஆகுமெனச் சில காரணங்களையும் சீரென்ற முதலையுடைய செய்யுளையுங் கூறி, அச்செய்யுளிற் கூறிய மொழிகளும் அவற்றின் உறுப்பும், பொருளும், பண்பும், பிறவும் மங்கலமெனவும், இவ்வினையுடையன மங்கலம் இவ்வினையுடையன மங்கலமெனக்கூறாது மறவினையுறுப்பு மங்கலமாகாதெனக் கூறியதுபோலியாயிற்றெனவுங் கூறினார்.

நன்மை பயப்பன மங்கலம், தீமைபயப்பன வமங்கலம். அன்றியும் சீரென்ற செய்யுளிலெடுத்துக் கூறிய மொழிகளுளிம்மொழியின்மையானும் அம்மொழிகளின் பொருள்களையும் பண்புகளையும் உறுப்புக்களையு மெடுத்துக்கொள்ளச் செய்யுளியை பின்மையானும் பிறவென்ற மிகையா லிம்மொழி யடங்கிற்றெனின் தந்தத்தை யான்றோர்களடையின்றி யாண்டிருத்தல் வேண்டும். அப்படிக்கின்மையானும், பரிசோதனைகூறியதுபோலியன்று. தந்தம்விநாயகராங்கமாதலானும் யானையினுறுப்பாதலானும் மங்கலமெனக் கூறினார். யானையென்னும் மொழிமங்கலச் சொல்லன்றி யதன் பொருளாகிய விலங்கும், அதனுறுப்பும், பண்பும், பிறவும் மங்கலமாகா. மங்கலமெனின், சீர் முதலாக வெடுத்துக்காட்டிய சொற்கள் பல பொருளொருசொற்களாதலால், அம்மொழிகளின் பொருளும் உறுப்பும், பிறவும் மங்கலமாதல் வேண்டும். ஆயின், எழுத்து, பொன், நிலம் உலகம் என்னும் மொழிகளுக்குப் பதிலாக வவற்றின் பொருளாகிய கரும்பொன்னையும் பாலை நிலத்தையும் நரக வுலகத்தையும் சீர் என்பதற்காக யாப்பினுறுப்பையும் நீர் என்பதற்கு அதனுறுப்பாகிய நுரையையும், எழுத்தென்பதற்கு நி. நோ. வீ. சா முதலிய வோரெழுத்தொரு மொழிகளையும், எழுத்தின்றி மொழியின்மையாற் பாட்டியலாரெழுத்தெனப் பகுத்துக் கூறியதுந் தொல்காப்பியச் சூத்திர விருத்தியில் அகரத்தை முதலிற் கூறாது எழுத்தெனக் கூறியது மங்கலநோக்கியெனவு மெழுத்துளடங்கிய அகரமங்கல மன்றெனப் பொருள்படுதலானும் யானையென்றதற்கு அதன் கோசம் யோனி அபானம் முதலிய வுறுப்புக்களையும் மங்கலமாகக் கொள்ளல்வேண்டும். கொள்ளின் ஆசிரியர் கருத்தொடு முரணுமாதலா லடாது.

சீர் முதலிய மங்கல மொழிகளை யடுத்துவருமடையு மங்கலமாகு மென்றனர். இம்மங்கல மொழிகள் முதற்கணிற்றல்

'வேண்டுமென்ப தாசிரியர் கொள்கையே யன்றி, வேறிடத்து நிற்பதாற் பயனென்? இம்மங்கல மொழிகளிடையிலெங்கேனும் வாராத செய்யுளுமுண்டோ? அன்றியும் சித்தியார் முதலாயின நூல்களுள் தந்தம், கோடு, கொம்பு முதலியன நூலுக்கு முதற்கண் வந்ததற்கு அநேக உதாரணங்கள் எடுத்துக்காட்டியிருக்கின்றனர். இந்நூல்களின் ஆசிரியர்கள் மேற்கூறிய தந்தமென்றும் பொருள்படுகிற வமங்கலச் சொற்களை விலக்குவதற்காகவே ஓரிடத்திலாவது தனித்திராது அடைகொடுத்திருக்கின்றார்கள். ஆதலின் இவ்வுதாரணங்களும் எனது கொள்கையையே வற்புறுத்துகின்றன வென்பதை யறிந்திலர்.

கயமுகனை விநாயகப்பெருமான் வேறுறுப்புகளாற் கொல்லாது தந்தத்தாற் சேதித்தமையே அது கொலைத்தொழிலாகிய வமங்கலக் கருவியென்பதற் கத்தாட்சியாயிற்று.

விநாயகக் கடவுளுடைய தந்தத்தை யதமாங்கமெனவும் அதன் வினையை மறவினையெனவும் நான் பழித்ததாகவு மதற்குச் சில நிந்தைகள் கூறிக் கவலுகின்றனர்.

சத்தியப்பொருட் டெளிவெலாஞ் சத்திநிபாதர்க்குய்த் துணர்த்தியதாக மமென்பர் மெய்யுணர்ந்தோர் என்றபடி யாகமநூலாகிய சித்தியார் சத்திநிபாத முத்தருக்கன்றிப் பெத்தருக்கன்று. அவருக்கு மாமெனின் அரைக்குக் கீழுலகேழென்றும் அரைக்கு மேலுலகேழென்றும், உரைக்கலாமெனவும், நரம்போடெலும்பணிந்து கங்காளந் தோண்மேலே காதலித்தானெனவும், சிந்துமென்பொடு சிரத்தொகை தேவர் வெந்த சாம்பரும் கேச முந்திரிக்கும், எனவும் தாமதக்குணத்தனென்பார் சங்கரித்திடலாலெனவும், பார்க்குமிடமெங்கு மொருநீக்கமற நிறைகின்ற பரிபூரணானந்தன் எனவும், பாராதிதனிலுள்ள செயலெலா முடிவிலே யவன் செயலெனவும், பெரியோர்கள் சொல்லியிருப்பதால் எல்லாமவன் வடிவுமவன் செயலுமாகி யமங்கலச்செயலும் அமங்கலப்பொருளுமின்றி மங்கலமாகவே முடியவேண்டுவதை யுணர்ந்த நண்பர் பாயிர விருத்தி 132-வது பக்கத்தில் பிணவினை மங்கலச் செயலாகாதெனச் சொல்லியிருப்பது அச்செயலுமப் பொருளு மவனதல்லவென நினைத்தார்போலும்.

மாணாக்கனுக்குப் பொருண்மலைவன்றிச் சொன்மலைவன்றென்றும், சொன்மலைவென நினைப்பின் பால்கொக்குப்போலிருக்குமென வெண்ணித் துன்புறுவாரை யொப்பரெனக் கூறினர். இந்நூல் பெரும்பாலும் சொன்மலைவு நீக்குங் கருவியன்றிப் பொருண்மலைவு நீக்குங் கருவியன்று. இன்ன பக்குவத்தையுடைய மாணாக்கனுக்குப் பொருண்மலைவெனவும், இன்ன



பக்குவத்தையுடைய மாணாக்கனுக்குச் சொன்மலை வெனவு மறியாதார் கொக்கைப்பார்த்துத் துன்புறுவர். இந்நூல் கற்கத்தகு மாணாக்கனைப் பரிசோதனையிற் கூறினன்.

குணகுணங்களை யறிந்து பயன்றராத மலையையுங் கடலையும் பயன்றருகின்ற கடவுளுக்குவம மாக்கப்படாதென்றதை மறுத்துக் கூறலாமெனவும், அவ்வாறு மேலோர்கள் கூறியிருப்பதாகத் திருமுருகாற்றுப்படை, தேவாரம், திருவிசைப்பா முதலிய வருட்பாக்களிலுள்ள, அறிந்தோர் சொன்மலை, குணக்குன்று, பளிங்கின்றிரண் மணிக்குன்று, கருணைமாகடல், முதலிய பலவற்றை யெடுத்துக் காட்டி யிவ்வாறு கூறியிருப்பதாற்றான் கூறியதுந் தகுமெனக் கூறினர். மனவாக்குக் காயங்களா லறியப்படாமல் உருவமும் அருவமும் உருவாருவமு மிவையன்றியு முள்ளவர் கடவுள். அக்கடவுளது அத்துவாவடிவத்தை யவரருளாலறிந்த சத்திநிபாத முத்தர்கள் பெத்தர்களுய்யும்பொருட்டுக் கூறிக் காட்டுவதற்கு ஒப்புப்பொருளின்மையாற் சொன்மலையொன்றிருப்பி னம்மலையெனவும், கருணைமாகடலொன்றிருப்பினக்கடலெனவும், இவை முதலிய பல வகையா லிப்பொருளுவமமாகக் கூறியதன்றி நண்பர் நினைத்ததுபோலக் கூறியிலர்.

(அறிந்தோர் சொன்மலை யென்பதற்குத் திருமுருகாற்றுப்படை நச்சினார்க்கினிய ருரையைப்பார்க்க)

செந்தமிழமிர்தந் திரண்டெழற்கு முன்னர்ப் பாற்கடல் விடம்போல ஆன்மபோதமாகிய விடம் வெளிப்பட்டுக் கடவுளாலுண்ணப்படுதலா லதுவு நன்மையெனக் கூறினர். ஆன்மபோதமென்பது சர்வான்மாக்களுக்கு நன்மை தீமையை விளக்கிக்கொண்டிருக்கிற சிற்றறிவு. அவ்வறிவு வாசனைப்பழக்கத்தாற் பேரறிவாகவுமாகும். அவ்வறிவு வெளிப்பட்டு நசிப்பதற்குக் காரணங்கள் வேண்டும். அக்காரணங்களொன்றுங் காட்டப்படவில்லை. செந்தமிழமிர்தந் திரண்டெழற்கு முன்னரெனக் கூறியதைக் காரணமாகக் கோடலாதோவெனின் ஆகாது. முன்னரென வெதிர்காலத்தாற் கூறியிருப்பதாலும் அன்றியும் [illegible]டைகள் பசுபோதம் நீக்கிப் பதிபோதங் கொடுக்குமென வாகமநூல் கூறுதலாலும் அவர் கூறியதுபோலியாயிற்று.

கொழுவென்பது ஆயுதம் அல்லது உழுகொழுவெனக் கூறியதில் ஆயுதத்தை விடுத்து உழுகொழுவை மாத்திர மெடுத்துக்கொண்டு அக்கொழுவையுவமமாகக் கூறுவது மரபல்லவெனவும், உவமத்தையும் பொருளையுஞ் சோதித்துப் பார்த்துச் சம்பாவிதம சம்பாவிதமெனக்கண்டு கூறல்வேண்டுவதாலிது சம்பாவிதமல்லவென்று கூறி மறுத்துக் கொழுவென்பது துளையின்

மையானும் நூல்நோக்கப்படுவதன்றுதலானும், தான்றைத்தல் செய்யாவிடினும் தைப்பதாயதுன்னூசி நுழைவதற்கு வழியாக்குவதோர் கோலெனவும் அக்கோலுந் தோற்றுன்னர்கள் ஊசி செல்வதற்கு வழியாக்கிக்கொள்ளுங் கருவியாகிய கூரிரும்பெனவும், அது செல்லாவிடிற் றுன்னூசி செல்லற்கூடாதெனவும், அதுபோலப் பாயிரங்கேட்டாரே நூல்கேட்டல் வேண்டும் முன்னர்க்கேட்டல் கூடாதெனவும், கொழுவுதலாற் கோல்கொழுவெனப் பட்டதெனவுங் கூறினர். அக்கூரிரும்பிற்குக் கொழுவெனவுங் கோலெனவும், பெயரின்மையானும், தோற்றுன்னர்கள் கூரிரும்பினால் கொளுவித்தைப்பதையும் அவ்விரும்பின்றி யூசியாற்றைப்பதையு மறியாது கூறினர்.

கொழுவைக் கோலாக்கிக் கோலைக்கூரிரும்பாக்கி யவ்விரும்பைத் தோற்றுன்னர் புழைசெய்யுங் கருவியாக்கி யக்கருவியைப் பாயிரமாக்கினர். இவ்வாறு பதப்பொருள் படுத்த வெங்ஙனுணர்ந்தனரோ? கொழுவென்பது ஊசித்துளையின்மேலுள்ள கோல்போன்ற கோலென்றனர். அதாவது துன்னூசியையொத்ததோர் நுண்பொருள். அந்நுண்பொருளைக் கொண்டு வழிசெய்து பருப்பொருளாகிய காதுள்ள ஊசியை யதிற் செலுத்தியிடர்ப்படுவதிற் றுன்னர்களுக்குப் போந்த பயன் யாதோ? ஊசித்துளையின்மேலுள்ள கோல்நுண்பொருள். அதைப் பருப்பொருளாகிய பாயிரத்துக்குவமிப்பது பொருத்தமன்று. உருவகவுவமை பற்றியுங் காதல் முதலானவை பற்றியு முவமங்கூறல் வேண்டுமென்ற நண்பர் பொருளையு முவத்தையுஞ் சோதித்துப் பார்த்துச் சம்பாவித மசம்பாவிதமெனக்கண்டு கூறல் வேண்டுமென்றனர். இலக்கண மிவரன்றிபேனையோ ரறியாரென நினைத்தனர்போலும். உவமம் உள்ளுறையுவமம், ஏனையவுவமமென விருவகைப்படும். அவற்றுள் ஏனையவுவமம், வினை, பயன், மெய், உரு என நான்குவகைப்படும். உள்ளுறையுவமம் இவற்றோடு பிறப்பென்பதுஞ்சேர்ந்தைவகைப்படுமென விலக்கணங்கூறினரே யன்றி யுவமத்தையும் பொருளையுஞ் சோதித்துப் பார்த்துச் சம்பாவித மசம்பாவிதமெனக் கண்டுகூறல் வேண்டுமெனக் கூறிலர். அப்படிக்கூறியிருப்பின், புலவுநாறு நீர்நாயெனவும், தன் பார்ப்புத் தின்னுமுதலையெனவும், தலைமகனுக்கும் குன்றுமுட்டிய குரீஇ யெனவும், குறிச்சிபுக்கமானெனவும், மாணுக்கனுக்கு முவமங்கூறியிருப்ப தெவ்வாறு சோதனை செய்தனர்.

(இன்னும் வரும்.)

மதுக்கூர், கோவிந்தசாமிச் சோழகர்



## அங்கம்—5, களம் —5.

இஸ்மேலடில்ஷாவுடன் உடன்படிக்கையைச் செய்துகொண்டு அரசன் அச்சுதராயன் விஜயநகரஞ் சென்று அரசுபுரிந்தனன். ஒருநாள் பாண்டிய நாட்டிலிருந்து சில தூதுவர் வந்து அரசன் சந்திரசேகரன் இறந்தான் என்றும் அவன் குமாரன் குணவீரவர்மன் அரசாளும் வன்மையிலன் என்றும் கூறி விசுவநாதனை யனுப்பும்படி வேண்டிக்கொண்டனர். அப்படியே அரசன் விசுவநாதனை மதுரைக்கு அனுப்பினன். விசுவநாதன் காஞ்சனையோடும் தன்மகன் குமாரகிருஷ்ணப்பனோடும் அவ்விடஞ்சென்று குணவீரவர்மன் பெயராலரசுபுரிந்து அரியநாதனுடன் கலந்து ஆலோசனைசெய்து அந்நாட்டிற்குப்பல நன்மைகளை யிழைத்துவர, வடபால் விஜயநகரத்து அச்சுதராயன் காலஞ்சென்றனன். அவன் குமாரன் வெங்கடாத்திரியின் காலத்தில் மந்திரி சாளுவதிம்மன் சூழ்ச்சிகளால் ராஜ்யத்திற்பல கலகங்களுண்டாக பீஜபூர் சுல்தான் இப்ராஹீம் அடில் படையெடுத்துவந்து நகரை வருத்த நன்னிலைகெட்ட மந்திரி அரசன் வெங்கடாத்திரியையுங் கொன்று தானுந் தற்கொலைபுரிந்துகொண்டனன். அரசகுடும்பத்துப் பிரபுக்கள் சதாசிவராயனையும் ராமராஜனையும் தமக்குத்தலைமையாகக் கொண்டு இப்ராஹீம் அடிலுக்கு ஐம்பதுலக்ஷம் வராகன் கொடுத்துச் சமாதானம் செய்துகொண்டார்கள். ராஜ்யபாரத்தை வகித்த சதாசிவராயன் சிலநாளில் விலகிவிட ராமராஜனே பட்டத்திற்கு வந்தனன். இத்தனை குழப்பங்கள் விஜயநகரத்திலுண்டாகிச் சீர்குலைந்து வருநாளில் விசுவநாதன் மதுரையிலேயே யிருக்கும்படி நேர்ந்தது. பாண்டியநாட்டிற் பல்வளம் பெருகி மாந்தர் இன்புறு நாளில் வெகுநாளாய்ச் சித்தங்கலங்கினவனும் இருந்துமில்லாதவன்போன்ற குணவீரவர்மன் சிவபதஞ்சென்றனன். அப்போது நகரமாந்தர் தமக்கு விசுவநாதனையே அரசனாய் முடி சூட்ட வேண்டுமென்று ராமராஜனுக்கு விண்ணப்பஞ் செயதுகொள்ள அவனும் அவ்விதமே முடிசூட்டுகவென ஜீவராயனையனுப்பினன். ஜீவரான் சில பிராமணோத்தமர்களோடு கங்காஜலத்தையும், காளிகாதேவியையும் அரசசின்னங்களையும் எடுத்துக்கொண்டு மதுரைமாநகரம் வந்து நல்லோரையில் விசுவநாதனுக்கு முடி சூட்டினன். நகரங்களிகூர்ந்தது. அரசனும் தெய்வபக்தியுடன் கி. பி. 1559ஸு முதல் 1563ஸு வரையில் ராஜ்யபரிபாலனஞ் செய்தனன்.

## அங்கம் — 5 களம் — 5.

இடம்—மதுரை சித்திரவிலாஸம். காலம்—காலை.

(விசுவநாதன், குமாரகிருஷ்ணப்பன், காஞ்சனை மூவரும் உரையாட.)

(நேரிசையாசிரியப்பா)

விசுவ. மணிமுடி கவித்த மன்னவ னேவ
அணிமதிற் கூட லடைந்தனம். அந்நாள்,
ஏந்திழை! யிவனை யெழின்மலர்க் கையால்
ஏந்திநீ வந்தனை! யிளவ லுக்கிந்நாள்
ஆண்டுபத் திரட்டி யாயின. வெற்றியைப்
பூண்டதோர்விஜய நகரிற் புகுந்த
கலக்கமுந் துன்பமுங் காதினிற் கேட்டோம்!
விலக்குமா றொருவரும் வேண்டினா ரில்லை.
வேங்கடாத் திரிக்கு விரோதமே செய்து
பாங்குறு வார்க்குயர் பதங்களை வழங்கும்
மந்திரி திம்மன் வஞ்சகங் கண்டு
சிந்தை கலங்கித் திருநக ருள்ளார்
சினந்திடத் திம்மன் சிறுவனைக் கொன்றனன்!
மனங்கொதித் திந்நகர் மாந்த ரிருவகைப்
பட்டன ரென்னப் படையொடு புகுந்து
கிட்டின னிப்ராஹீம்; கெடுமதி யமைச்சன்
எட்டிலக் கம்பொன் னீந்தவ னேக
விட்டனன். ஆயினும் வியனகர்க் குழப்பம்
அடங்கில தென்றவ் வடில்ஷா தன்னையே
தொடங்குக போரெனத் தூண்டினன். அவனும்
வந்தது கண்டு மன்குலத் தவர்கள்
சிந்தைகன் றினராய்த் தீயவன் கொள்ள
ஐம்பதி லக்க மரும்பொன் னளித்துத்
தாம்பதிக் கேகென வவன்றனர்; சென்றான்.
அன்னதோர் காலையி லமைச்சனை யொறுக்க
அந்நக ருள்ளா ரனைவருந் திரண்டு
சதாசிவ னிராம ராயனுந் தந்நகர்ப்
பதாதித் தலைவரைப் பரிந்து வேண்ட
வளைந்தன ரமைச்சன் வளமனை. அவனும்
உளைந்தவர்க் கினிமக் கொருதுணை யிலையென
நிலத்தினிற் கத்தியை நிறுத்தி யதன்மேல்
வல்லுலைப் பாய்ந்து மார்பகங் கிழிய
மாண்டனன்; அந்தோ! வஞ்சகத் தொழிலே



நீண்டிங் கேடெனச் சொல்லுவர், நல்லாய்!
மாநக ரமைதி மன்னிய காலையில்
கோனில னென்ன குடியலா மேற்ப
இராம ராயனை யிறைவ னாயினன்!
விரவிய படையுடன் மேவலன் வருகையும்
அமைச்சன் றீமையு மணிநகர்க் குழப்பமும்
அன்மையுமோ, யானு மந்நக ரிருந்தால்?
மந்திரி செய்த வஞ்சனை யானுந
தந்திரத் தடில்ஷா தாக்குத லாகும்
தம்பொரு டம்முயிர் தம்மனை தமதென
நம்புதலிலராய் நகருளார்க் கெய்திய
விதிகொடி தென்ன வேலைசூழ் பார்த்தகற்
பதிநால் வல்லோன் பர்னே நூனில்
எழுதிய திருப மெதிர்த்தகான் முதலைப்
பழுதிலா நகரும் பழுதுபட் டதென
வருந்த மெய்தினன்.

காஞ்ச. மன்னவ! ஈசன்
கருத்தினை யெவர்கொலோ கடந்திட வல்லார்?

(சிலபிராமணர்களும், ஜீவராயனும் அரியநாதனும் உள்ளே வர.)

ஜீவ. நாட்டினுக் கென்று நல்லறம் புரிந்தது
கூட்டுறும் பயனைக் குறித்திடாக் கோவே!
அறமே புரிந்தனை; ஆதலி னின்பா
லறத்தின் மூர்த்தி யருள்சுரந் தவனாய்
அரசனைக் கொண்டுனக் கரசு தந்தனன்.
விரவிய சீர்குண வீர வர்மன்
மாண்கிது கூறி மதுரை வாசிகள்
வேண்டினா ருன்னை வேந்தெனக் கொள்ள;
மன்னவன் மகிழ்ந்து வான்புனற் கங்கை
நன்னீ ராட்டி நவமுடி சூட்டி
வரும்படி விடுக்க வந்தனன், நண்ப!
அருமறை நவிலு மந்தணர் தம்மால்
புனித மாக்கிய பொன்னருக் கொண்ட
துனிதரும் கூர்வேற் றுர்க்கையும் வந்தனள்!

விசுவ. காக்குந் தொழிலுடைக் கன்னி வந்தனளோ?
நோக்கருண் மாது நோன்பினுற் றனளோ?

(வெளியே ஜனங்கள் கூட்டங்கூடி நின்றார்த்து.)

ஜனங்கள். ஜெய! ஜெய! ராம ராஜ! ஜெய! ஜெய!

விசுவ. வியன்பெரு வீதியில் விழைமொழி யென்னே?

அரிய. மாந்த ருரைப்படி மன்னவ னிராமன்
ஈந்தன னென்ன விருந்களி யெய்தினர் !

விசுவ. நாரணி யிந்த நகர்வந் தாளெனப்
பேருவப் பெய்தினன்.

அரிய. பேசுவன் கேண்மின் !
மேவிய புகழோன் வெற்றிவேற் கிருஷ்ண
தேவன் செங்கோல் செலுத்து நாளையில்
நவராத் திரியெனு நன்னாண் முடிவில்
தவறு தரசனுந் தன்குலக் கிளைஞரும்
கொடிவதில் காக்குங் குமரிமுன் சென்றவ
ளடிபணிந் தலரா லருச்சனை புரிந்து
பகட்டினை நிறுத்திப் பார்ப்பவர் வெருளத்
தகட்டுரு வாய தனிவா ளெடுத்தோர்
வெட்டினிற் கழுத்தை வெட்டிப் பலியிடல்
இட்ட தேவதைக் கினியதோர் பூசை !
வெட்டொன் றிற்றலை வீழ்ந்தப் படாதேல்,
நட்டமுந் துன்பமு நகருக் கெய்தும் !
ஆதலி னிப்பலி யாண்டுகே டோறுங்
காதலி னரசர் கைவிடா தியற்றுவர் !
ஆண்டொரு நாளி லவ்விதப் பூசை
ஈண்டிய காலையில், இறைவன் தேட்டமேற்
சென்று கானகந் திரிந்து,'மைந்நிறக்
குன்றுகால் பெற்றுக் கொண்டலின் முழங்கிக்
கொம்பினுற் ருக்களின் கோடுகண் முறித்தும்
பம்பிய கானிற் பாய்ந்து குளம்பினுற்
பாரினை யெற்றிப் பராக மெழுப்பி
நேர்முக மாக நிற்பது போல
நிற்கும் பகட்டி னேர்மையைக் கண்டனன் ;
விற்குனித் தெய்யும் வேடரைக் கூவி
“வலையினை வீசுமின் ! வளைந்து நெருங்குமின் !
நிலையுறக் கொணர்மின் ! நீவிரிக் கணம்” என
எயினர் வளைந்தனர் ! ஏறெழுந் துறுமி
வயின் வயி னோடி வளைந்தவர் தம்மை
முட்டித் தள்ளி முழங்கு மெல்லையில்,
கட்டிக் கொணர்ந்த கழலோ னிவன்காண் !
வேந்தன் கிருஷ்ணன் வியந்து சூலம்
ஏந்திய கையா ளேற்றிடு நற்பலி
இதுவென நகர மெய்தி, நாளையே
கதுமெனச் சென்று காளிசன் னதியிற்



பலியிடு வோமெனப் பறைபறை வித்தனன்.
வலியிரு பகட்டை வாளினு றனைச்
செகுப்பவ ரெவரெனத் திகைத்தனர் வீரர் !
நகுமிளங் கதிரவ னண்ணிய காலையில்,
ஆயுத சாலையை யடைந்தனன். ஆங்கண்
போயித மான் பொரும்படை துருவி
நின்ற நாதனை நெருங்கித் “தோழ !
இன்றிவண் வந்ததற் கேது காரணம்” ?
விளம்பெனக் கேட்டேன் ; விசுவ நாதனும்
உளம்படு கனவை யுரைத்தனன். அதுவும்
இரவினிற் கண்ட வெனது கனவும்
விரவிய தன்மையால், வியந்தனன் தேவி
கூறிய வண்ணங் கூர்வா ளெடுத்துப்
பாறுசூழ்ந் திட்ட பலியிடஞ் சென்றேம்.
ஆங்க னரச னவலமுற் றவனுய்
ஈங்கிதைக் கொல்வா ரெழுந்தில ரென்று
வருந்துங்காலை, யிவ் வாட்கை வீரன்
திருந்தவே நின்று திகழிரு கொம்பின்
வளைவினிற் படாமல் வாளினைச் சாய்த்து
விளையாட்டாக விலக்கின் கழுத்தைத்
துண்டித் தெறிந்தனன் ; துண்ணென வியந்தார் !
மண்டல புரந்த மன்னவன் களித்தான் !
காளியும் பூசையைக் களிப்புறக் கொண்டாள் !
மீளிமொய்ம் பனுக்கு வெற்றியே யுதவி
என்றும் பிரியா திருந்த தெய்வம்
இன்றிங் கெழுந்தனள் ; ஏமம் படைத்தனன் !

விசுவ. வாய்மையே யுரைத்தான் ; வாகையும் செல்வமு
தாய்தர வந்தன !

(வெளியேஜனங்கள் மற்ருேர்முறை யார்த்து சொக்கலிங்கனை
முன் செலுத்தி.)

தாழ்க்கிலம் ! தாழ்கிலம் !
இன்னே யிறைவற் கெழின்முடி சூட்டத்
துன்னிதி ! போதி !—தோன்றலே ! வாழி

விசுவ. மற்றொரு முறையு மீநகர் மாந்தர்
உற்றுரு மொக்க வுயரொலி கிளப்பினர் !

(சொக்கலிங்கன் உள்ளே வந்து)

சொக்க. வைகைநா டோங்க வந்த பூபதி !
கைகளைக் குவித்துக் கடைப்புற நின்று

பொன்முடி புனைகெனப் புகன்றனர் மாந்தர் :—
தென்னவன் குலத்திற் சிறுவ ரின்மையால்
மன்னவ னிராமன் மதித்த வண்மையே
இன்னே மவுலி யெழிலுறப் புனைக!
ஜனங். (வெளியே)
புனைக! புனைக பொன்முடி புனைக!
நனைக! நனைக! நறும்புனற் கங்கை!
செங்கோல் பெறுக! சிங்கா தனத்தி
லெங்கோ னென்னீ யிருந்தினி வாழி!

விசுவ (சொக்கலிங்கனைநோக்கி)
அவ்வித மாகுக! அணிநகர் மாக்களைச்
செவ்விதி னமர்த்திச் செலுத்துக! போதி!

அரிய. (ஜீவராயனைப் பார்த்து)
நண்பனே! முடிபுனை நன்னாளிது வெனப்
பண்புறு கணிதர் பகர்ந்தனர் கொல்லோ?

ஜீவ. நாளை நன் னாளென நவின்றனர் மேலோர்!

அரிய. வானைபாய்ந் துழக்கும் வண்புன னாட்டின்
மாந்த ரனைவரு மாநகர் புதுக்கிப்
பூந்தார் சூட்டிய பூரண கும்பமும்
பொலம்பா லிகைகளும் பொன்னொளிர் கவரியும்
நலந்திகழ் விளக்கும் நங்கைய ரெடுப்பச்
செய்வன செய்திநீ சேனைத் தலைவ!
மைந்நிகர் களிற்றின் வார்முர சேற்றி
நாளையே முடிபுனை நல்விழா நடத்துமந்
நாளெனச் சாற்றி நகருக் குணர்த்துக!

சொக்க. இத்துணை யாணையை யேற்றேன்! மகிழ்ந்தேன்!
மெய்த்தவ மிருந்தவா!—மேதினி யுள்ளார்
களிப்பர், திளைப்பர், களியாட் டயர்வர்?
ஒளிப்பரு முவகையா லோடித்துள்ளுவர்!
ஆதலின், ஐய! நின் னாணைமேற் கொண்டேன்,
போதுவன். (சொக்கலிங்கன்வெளியேசெல்ல)

விசுவ. கேண்மின்! பொன்முடி புனைந்து
செங்கோ றரித்துச் சேணிலக் குடையிற்
றங்குமா றிருந்து, தந்திரத் தலைவரும்
மந்திரத் தலைவரும் மன்னருஞ் சூழ
இந்திர னிகர்ப்ப விருந்து, மங்கையர்
பல்லாண் டிசைப்பப் பார்ப்பன ராசி
சொல்லா லெழுப்பச் சுருதிநூற் படியே



ஞாலங் காத்தல் மனுவிற் குமாகுமோ?
யானிதற் காளோ? யாமனை கருணையும்
ஆன்றோ ரருளு மமைந்தா லன்றி
என்றிடற் கொண்ணுமோ, இப்புவிப் பாரம்?
சுமையின் றன்மையைச் சொல்லுவன் கேண்மின்!
அமைச்சர் முதலா மவையோர் சொற்படி
நிற்றலும், மாந்தர் நினைத்தவா புரிதலும்
கற்றவர் விதித்த மதியினிற் போதலும்
அறன்வழிச் சேறலும் அதற்கு மாறு
மறன்வழி விலக்கலும் மங்கையர் பாலகர்
மூப்பினர் முதலா மொய்வலி யிழந்தார்க்
காப்பதுங் கள்வரைக் கடிவதுங் காமம்
ஆதிமுக் குற்றமும் அடக்கலு நகரில்
சாதியே தத்தவர் தந்தம் நிலையில்
தவறா தொழுகத் தக்கவா றியற்றலும்
இவரலை படரு மிருங்கடன் மீது
வங்கஞ் செலுத்தி வர்த்தகம் புரிதலும்
எங்கணும் பயிர்த்தொழி லியற்றி வித்தலும்
பிணிபசி நீக்கலும் பெரும்போர் துடைத்தலும்
அணிநகர் வீதி யாவையுந் திருத்தலும்
குளம்பல நிரப்பலும் குடிதனைப் பெருக்கலும்
வளம்பட வாவணம் வகுத்தலும் பற்பல
கைத்தொழில் வளர்த்தலும் கல்வியை வளர்த்தலும்
பொய்த்தலை யுவக்கும் பூரியர் பகைமை
நால்வகை வழியா னலிவுறச் செய்தலும்
மேல்வரு வினையை வினயமா யுணர்த்தலும்
நாற்றிசை மன்னவர் நட்பைக் கோடலும்
வேற்றுமை காட்டும் வேந்தரோ டிறுத்தலும்
இத்துணைச் செயல்களை யிழைத்த லெளிதோ?
சுத்துவா ரிதிசூழ் காசினி புரத்தல்
என்வயி னமைந்தது மீசன் செயலாம்!—
பன்னருந் துணைவர் படைத்ததோள் வலியும்
மன்பதை யன்பும் மாதவத் தோர்கள்
என்பால் வைத்த விரக்கமு மீசன்
அருளுந் தாங்கி யானைமேற் கொள்ளக்
கருதினன்; சபையீர்! காட்டுமி னார்வம்
மணிமுடி தாங்கி மாநிலம்
அணிபெறப் புரக்கும் அரசனைக் காந்தே!
(வெளியே ஜனங்கள் வாத்யகோஷஞ்செய்ய மதுரைப்புலவன்
உள்ளேபிரவேசித்து)

மதுரைப்புலவன். (வாழ்த்து)

வாழ்க! வன்னவர் வையக நின்குடை
வாழ்க! வானவர் மானவர் வாழ்வுற
வாழ்க! நல்லற மாதவ மோங்கிட
வாழ்க! காஞ்சனை மாதொடு வாழ்கவே!

அங்கம்—௩. களம்—௫. முற்றும்,
நீசுவநாதம் முற்றுப்பெற்றது.
சுபமஸ்து.

167615

கவித்தநெடும் புகழ்விசுவ நாதன்சீர்ச் சரிதந்தனைக்
கற்றோர் தங்கள்
செவித்தலத்திற் கினிமைதரச் செந்தமிழி னாடகமாச்
செய்த வென்று
புவித்தலத்திற் கணிதிலக மானதடம் பொன்னிவளம்
பொலியும் பண்ணைக்
கவித்தலரா ஜன்புகலக் கவிமுத்துச் சாமிசெய்து
களித்தான் மன்னே.

---

# பத்திரிகைகளும் புத்தகங்களும்.

சென்ற இரண்டுமாதங்களில் வரப்பெற்ற மாற்றுப்பத்திரிகைகள்:—

சுதேசி: பு 2, இ-53-76; (2) சிங்கைஜனமித்திரன்: பு-3, இ 32-38; (3) நாகை நீலலோசனி: பு-17, இ. 8-12; (4) கோயமுத்தூர் கலாநிதி: பு-26, இ. 10-16; (5) மாதர் மனோரஞ்சினி: பு-8, இ 4-7; (6) விவேகசிந்தாமணி: பு-15, ச. 1-3; (7) வியவசாய தீபிகை: வா-3, ந. 1-2; (8) கிராமபரிபாலினி: மேயீ 16உ; (9) ஸ்ரீ வாணிவிலாஸினி: வா-2, ந. 7-12; (10) விவாகபாநு: வா-5, பு 3-7; (11) செந்தமிழ்: தொ-4, ப ௬.

(12) கோவைசுஜநாபிமானி: பு-1, இ 1-7 ஓர் நல்லவாரப்பத்திரிகை. இது கோயமுத்தூரில் பிரசுரிக்கப்பட்டு வருகிறது.

(13) இந்தியா: பு-1, இ 1-15: இதுவுமோர் வாரப்பத்திரிகை சென்னையில் பிரம்மவாதினி ஆபீஸில் பதிப்பிக்கப்படுகிறது. ஓர் உயர்தரப்பத்திரிகை.

(14) சித்தாந்ததீபிகை: வா-7, ந. 3-4. இதுவோர் ஆங்கில தமிழ்ப்பத்திரிகை மாதம் ஒருமுறை வெளியாவது. மதவிஷயம், தத்துவசாஸ்திரம், சாஸ்திரங்கள், பாஷைகள் முதலானவைகளைப்பற்றிய வியாசங்கள் அடங்கியது. சென்னையிலிருந்து வெளியாவது.

(15) பிரம்மஞானப்பத்திரிகை: வா-1, ந. 1. விஷயம் பிரம்மஞானம். திருவாரூரிலிருந்து வெளியாவது.

(16) சுதேசவைத்தியரத்னம்: விலை ரூ 1 இந்த ஹோமியோபாதிக் பிஸிஷன் எஸ். சந்திரசேகர் அவர்களால் தொகுக்கப்பட்டது. இச்சிறியநூலில் சுமார் 180 உலோகதாவர வினைபொருள்களின் விவரங்களும் குணங்களும், சுமார் 150 ரோகங்களுக்கு வீட்டில் செய்துகொள்ளக்கூடிய சிகிச்சைகளும் கூறப்பட்டிருக்கின்றன. இந்நூல் ஒவ்வொரு வீட்டிற்கும் இன்றியமையாத நூலாகும். (வேண்டுவோர் எமக்கு எழுதிக்கொள்ளலாம்.)

பத்திராசிரியர்.

---

# நோட்டீஸ்.

நமது பத்திரிகைக்கு **Mr. S. V.** இராமச்சந்திரராவ் அவர்களை ஏஜண்டாக ஏற்படுத்தியிருக்கிறோம். மானேஜர் கையொப்பமிட்டிருக்கிற ரசீதை இவரிடமிருந்து பெற்றுக்கொண்டு ஷை யாரிடத்தில் சந்தாவைச்செலுத்தும்படி சந்தாதாரர்களைக்கேட்டுக்கொள்ளுகிறோம். மானேஜர்கையொப்பமிட்ட ரசீதைத்தவிர மற்றரசீது செல்லாது.

**C. S.** முத்துஸாமிஐயர்.
மானேஜர்.

# தமிழகம்.

இது தஞ்சைத் தமிழ்ச்சங்கத்திலிருந்து மாதந்தோறும் வெளிவரும் ஒரு பத்திரிகை. இதன் வருஷ சந்தா இந்தியா பர்மாவுக்கு ரூ. 1—8—0. சிங்கப்பூர், பினாங்கு, முதலான விடங்களுக்கு ரூ. 2—8—0. இப் பத்திரிகை வேண்டுவோர் இதன் மானேஜர் அவர்களிடத்தில் சந்தாவை முன்பணமாக நேரே செலுத்தியாகிலும், அல்லது மணியார்டர் மூலமாயனுப்பியாகிலும் பத்திரிகையைப் பெற்றுக்கொள்ளலாம். பலநண்பர்களின் வேண்டுகோளிற்கிணங்கி மாணாக்கர்களுக்குச் சந்தாவைக் குறைத்திருக்கிறோம். *ஆங்கில கலாசாலையிற் படிக்கும் மாணாக்கர்கள் தமது தலைமை உபாத்தியாயர் மூலமாய் விண்ணப்பம் செய்துகொள்ளுவார்களானால் அவர்களுக்குப் பத்திரிகை ரூ. 1—0—0க்குக் கொடுக்கப்படும். பத்திரிகைக்கு விஷயம் எழுத விரும்புகிறவர்கள் தங்கள் வியாசங்களைப் பத்திராதிபருக்கு அனுப்பக் கோருகிறோம்.

விளம்பரம் போடுவதற்கு வரி யொன்றுக்கு அணா 1. நீடிய காலம் பிரசுரித்து வரவேண்டியவைகளுக்குப் பிரத்தியேக ஏற்பாடு செய்யப்படும்.

**C. S. முத்துஸ்வாமி ஐயர்,**
மானேஜர், தமிழகம்,
தஞ்சை.

---

## புத்தக விளம்பரம்.

இதனடியிற் கண்டிருக்கும் புத்தகங்கள் தஞ்சைத் தமிழ்ச் சங்கத்தில் விலைக்கு அகப்படும். வேண்டியவர்கள் ஷை சங்கக் காரியதரிசிக்கு எழுதிப் பெற்றுக்கொள்ளலாம்.

| | | ரூ. அ. ப. |
|---|---|---|
| 1. | கத்தியசிந்தாமணி, ஸம்ஸ்கிருதவசன காவியம் (வாதீபசிம்மசூரியினால் செய்யப்பட்டது) | 2—0—0 |
| 2. | க்ஷத்திரசூடாமணி, (ஸம்ஸ்கிருதகாவியம்) காவிகோர்கட்டிடம். | 0—15—0 |
| 3. | ஜீவந்தர சம்புகாவியம், ஸம்ஸ்கிருதம் (ஹரிசந்திர மஹாகவி.) | 1—0—0 |
| 4. | தஞ்சை நாயக ராஜவம்சசரித்திரச் சுருக்கம், (தமிழ்) | 0—2—6 |
| 5. | ஸம்ஸ்கிருத நீதிமஞ்சரி, நம்பர் 1. | 0—6—0 |
| 6. | ஸ்வாமிநாதவிஜயம். | 0—1—0 |
| 7. | தொல்காப்பியப்பாயிர விருத்தி. | 2—0—0 |
| 8 | மாலைமாற்று மாலை. | 0—4—0 |
| 9 | சிவக்ஷேத்திர யாத்திரானுகூலம் | 0—4—0 |
| 10. | சுதேஸ வைத்திய ரத்தினம் | 1—0—0 |

தஞ்சைத் தமிழ்ச்சங்கம்,
7—10—05.

**K. M. சிதம்பர ஐயர்,**
காரியதரிசி.